# ஸ்ரீ லங்கா தொழிலாளர்களின் உரிமைகள்
# [illegible]பதமான சிக்கலான நிலை




Asian-American Free Labor Institute

AAFLI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தொழிலாளர் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள்

பதிப்பாசிரியர் :

லொக்குபண்டா பத்தேவெல

ஆதரவு ,

ஆசியா – அமெரிக்கா சுதந்திர தொழிலாளர் நிறுவனம்

*Printed at*

PRINTSTAR

185, Madiwala Road, Udahamulla, Nugegoda.

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்.


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. முன்னுரை | | | |
| 01 | அத்தியாயம் — | இலங்கையில் தொழிலாளர் சக்தி | 01 |
| 02 | அத்தியாயம் — | தொழிற்சங்கங்கள் | 07 |
| 03 | அத்தியாயம் — | சனநாயகமும், அரசியலமைப்பும் | 14 |
| 04 | அத்தியாயம் — | அடிப்படை உரிமைகளும், தொழிலாளர்களும் | 19 |
| 05 | அத்தியாயம் — | அரசியலமைப்புச் சீர்த் திருத்தங்கள் | 57 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொழிற்சங்க நடவடிக்கைகளின் போது தொழிலாளர் கல்வி தொழிலாளர் நலனோம்புகை தொடர்பான நடவடிக்கைகளுக்கு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. அதற்கான காரணம் தொழிற்சங்க அங்கத்தவர்களின் அறிவையும், திறமைகளையும் வளர்ப்பதற்கு தொழிற்சங்கங்கள் கடமைப்பட்டுள்ளமையாகும். இலங்கையில் தொழிற்சங்கங்கள் தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளிலுள்ள ஆரம்பித்துவைக்கப்பட்ட இயக்கங்கள் மூலமே தோன்றின. ஆரம்பக் கட்டத்தில் தொழிலாளர்கள் கல்வி தொடர்பாக கவனம் செலுத்தப்படாததுடன் தொழிலாளர் களின் கடமைகள் யாவை அவர்களின் உரிமைகள் பொறுப்புக் கள் யாவை என்பது தொடர்பாக அவர்களுக்கு அறிவினை வழங்குவதிலுள்ள முக்கியத்துவத்தை அவர்கள் சிறிதளவிலேயே தமது கவனத்துக்கு எடுத்துக் கொண்டனர்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டுகளில் இந்த நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததும், சட்டப்படியானதுமான கடமை பொறுப்புக்கள் உரித்தாகும் நிலைக்கு தொழிற்சங்கங் கள் வளர்ச்சியுற்று இருந்தன. இந்த தொழிற்சங்கங்கள் உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பொருட்டு போராடிய அதே வேளையில் பிற் காலத்தில் கல்வி நடவடிக் கைகளின் மீதும் அவை தமது முக்கிய கவனத்தை செலுத்தின. தொழிற்சங்கங்களை ஒழுங்கமைத்து நிறுவுதல், கலந்துரை யாடல், கருத்து பரிமாறல், தலைமைத்துவம் தொடர்பான தொழிற்சங்க கல்விகள் பற்றிய பலவிதபாட நெறிகளை நடத்தும் பொருட்டு ஆசிய அமெரிக்க சுதந்திர தொழிற்சங்க நிறுவனமானது இலங்கையில் அரசாங்க, தனியார் தோட்டப் பிரிவுகளிலுள்ள பல தொழிற் சங்கங்களுக்கு தனது ஒத்துழைப் பை வழங்கியுள்ளது. அவர்கள் தொழிலாளர்களுக்கு பொது கல்வி அறிவினை வழங்குவது தொடர்பாகவும் தமது தொழில் கள் தொழிற்சங்கங்களின் கடமைகள் என்பன பற்றி அவர்க ளுக்கு ஆழ்ந்த அறிவினை வழங்குவது தொடர்பாகவும் தமது அடிப்படை கவனத்தை செலுத்தினர். நிகழ்காலத்தில் தொழிற் சங்கங்கள் மிகச் சிக்கலானதும் பலம் வாய்ந்ததுமான சவால்களை எதிர்நோக்குவதுடன் சில நாடுகள் சில சேவை களை கட்டாயச் சேவைகளாக பிரகடனம் செய்ததன் மூலம் தொழிலாளர்களின் கருத்துக்களை தெரிவிக்கும், மற்றும் சங்கங்களை அமைக்கும் உரிமைகள் மீதும் எல்லைகள் விதிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. 1971 இல் ஆயுதம் ஏந்திய இளைஞர்கள், பொலிசாரையும் ஆயுதப் படையினரையும் தாக்கிய சந்தர்ப்பம் தொடக்கம் இலங்கையில் வன்முறைகள் தலைத்தோங்கின. சில மாதங்களுக்குள் 1971 ஆம் ஆண்டுக்கலகம் அடக்கப்பட்டது டன் அது சமுதாயத்தின் மீது குறிப்பிடத்தக்கதான பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. எனினும் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளிலிருந்து இந்த நாட்டில் தொடர்ந்தும் நிலவும் சிவில் யுத்தத்தினால் கடந்த 10 ஆண்டுகளாக அவசர காலச் சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ள பொதுமக்கள் பல இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

பெரும்பாலான தொழிலாளர்கள் சனநாயகத்தினதும் தொழிலாளர் உரிமைகளினதும் யதார்த்தத்தை இதுவரை புரியாமலேயே உள்ளனர். இதனால் ஆசியா - அமெரிக்க சுதந்திர தொழிலாளர்கள் நிறுவனத்தினால் நடத்தப்படும் ''சனநாயகமும், தொழிலாளர் உரிமைகளும் தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான வேலைக்களப் பயிற்சிகள் தற்போதைக்கு மிகவும் பொருந்துவதாகும். இது தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பான பொது அறிக்கையாகும். இந்த பிரச்சினைகள் ஏற்பட்ட விதம், அவற்றின் நிகழ்கால நிலைகால நிலைமைகள் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய கட்டளைகள் தொடர்பாக இந்த அறிக்கையின் மூலம் பரிசீலனை செய்யப்படுகின்றது. இந்த ஆய்வுகள் கடந்த கால தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாகவும் தற்காலத்தில் நிலவும் தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஒப்பீட்டு ரீதியில் மேற்கொள்ளப்படுவதுடன் அவற்றை தொழிற் சங்கங்களிலுள்ள அங்கத்தவர்களின் கவனத்துக்கு உட்படுத்த எதிர்பார்க்கின்றேன்.

எல். பி. பெத்தேவெல
ஆராய்ச்சிப் பணிப்பாளர்

444/1, மாதிவெல பாதை
நுகேகொடை
இலங்கை
1994.04.18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 அத்தியாயம்

# இலங்கையில் தொழிலாளர் சக்தி

பொருளாதார ரீதியிலான செயற்பாட்டினில் தொழிலாளர்கள் இரட்டைப் பங்களிப்பினைச் செய்கின்றனர். தொழிலாளர் சக்தியானது உற்பத்தியின் பொருட்டு உபயோகிக்கப்படும் அதே வேளை வருமானத்தைப் பெற்றுத்தரும் மார்க்கமாகவும் விளங்குகின்றது. பயன்படுத்தும் சாதகமாக கருதுமிடத்து உழைப்புச்சக்தி தொடர்பான புதிய புள்ளிவிபரங்களை தற்கால பொருளாதார செயற்பாட்டினை வழிநடத்தும் பூரண பொருளாதார வெளிக்காட்டிகளாக உபயோகித்துக் கொள்ளலாம் என்பதுடன் அதை மற்றைய வழங்கல் உற்பத்தி என்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் உழைப்புச் சக்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் புரிந்து கொள்ளலாம் உதாரணமாக அரசின் திட்டமிடல் மற்றும் பல்வேறு முக்கிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு வேலை வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை எவ்வளவு தூரத்துக்கு உபயோகித்துக்கொள்ளலாம் என்பதை உழைப்புச் சக்தி தொடர்பான புள்ளிவிபரங்கள் மூலம் மதிப்பீடு செய்து கொள்ளலாம். தயார் செய்யப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் பலவித பொருளாதார நடவடிக்கைகளின் பொருட்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக எதிர்கால உற்பத்திகளை திட்டமிடும் பொருட்டோ அல்லது பயிற்சி மற்றும் கல்வித்துறை சார்ந்த எதிர்கால உற்பத்திக் காரணிகளை திட்டமிடும் பொருட்டோ உழைப்புச் சக்தி தொடர்பான புள்ளி விபரங்களை உபயோகிக்கலாம்.

உழைப்புச் சக்தி தொடர்பான புள்ளி விபரங்களை வருமான ரீதியில் எடுத்து ஆராயுமிடத்து பயனுள்ளதும் அர்த்தமுள்ளதுமான தொழில் வழங்கும் திட்டங்களை வழி நடத்துவதற்கும் ஏற்படுத்துவதற்கும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான கொள்கைகளை மதிப்பீடு செய்வதற்கும் தொழிலாளர்களுக்கிடையில் வருமானங்களை பகிர்ந்து செல்வதை உள்ளாய்வு செய்வதற்கும் உபயோகித்துக் கொள்ளலாம். உழைப்புச் சக்தி மீதான மதிப்பீடுகள் மூலம் பொதுவாக நபர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பாற்றலை அளவிடலாம். இத்தகைய மதிப்பீடுகள் சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளோர்கள் தொழிலற்றோர்கள் ஊதியம் பெறாது உழைப்புச்சக்தியை வழங்கும் குடும்ப அங்கத்தவர்கள் பொருளாதார ரீதியில் தமது உழைப்புச்சக்தியை பயன்படுத்தாத நபர்கள் உட்பட முழு சமுதாயத்தையே அடிப்படை இலக்காகக் கொண்டு தயார் செய்யப்பட்டவைகளாய் அமையும். தொழிற் சங்கங்களின் கல்வித்துறை சார்ந்த ஆராய்ச்சிகளின் பொருட்டு உபயோகிக்கப்படும் தரவுகளை உழைப்புச்சக்தி தொடர்பான புள்ளிவிபரக் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவனை 1

பிரதான தொழில் குழுக்களுக்கமைய நிகழ்காலத்தில் துறைவாரியாக தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்களின் பரம்பல்

| தொழிற்குழு | நூற்றுவீதம் |
|---|---|
| சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் முகாமையாளர்கள் | 1.7 |
| தொழில் நிபுணர்கள் | 5.3 |
| நுட்பவியலாளர்கள் அதை சார்ந்த தொழில் புரிவோர் | 3.5 |
| எழுதுநர்கள் | 4.1 |
| விற்பனை சேவை தொழிலாளர்கள் | 8.1 |
| பயிற்றப்பட்ட விவசாய மீன்பிடித் தொழிலாளர்கள் | 31.1 |
| இயந்திரங்களை இயக்குபவர்கள் | 3.5 |
| அடிப்படை தொழில்களில் ஈடுபடுவோர் | 25.5 |
| நுட்பவியலும் அதை சார்ந்த தொழிலாளர்களும் | 13.1 |
| இனங்காணாத உழைப்பாளிகள் | 4.3 |

ஆதாரம் :- சனத்தொகை, புள்ளிவிபர மதிப்பீடுட்த் திணைக்களத்தின் தரவுகளிலிருந்து.

1992 இல் இலங்கையில் மதிப்பீடு செய்யப்பட்ட சனத்தொகை எண்ணிக்கை 17.4 பத்து இலட்சம் ஆகும் என்பதுடன் அதில் 5.16 பத்து இலட்சத்தினர் மதிப்பீடு செய்யப்பட்ட உழைப்புச் சக்தியினராக விளங்கினர். இது மொத்த உழைப்புச் சக்தியினரில் 86.7 வீதத்துக்கு சமனாகும். இதில் 3.60 பத்து இலட்சத்தினர் ஆண்களாவும் மிகுதி 1.56 பத்து இலட்சத்தினர் பெண்களாவும் விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான மற்றைய நாடுகளில் போல இலங்கையிலும் பொருளாதார நடவடிக்கைகளில் ஆண்களே பெரும்பங்கை வகிப்பதுடன் பெண்களின் பங்களிப்பு மிகச் சிறிதளவே என்பது இதன் மூலம் தெரியவருகின்றது. இன்னும் பொருளாதார செயற்பாடுகளாக கருதப்படாத பிள்ளைகளை பராமரித்தல், வீட்டுப் பணிகள் போன்றவற்றில் பெண்கள் ஈடுபட்டுள்ளமையை இதற்கு காரணமாக காட்டலாம். பெண்கள் தமது உழைப்புச் சக்தியினை பல்வேறு துறைகளில் வெவ்வேறு மட்டங்களில் வழங்குகின்றனர். பெருந்தோட்டங்களில் பெரும்பாலாக பெண்களே ஈடுபடுத்தப்படுவதால் மற்றைய துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இத்துறையில் பெண்கள் தமது உழைப்புச் சக்தியினை பெருமளவில் பங்களிப்புச் செய்கின்றனர்.

அட்டவணை 2

ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்-1990

| பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| அரசாங்கத்துறை | 609,750 |
| பகுதி அரசாங்கத்துறைசார் | 708,400 |
| தனியார் துறை | 667,470 |
| தோட்டத்துறை | 394,100 |
| பாரிய கொழும்பு அபிவிருத்தி ஆணைக்குழு - | 96,000 |
| வகைப்படுத்தப்படாத | 85,250 |
| மொத்தம் | 2,560,970 |

ஆதாரம் : இலங்கை மத்திய வங்கி

தொழில் வழங்குவோர்களுக்கு சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களிடமிருந்து சம்பளங்களை பெறுபவர்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை அட்டவணை 2 லிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொழில் வழங்குபவர்களாக அரசாங்கம், பகுதி அரசாங்கத்துறைசார் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அல்லது தோட்டங்கள் (தேயிலை அல்லது இறப்பர்) என்பவற்றை குறிப்பிடலாம். அரசாங்கத்துறைக்கும் பகுதி அரசாங்கதுறைசார் நிறுவனங்களுக்கும், தனியார்நிறுவனங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்களை சேர்த்துக்கொள்கையில் விண்ணப்பத் தாரர்களுக்கு அடிப்படை தகைமைகள் உள்ளனவா என்பதை தீர்மானித்த பின்பு அவர்களுக்கு சம்பளங்களை ஊதியங்களை தீர்மானிக்கும் பொருட்டு பல வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அரசாங்கப் பரீட்சைகள் பல்வேறுபட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்ட திறமைகள் பற்றிய சான்றிதழ்கள் சேவை அறிக்கைகள், என்பவை ஆட்களை தொழில்களுக்கும் சேர்த்துக் கொள்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட முறைகளாக கருதப்படுகின்றன. உழைப்புச் சக்தி வழங்கல் அடிப்படையில் கருதுமிடத்து தோட்டத்துறைக்கே ஏற்புடைய சில தன்மைகளை காணக் கூடியதாக உள்ளது.

இந்திய வம்சவழி தொழிலாளர்களை பிரதானமாகக் கொண்ட உழைப்புச் சக்தியினை கொண்டுள்ள பெருந்தோட்ட துறையானது மற்றைய துறைகளிலிருந்து மாறுபட்டு விளங்கும் விசேட துறையாக விளங்குகின்றது. இத்துறையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் உற்பத்தி நடவடிக்கைகள் போன்ற விசேட காரியங்களின் பொருட்டு உழைப்புச்சக்தியானது கூலி வழங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது இவர்கள் நாளாந்த சம்பளம் பெறும் உழைப்பாளிகள் ஆவர். தொழிலாளர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு தொழில் புரிய வேண்டிய நாட்கள் தோட்டமுகாமைத்துவத்தின் தேவைகளுக்கிணங்கவே தீர்மானிக்கப்படும்.

இம்முறையின் கீழ் ஒவ்வொரு குடும்பங்களும் தமக்கு மேலதிக வருமானங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அக் குடும்பத்தின் மிக இளம் உழைப்பாளி தொடக்கம் முழு குடும்பத்தினரதும் உழைப்புச் சக்தியினை உபயோகித்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

சுதந்திர வர்த்தக வலயம் எனும் கைத்தொழில் பிரதேசமொன்று அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளது. இலங்கையின் மேற்கு கரையோரப் பிரதேசத்தில் அமைந்த இந்த அதிகாரச் சபையின் கீழ் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டான அதிகாரத்தைப் பெற்ற கைத்தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 2 ஆவது அட்டவணையில் காட்டப் பட்டுள்ளபடி இந்த சுதந்திர வர்த்தக வலயத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட உழியர்களில் எண்ணிக்கை 96,000 ஆகும். அதில் 95% மானவர்கள் பெண்களாவர். நாட்டில் விளங்கும் பொது தொழிலாளர் சட்டத் திட்டங்களில் உள்ள உரிமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இவர்களுக்கு இல்லை. ஒன்றுசேரும் உரிமைகள் இவர்களுக்கு இல்லை. இதனால் தமது தொழில்களின் தன்மை அதன் பாதுகாப்பு அல்லது சம்பளங்கள் தொடர்பாக எவற்றையும் அறிந்து கொள்வதற்கான எவ்வித மார்க்கமும் அற்றவர்களாகவே இவர்கள் விளங்குகின்றனர். இந்த உழைப்பாளிகள் தொடர்பான எவ்வித விபரங்களும் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாததால் தமது முழு சக்தியினையும் உபயோகித்து சேவை புரியும் இவர்களுக்கு தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இந்த நாட்டில் நிலவும் தொழில் சட்டங்களின் கீழ் நன்மைகளைப் பெறும் சந்தர்ப்பத்தையும் இழந்துள்ளனர்.

தொழிற் சங்க நடவடிக்கைகளின் போது ஊழியர் கல்விக்கும் நலன்புரி விடயங்களுக்கும் முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. இதற்கான காரணம் தொழிற்சங்கங்கள் அங்கத்தவர்களின் அறிவினை வளர்க்கவும் திறமைகளை வளர்க்கவும் கடமைப்பட்டுள்ளமையாலாகும். இலங்கையில் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துறையிலும் தனியார் துறையிலும் உள்ள தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட இயக்கங்கள் மூலமே தோன்றியது. ஆரம்ப கட்டத்தில் தொழிலாளர்களின் கல்வி தொடர்பாக அக்கறை செலுத்தப்படாததுடன் தொழிலாளர்களுக்கு தமது பொறுப்புக்கள் கடமைகள் தமது உரிமைகள் எவை என்பது பற்றி அவர்களை விழிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் சிறிதளவாகவே மேற்கொள்ளப்பட்டன.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டுகளில் இந்நாட்டில் முக்கியமானதும் சட்டப்படியானதுமான கடமை பொறுப்புக்களை கொண்டு விளங்கும் அளவுக்கு தொழிற்சங்க இயக்கமானது முன்னேற்றமடைந்திருந்தது. இந்த தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு போராடியதுடன் பிற்காலத்தில் கல்விசார் நடவடிக்கைகளிலும் அவை தமது கவனத்தை செலுத்தியன. தொழிற்சங்கங்களை ஒழுங்கமைத்தல் தலைமைத்துவம் போன்ற தொழிலாளர் கல்வி தொடர்பான பலவித கல்வி பாடநெறிகளை நடத்தும் பொருட்டு ஆசிய அமெரிக்க சுதந்திர தொழிற்சங்க நிறுவனங்கள் இலங்கையிலுள்ள அரசாங்க தனியார் பெருந்தோட்ட துறைகளிலுள்ள ,தொழிற்சங்கங்களுக்கு பலவித உதவிகளை வழங்கியது. அவர்கள் அடிப்படை தொழிலாளர்களுக்கு பொது கல்வி அறிவினை வழங்குவது தொடர்பாகவும் தொழில் மற்றும் தொழிற்சங்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகள் பற்றி அவர்களுக்கு ஆழ்ந்த அறிவினை வழங்குவது தொடர்பாகவும் தமது கவனத்தை செலுத்தினர்.

நிகழ்காலத்தில் தொழிற்சங்கங்கள் மிகச் சிக்கலானதும் மிகப் பாரதூரமானதுமான சவால்களை எதிர்நோக்கியுள்ளதுடன் சில நாடுகள் சில தொழில்களை அத்தியாவசிய சேவைகளாகவும் பிரகடனம் செய்துள்ளதுடன் தொழிலாளர்களுக்கு தமது கருத்துக்களை தெரிவிக்கும் உரிமைகள்மீதும் தொழிற்சங்கங்களை அமைக்கும் சுதந்திரத்தின் மீதும் வரையறைகளை விதித்துள்ளன. 1971 இல் ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் பொலிஸாரையும் ஆயுதப் படையினரையும் தாக்கிய சந்தர்ப்பத்திலிருந்து இலங்கையில் வன்முறைகள் மேலோங்கின. ஒரு சில மாதத்துக்குள் 71 ஆம் ஆண்டுக் கலகம் அடக்கப்பட்டதுடன் இது சமூகத்தினர் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. எனினும் எண்பதாம் ஆண்டுகளில் ஆரம்பித்து இதுவரை நிலவரை நிலவும் சிவில் யுத்தத்தினால் கடந்த பத்தாண்டு காலங்களாக அவசரகால சட்டங்களுக்கு அகப்பட்ட சமூகமானது பல இன்னல்களை அனுபவித்து வருகின்றது.

பெரும்பாலான பாட்டாளி மக்கள் சனநாயகத்தினதும் தொழிலாளர் உரிமைகளினதும் யதார்த்த நிலையை இதுவரை புரிந்து கொள்ளாதவர்களாக இருப்பதால் ஆசியா - அமெரிக்கா சுதந்திர தொழிலாளர் நிறுவனத்தால் நடத்தப்படும் ''சனநாயகம் மற்றும் தொழிலாளர்கள் உரிமைகள் தொடர்பாக பயிற்சி வழங்குவோரை பயிற்றுவிக்கும் வேலைகளப் பயிற்சித் திட்டங்கள்'' மிகவும் காலத்துக்கு ஏற்றவைகளாகும். இது இலங்கையில் தொழிலாளர் பிரச்சினை தொடர்பான பொதுவானதோர் அறிக்கையாகும். பிரச்சினைகள் ஏற்பட்ட விதம், அவற்றின் நிகழ்கால நிலைமைகள், தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய கட்டளைகள் என்பன இந்த அறிக்கையில் ஆராயப்படுகின்றன. இந்த ஆய்வில் தற்கால தொழிலாளர் பிரச்சினைகளினதும், கடந்த கால தொழிலாளர் பிரச்சினைகளினதும், தன்மைகள் ஒப்பிட்டுபார்த்து ஆராயப்பட்டுள்ளதுடன் அவற்றை அனைத்து தொழிற் சங்கங்களிலும் உள்ள அங்கத்தவர்களின் கவனத்துக்கு உட்படுத்த எதிர்பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 அத்தியாயம்

# தொழிற்சங்கங்கள்

*1833* இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை அச்சாளர் சங்கம் இந் நாட்டில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கமாகும். *1919* இல் காலனித்துவ ஆட்சிமுறையானது மக்களின் சமூக, அரசியல் வாழ்க்கையில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும் வரை இலங்கையில் தொழிற்சங்க வளர்ச்சியில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை. விசேடமாக பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கை மக்களின் கல்வி நடவடிக்கைகளை விரிவடைய செய்வதன் மூலம் இங்கிலாந்தில் அவர்களுக்கு உயர்கல்வி வசதிகளை பெற்றுக் கொடுத்ததன் மூலமும் சமூக, அரசியல் துறையில் பெரும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினர். இங்கிலாந்திற்கும் சென்ற இலங்கையர்கள் அக்காலத்தில் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் தலையோங்கியிருந்த சமூக, அரசியல்கல்வி மூலம் மறுமலர்ச்சி பெற்றனர்.

*1900* ஆண்டுகளில் பிரித்தானிய தொழிலாளர் இயக்கமானது பிரித்தானிய தொழிலாளர் கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களான பியட்ரிஸ் மற்றும் சிட்னி மெப் எனும் தொழிலாளர்களாக விளங்கிய பொருளாதார நிபுணர்களின் தாக்கத்துக்கு உள்ளாகியது. தமது இலக்குகளை அடையும் பொருட்டு தொழிலாளர் இயக்கங்களால் அடிப்படை அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களை ஏற்படுத்தல் வேண்டும் என்ற மெப்பின் சிந்தனையினால் அந் நாட்டு மக்கள் கவரப்பட்டு ஊக்குவிக்கப்பட்டனர்.

சம்பளத்தை முடிந்தளவு ஆகக் குறைவாக வழங்குவதற்கு தொழில் வழங்குவோர் முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் தொழிற் சங்கங்கள் தோன்றும் எனும் சித்தாந்தம் ஜேர்மன் இனத்தைச் சேர்ந்த சமூகவியல் தத்துவஞானியான கார்ல் மாக்ஸ் என்பவரால் முன்வழங்கப்பட்டது. அத்தகைய சம்பள முறைகளை மாற்றுவதற்கான போராட்டத்தை தொழிலாளர்களால் தனித்து மேற்கொள்ள இயலாதெனவும் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தோர் இதில் தலையிட்டு தொழிற்சங்கங்களுக்கு சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை வழங்குதல் வேண்டும் என்பதையும் மார்க்ஸ் வலியுறுத்திரைர்.

1930 ஆம் ஆண்டுகளில் மெப், மற்றும் கார்ல் மாக்ஸ் எனும் இருவரின் கோட்பாடுகளினால் கவரப்பட்ட இலங்கை தொழிற்சங்கத் தலைவர்கள் நகரப்புறங்களிலும் தோட்டத் துறைகளிலும் உள்ள தேர்ச்சிப்வற்ற தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்காக தொழிற் சங்கங்களை ஏற்படுத்தினார். இக்காலத்தில் பிரதான தொழிற்சங்கங்கள் மெப் அவர்களின் அரசியல் பொருளாதார கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டன. வகுப்பு வாதத்தை அடிப் படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மார்க்ஸ், லெனின் தொழிற்சங்க இயக்கமானது செல்வந்தர்களை எதிர்த்து நின்றது டன் கைத்தொழில் அமைப்புக்களின் நிருவாகத்தை தொழிலாளர் வசம் எடுத்தல் வேண்டும் எனவும் கோசம் எழுப்பியது. எனினும் இத் தொழிற்சங்கங்களுக்கு கேகாலை, இரத்தினபுரி களுத்துறை மற்றும் மாத்தறை இறப்பர் தோட்டங்களில் கடமை புரிந்தோரில் ஒருசிலரேயே சேர்த்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த தொழிலாளர்களை மாக்சிஸ அரசியல் இயக்கத்தில் வைத்துக்கொள்ளும் பொருட்டு காலனித் துவ ஆட்சி முறைக்கும் வகுப்புவாத ரீதியிலான ஏற்றத்தாழ் வுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதும், தொழில் புரியும் நிலையங்களில் மாற்றத்தை கோருவதுமான கட்சி குரல்கள் உபயோகிக்ாப்பட்டன இந்த தொழிற்சங்க இயக்கமானது அப்போது இலங்கையில் இருந்த மற்றைய தொழிற்சங்கங்கள் பின்பற்றிய மெப்ஸ் கோட்பாட்டுக்கு முரனான கொள்கை களையே பின்பற்றியது.

இலங்கை சுதந்திரத்தைப் பெற்றதன் பின்பு சுதந்திர சனநாயக அரசாங்கமொன்று ஆட்சிக்கு வந்ததால் இந்த தொழிற்சங்கமானது காலனித்துவ ஆட்சி முறைக்கு எதிராக குரல் எழுப்புதலை நிறுத்திக் கொண்டது. ஆட்சியேற்ற அரசாங்கமானது தொழிலாளர் வர்க்கத்தினரின் நியாயங் களை ஏற்று அவர்களுக்கு பொருளாதார அரசியல் அடிப்படை யிலான பல சலுகைகளை வழங்கியது. அரசாங்கமானது பொருளாதார வளர்ச்சியிலும் விவசாயத்துறையிலும் சிறு கைத்தொழில் துறையிலும் சேவைத்துறையிலுமான வளர்ச்சி யின் மீதே அக்கறை செலுத்தியது. இதன் பொருட்டு நிலையானதும் நம்பிக்கையுள்ளதுமான நிருவாக முறையொன்று தேவைப்பட்டது. இதற்கிணங்கவே அரசாங்கத் துறையில் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கங்களை நிறுவும் உரிமையை காலனித்துவ நாடுகளின் அரசாங்கங்களுக்கு வழங்குமாறு பிரித்தானிய தொழிலாளர் கட்சி அரசாங்கத்தால் 1931 இன் ஆரம்பக் கட்டத்தில் கட்டளை விதிக்கப்பட்ட போதிலும் 1940 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலேயே இலங்கையில் தொழிற்சங் கங்களுக்கு சட்ட ரீதியிலான அந்தஸ்து வழங்கப்பட்டு அரசாங்கத்துறையில் ஊழியர்கள் தொழிற்சங்கங்களை அமைத்து அவற்றை தமது தொழில் பெயர்களின் கீழ் சங்கங்களாக பதிவு செய்து கொண்டன. தொழில் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக முக்கிய கவனத்தை செலுத்திய அலாகள் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக குறைந்தளவிலான அக்கறையே செலுத்தினர். 1940 ஆம் ஆண்டுகளின் இறுதி கட்டங்களில் அரசாங்கத்துறை சார்ந்த தொழிற்சங்கங்கள் தனியார் துறையிலும் பார்க்க சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

பொது எழுதுனர் சேவை சங்கமானது அட்போது அரசாங்கத் துறையில் இருந்த மிகப் பலம் வாய்ந்ததும், முக்கியமானது மான தொழிற்சங்கமாக விளங்கியது. இதற்கான காரணம் சேவைத்துறையில் எழுதுனர் பதவிகளுக்கு பெருமளவில் ஆட்கள் சேர்க்கப்பட்டமையே ஆகும். மெப் என்டவரின் கோட்பாட்டுக்கு இணங்க நிறுவப்பட்ட இச் சங்கத்தை சிறந்த தலைவர்களே வழிநடத்தினர். சிறு தொழிற் சங்கங்களுடன் இணைந்த இச் சங்கமானது 1947 இல் அதிக சம்பளம் கோரி பெரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது. அரசாங்கத் தை தாக்கும் பொருட்டு இச் சந்தர்ப்பத்தை உபயோகித்த மாக்ஸ் - லெனின் வாதிகள் இந்த வேலைநிறுத்தத்துக்கு தமது ஒத்துழைப்பை வழங்கினர் இந்த வேலைநிறுத்தத்தை அடக்கும் பொருட்டு 1947 25 ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 17 (1) ஆம் பிரிவின் கீழ் அத்தியாவசிய சேவை கள் கட்டளையை அரசு பிறப்பித்ததுடன் வேலை நிறுத்தத்தை வழிநடத்திய பல தலைவர்கள் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்களில் ஒரு தலைவர் பின்பு அரசியலில் புகுந்து இறுதியில் அமைச்சராகவும் பதவியேற்றதுடன் இன்னுமோர் தலைவர் தனியார் துறையில் பிரபல தொழிற் சங்கவாதி தலைவராகவும் விளங்கினார்.

மாக்ஸ் - லெனின் கொள்கைகளை பின்பற்று வோரின் அரசியல் ரீதியிலான தலையீட்டினுல் 1947 ஆம் ஆண்டு வேலைநிறுத்தம் தோல்வியடைந்ததன் காரணமாக அரசாங்கத் துறையிலுள்ள தொழிலாளர்கள் அரசியலிலிருந்தும், புரட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அரசியல் ரீதியிலான சங்கங்களிலிருந்து விலகி தமது தொழில் பிரச்சினைகள் தொடர்பாக மாத்திரம் அக்கறை கொண்டு செயற்பட்டனர். அரசாங்கத் துறையில் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிப்பதற்கான காரணம் அரசாங்கம் பொருளாதார அபிவிருத்தியின் மீது அக்கறை செலுத்திய மையாகும். அரசாங்கத்துறையில் தொழில், தொழில் நுட்ப, விஞ்ஞான துறைகளில் தொழில்புரிந்த பெருந்தொகையான தொழிலாளர்கள் தத்தமது தொழிற்பெயர்களின் கீழ் தொழிற் சங்கங்களை அமைத்துக்கொண்டனர். இதற்கிணங்க 1953 ஆம் ஆண்டளவில் இலங்கையில் அரசாங்கத்துறையைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் மிகவும் வலுவுள்ளவைகளாக விளங்கின.

சுயேட்சையாக இயங்கிய இத் தொழிற்சங்கங்கள் தொழிற் சங்க சம்மேளத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்படத் தொடங் கின. இதன் பொருட்டு ஆலோசனை குழு ஒன்றும் நியமிக்கப்பட்டதுடன் அக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க 1954 இல் அகில இலங்கை அரசாங்கச் சேவை தொழிற்சங்க சம்மேள னம் நிறுவப்பட்டது. இந்த தொழிற்சங்க சம்மேளனம் அனைத்து அங்கத்துவ தொழிற்சங்கங்களினதும் தொழிற் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை காலிமுகத் திடலில் நடத்தப்பட்ட பெரும் கூட்டத்தில் கலந்துரையாடும் பொருட்டு 60 வேண்டுகோள்களாக முன்வைத்தன. இந்த வேண்டு கோள்கள் பிரதம அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அதற்கிணங்க இந்த ஆலோசனைக்குழு அலரி மாளிகையில் உள்ள பிரதம அமைச்சர் மாளிகைக்கு தேனீர் விருந்துக் காக அழைக்கப்பட்டது. எனினும் 1956 இல் பெருந்தேர் தலில் அரசாங்கம் தோல்வியடைந்ததுடன் சோஷலிச கட்சியொன்று புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவியது.

ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற சோஷலிய தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் அதிகாரத்தை கையேற்ற அரசுக்கு வொஸ் மினிஸ்ட்டர் வகையிலான பல பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கினர். புதிய அரசாங்கத்தால் சில வேண்டுகோள்கள் நிறைவேற்றப்பட்டதுடன் மற்றயவை தொடர் பாக பின்பு கலந்துரையாடுவதாக அறிவிக்கப்பட்டது.

அந்த உறுதி மொழி நிறைவேற்றப்படாததால் இணைந்த சம்மேளனத்தைச்சேர்ந்த தொழிலாளர்கள் அமைச்சரவை அலுவலகத்துக்கு அருகில் உள்ள கோர்டன் பூங்காவில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அரசாங்கத்துறையைச் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களின் சக்தியையும் வலுவையும் எதிர்த்த இரண்டு அமைச்சர்கள் அவர்களை தாக்கும் பொருட்டு ஆயுதம் தாங்கிய அணியொன்றை ஏவியதுடன் இதனால் தாக்கப்பட்ட தொழிலாளர்கள் உடல் உளரீதியாக புண்பட்டு அவ்விடத்தை விட்டு பின்வாங்கினர்.

**1958** இல் கோர்டன் பூங்காவில் ஏற்பட்ட சம்பவமும் **1956** இன் இனக்கலவரம் அரசாங்கத்துறையில் தொழிற்சங்க இயக்கத்தின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் அரசாங்கத்துறையில் தொழிற்சங்க இயக்கத்திற் முன்னோடியாக விளங்கிய அரசாங்க எழுதுனர் சங்கம் மூன்று கூறுகளாக பிரிந்தது. எனினும் மற்றைய தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக திகழ்ந்தவுடன் அவற்றுக்கு இடையில் முரண்பாடுகள் தோன்றவில்லை. தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துடன் மோ முரண்பாடுகள் தோன்றவில்லை. தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துடன் மோதாமல் நிதானத்துடனேயே செயற்பட்டன. அச் சங்கங்கள் அங்கத்தவர்களின் வேண்டுகோள்களில் நிறைவேற்றப்படாததும் கலந்துரையாடல்களுக்கு எடுத்துக் கொள்ளப் படாததுமானவை தொடர்பாக மாத்திரம் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டன.

<u>அட்டவணை 4</u>

இலங்கையில் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை

| வகை | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட | 73 | 66 | 63 | 76 | 69 | 77 | 100 | 82 | 83 | 86 | 150 |
| இரத்துச் செய்யப்பட்ட | 53 | 108 | 100 | 187 | 79 | 120 | 54 | 27 | 55 | 140 | 202 |
| செயற்படுபவை | 1189 | 1107 | 1068 | 957 | 948 | 9[illegible]3 | 9[illegible]9 | 1004 | 1032 | 1083 | 1039 |

ஆதாரம்: தொழில் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992 இலங்கையில் நடமுறை ரீதியாக இயங்கிலந்ழ் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1039 ஆகும். இதை 4 ஆவது அட்டவணையில் அவதானிக்கலாம். அதே போன்று அவ் வருடத்தில் நிலையான தொழிலாளர் எண்ணிக்கை 2560970 ஆகும். அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது. அணைத்து துறைகளிலும் தொழிற்சங்க ரீதியில் ஒருங்கிணைந்து செயற்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1.9 ஆகும். என்பதுடன் அனைத்து துறைகளிலும் பெருந்தொகைமூலம் யான தொழிற்சங்கங்கள் இயங்கின என்பதனையும் இதன் அறியலாம்.

இலங்கையில் தொழிற்சங்க அமைப்புக்களிற் வளர்ச்சி இந்த அத்தியாயம் மூலம் மீளாய்வுக்கு உட்படுத்தடபட் டுள்ளதுடன் இந்த மாற்றத்துடன் தோன்றிய தொழிலாளர் பிரச்சினைகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தற்சமயம் இதில் காணப்படும் பெரிய பிரச்சினை அரசியல் தலையீடா கும். இந்த அரசியல் ரீதியிலான தலையிடுகளினால் அத்தியாவசிய சேவை கட்டளைகளை பிறப்பிப்பதற்கு அரசுக்கு நேர்ந்தது. இது தொடர்பாக எதிர்வரும் பந்தி களில் கலந்துரையாடப்படும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை அனுபவ ரீதியாக நன்கு உணர்ந்து எதிர்காலத்தை திறம்பட அமைத்துக் கொள்ளல் வேண்டும். தொழிற்சங்கங்களுக்கிடையில் ஐக்கியத் தையும் சக்தியையும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கான திட்டங்களை நிகழ்கால தலைவர்கள் தயார் செய்தல் வேண்டும். தொழிற்சங்கங்களின் எதிர்கால வளர்ச்சி அத்த கைய நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே தொழி லாளர்கள் சுரண்டலுக்கு உட்படுவதை தடுக்கும் பொருட்டு தொழிற்சங்கத் தலைவர்கள் ஒன்றுபட்டு செயற்படுதல் வேண்டும்.

அனைத்து தொழிலாளர்களையும் ஐக்கியப்படுத்தி அதன் மூலமாக ஏற்படும் சக்தியையும் பலத்தையும் உபயோகித்தே நாம் சமூக ரீதியிலான நியாயங்களை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு முன்நோக்கிச் செல்லல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5

**1987-1992** காலத்துக்குள் ஏற்பட்ட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை கலந்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் வீனான மனித நாள் எண்ணிக்கையும்.

| வருடத்தில் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|
| மொத்தம் | | | | | |
| வேலை நீக்கல்களின் எண்ணிக்கை | 64 | 52 | 116 | 130 | 103 |
| கலந்துகொண்ட தொழிலாளர்: எண்ணிக்கை | 20,206 | 42.843 | 65,937 | 63.762 | 50,013 |
| வீளான மனித நாட்களின் எண்ணிக்கை | 36,501 | 838,808 | 193.666 | 109,098 | 271,311 |
| பெருந்தோட்டத்துறை | | | | | |
| வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | 54 | 45 | 108 | 111 | 86 |
| கலந்துகொண்ட உத்தியோகத்தர் எண்ணிக் | 14.843 | 15,072 | 63,751 | 56,856 | 47,712 |
| வீனான மனித நாட்களின் எண்ணிக்கை | 24,300 | 25.619 | 183,612 | 99,237 | 244.703 |
| வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | 10 | 7 | 8 | 19 | 17 |
| கலந்துகொண்ட தொழிலாளர் எண்ணிக்கை | 5,363 | 27,771 | 2,186 | 6.906 | 2,301 |
| வீணாச்சென்ற மனித நாடகளின் எண்ணிக்கை | 12,201 | 813,269 | 10,054 | 9.841 | 26,608 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 அத்தியாயம்

# சனநாயகமும் அரசியலமைப்பும்

சனநாயகம் தொடர்பான பொது கோட்பாடுகள் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கும் அதை இல்லாமல் செய்வதற்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளதும், சாதாரண பிரஜைகள் என்ற வகையில் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கும் சுதந்திரத்தைப் பெற்றுள்ள மக்களைக் கொண்ட நாடு என்பதையே குறித்து நிற்கின்றன. இதுவே மிகச் சிறந்த அரசியல் சுதந்திரமாகும். சனநாயகத்தின் உறுதியான குறிக்கோள் விசேடமானதும், பிரபல்யமானதுமான இலட்சியங்களை அரசாங்கத்தில் உள்ளடக்கச் செய்து, அரசை மக்களின் எதிர்பார்க்கைகளை சரியாகவும், உரிய முறையிலும் பிரதிபலிக்கும் ஒன்றாக மாற்றுதலாகும்.

சுதந்திரம் அர்த்தமுள்ளதாக விளங்க வேண்டுமாயின் சமுதாய மட்டத்தில் மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் அந்த சுதந்திரம் கிடைத்ததாக வேண்டும். என்பதுடன் அதை அனுபவிக்கவும் மக்களுக்கு சுதந்திரம் இருத்தல் வேண்டும் எதேனும் நாடொன்றில் பிரச்சினைகள் சிக்கல்கள் இருக்கும் போது அந் நாட்டில் சுதந்திரம் இல்லை என்றே கூறுதல் வேண்டும்.

எமது அண்மைக்கால வரலாற்றின் ஆரம்பம் தொடக்கம் இலங்கையில் அரச ஆட்சிமுறை இருந்து வந்துள்ளது. ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற வரலாற்று அறிஞரும், சோசலிச வாதியுமாக கருதப்படுமொருவரின் கோட்பாட்டுக்கு இணங்க கீழைத்தேச சமுதாயத்தை கீர்ப்பாசன சமுதாயம் (Hydraulic Society) எனவே வர் ணித்துள்ளனர். இது சமுதாய மொன்றில் உள்ள மனிதர்கள் தலைவரொருவரின் கீழ் சிறந்த முறையில் நீரினை பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஒன்றுபட்டமையே குறிக்கின்றது. எமது புராதன நீர்ப்பாசன முறைகளை அவதானிக்கும் போது இதன் உண்மையை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆட்சி முறை வெற்றி அடைவ்தற்கான காரணம் அக் காலத்தில் விளங்கிய ஒரேயொரு வலுவான மக்கள் வளத்தை பயனுள்ள முறையில் உபயோகித்துக் கொள்வதில் வெற்றிகண்டமையாகும். இவ்வாறு பார்க்கும் போது இலங்கையில் விளங்கிய அரசாட்சிக்கு ஓர் அடிப்படை இருந்தமையை உணர்ந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அரசர்கள் ஆட்சியின் பொருட்டு அமைச்சர்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொண்ட போதிலும் மக்கள் மீது தமது அதிகாரத்தை சிறந்த முறையில் கையாண்டனர்.

ஐரோப்பிய வரலாற்றின் புதிய யுகத்தின் ஆரம்பத்துடன் அந் நாடுகளில் தேசிய அரசாங்கங்கள் நிறுவப்பட்டன. கீழைத்தேச நாடுகளுக்கான கடல் மாக்கம் திறந்து வைக்கப்பட்டதுடன் ஒல்லாந்தரும், பிரித்தானியரும் கீழைத் தேச நாடுகளில் காலனித்துவ ஆட்சிமுறையை நிலைநாட்ட முயற்சி செய்தததுடன் பிரித்தானிய படையானது அரசியல் ரீதியான சூழ்ச்சிகளின் மூலம் இலங்கையை கைப்பற்றி 17 ஆம் நூற்றாண்டில் தமது ஆட்சியை நிலைநாட்டியது. பிரித்தானியர் நாடுகளை கைப்பற்றி அவற்றை அடிமைப் படுத்தும் நோக்கத்துடன் செயற்பட்ட போதும் விசேடமாக இங்கிலாந்தில் சுதந்திரம் தொடர்பான சிந்தனைகள் ஆரம்பம் தொடக்கம் நிலவிவந்துள்ளது. பிரித்தானிய உயர் குடிப் பிரஜைகள் 1215 இல் 'மெக்னாகாட்டா' அதாவது சுதந்திரப் பத்திரத்தின் மூலம் ஜோன் அரசரிடமிருந்து பல சலுகைகளை பெற்றிருந்தனர். அந்த சுதந்திரப் பத்திரத்தின் 39 ஆவது அத்தியாயத்தின் கீழ் பின்வரும் உறுதிமொழி ஜோன் மன்னரால் வழங்கப்பட்டது.

''உயர் குடிப் பிரஜைகளின் சட்டப்படியான தீர்மானத்தின்படியோ அல்லது நாட்டில் உள்ள சட்டத்தின் படியோ அன்றி எந்தவொரு சுதந்திரப் பிரஜையையும் கைது செய்யவோ, அல்லது சிறைப்பிடிக்கவோ அல்லது நாட்டிலிருந்து வெளியேற்றவோ, அழிக்கவோ கூடாது''

சுதந்திரம் தொடர்பான ஆர்வத்தின் விளைவாக அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு இருபக்கமும் உள்ள நாடுகளில் சுதந்திர கோசங்கள் எழும்பின. இங்கிலாந்தில் சுதந்திரம் தொடர்பான ஆர்வம் ஜோன் லொக் என்பவரால் 1690 இல் ''சிவில் அரசாங்கம்'' எனும் புத்தகம் வெளியிடப்பட்டதன் பின்பே ஏற்பட்டது. பெருமிதமுடை 'உயர் வம்சத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சியாளருக்கு எல்லையற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரங்களை வழங்கியிய முடியாட்ச்சி (மெஜெஸ்டலஸ்) முறைக்கு எதிராகவே அவர் மக்களின் சிந்தனைகளை தூண்டிவிட்டார். சர்வாதிகார மன்னனுக்கு மட்டுமல்ல சுதந்திரம் என்பது அனைத்து பொதுமக்களுக்கும் உரியது என்பது லொக்கின் கோட்பாடாக விளங்கியது.

அமெரிக்காவில் சுதந்திர போராட்டம் தோமஸ் பென் என்பவரால் வெளியிடப்பட்ட கருத்துக்கு இணங்கவே ஆரம்ப மானது. ஆரம்பத்தில் 'பொது பகுத்தறிவு' எனும் புத்தகத் தை வெளியிட்ட அவரின் கோட்பாட்டின்படி ஆட்சி உரிமையானது மன்னனுக்கோ அல்லது உயர் குடியினருக்கோ உரித்தானதல்ல அது பொதுமக்களுக்கே உரித்தானது என்பதா கும்.

அமெரிக்கா சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக 1776 ஜூலை மாதம் 04 ஆம் திகதி அது சுதந்திர நாடாக மாறியதுடன் அதன் பின்பு நிறுவப்பட்ட அமெரிக்க ஐக்கிய இராச்சியமானது இன்னமும் மாற்றமுறாது இருக்கின்றது. அதே போன்று மொன்டெங்கு மற்றும் ருசோல் ஆகிய தத்துவஞானிகளின் கருத்துக்களுக்கு இணங்க பிரான்சிய புரட்சி ஏற்பட்டது. பிரான்சியபுரட்சியின் விளைவாக 1789 இல் மனித உரிமைகள் (The Rights of Man) பிரகடனம் செய்யப்பட்டதுடன் பின்பு இது 1793 இல் நூலாக வெளிவந்தது.

பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றியதன் பின்னர் ஆங்கில சட்டமுறையை நாட்டுக்கு படிப்படியாக அறிமுகம் செய்து வைத்தனர். எமக்கு சுதந்திரத்தை வழங்குவது தொடர்பாக எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கையாக 1833 இல் கோல்புறூக் ஆணைக்குழுவினால் சிபாரிசு. செய்யப்பட்ட நியாயம் பற்றிய அதிகாரப் பத்திரத்தை எடுத்துக் காட்டலாம். இதற்கிணங்க சட்டப்படி நிறுவப்பட்ட நீதிமன்றத்துக்கு நீதிமன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன. உயர் நீதிமன்றமே நாட்டில் உயர்தர நீதிமன்றமாக விளங்கிற்று அதற்கு நூறு வருடங்களுக்குப் பின் டொனமூர் அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கை மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப் படுவதுடன் நடமுறைப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியல மைப்புத் திட்டத்தின் கீழ் இங்கிலாந்தின் வெஸ்ட்மினிஸ்டர் முறையை அடிப்படையாகக் கொண்ட சனநாயக அரசொன்று தோன்றியதுடன் இலங்கை பொதுநலவாய அமைப்பில் அடங்கும் சுதந்திர நாடாக விளங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972 இல் இலங்கையின் முதலாவது சனநாயக குடியரசினால் கீழ்வரும் அறிவித்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

1. இலங்கை சுதந்திரமான இறைமை பொருந்திய நாடாகும்

2. இலங்கை குடியரசு ஓர் தனி நாடாகும்.

3. இலங்கை குடியரசின் இறைமை மக்கள் மீதே உள்ளது. அது மாற்றவியலாத ஒன்றாகும்.

4. மக்களின் இறைமை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரசுப் பேரவையால் செயற்படுகின்றது.

5. தேசிய அரசுப் பேரவை குடியரசின் உயர் நிறுவனமாக விளங்கும் மக்களின் சட்டம் இயற்றும் அதிகாரத்தை செயற்படுத்துவதும் நாட்டின் பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி மூலம் அமைச்சரவை மூலம் செயற்படுத்துவதும் சட்டத்துக்கு இணங்க தேசிய அரசுப் பேரவையால் செயற்படுத்தக்கூடிய தனது அதிகாரங்கள் மற்றும் சலுகைகள் தொடர்பாக அன்றி மக்களின் நீதிமன்ற அதிகாரத்தை சட்டப்படி நிறுவப்பட்ட நீதிமன்றங்கள் உட்பட மற்றைய நிறுவனங்கள் மூலம் செயற் படுத்துவதும் தேசிய அரசுப் பேரவையே.

1978 ஆம் ஆண்டில் இரண்டாவது குடியரசின் அரசியலமைப்பின் முதலாவது அத்தியாயத்திலும் இறையமை தொடர்பாக கோட்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. இலங்கை சுதந்திரம், இறைமை பொருந்திய ஜனநாயக சோஷலிச நாடாகும். இலங்கை, இலங்கை சனநாயகக் சோஷலிச குடியரசு என்று அழைக்கப்படும்.

2. இலங்கை தனி நாடாகும்.

3. இலங்கை குடியரசின் இறைமை மக்கள் மீதே உள்ளது. இந்த இறைமையை மாற்ற இயலாது. இறைமையினுள் ஆட்சி அதிகாரங்கள் அடிப்படை உரிமைகள் வாக்கு உரிமைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. மக்களின் இறைமையை செயற்படுத்தலும் அனுபவித்தலும் இங்கு கீழ்வருமாறு

அ. மக்களின் சட்டமாக்கும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தினாலும் பொது மக்கள் வாக்கெடுப்பின் மூலம் மக்களாலும் செயற்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. நாட்டின் பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரங்கள் மக்களால் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படும் குடியரசின் ஜனாதிபதி அவர்களால் செயற்படுத்தப்படல் வேண்டும்.

இ. சட்டத்துக்கு இணங்க பாராளுமன்றத்தால் செயற்படுத்தக்கூடிய பாராளுமன்றத்தினலும் அதன் உறுப்பினர்களினதும் சலுகைகள், அதிகாரங்கள் தொடர்பாக அன்றி மக்களின் நீதிமன்ற அதிகாரத்தை அரசியலமைப்பினால் ஏற்படுத்தப்பட்டு நிறுவப்பட்ட அல்லது அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது வேறு ஏதேனும் சட்டமொன்றினால் இயற்றப்பட்டு நிறுவப்பட்ட நீதிமன்றங்கள், தீர்ப்பு மன்றங்கள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக பாராளுமன்றத்தால் நடமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

ஈ. அரசியலமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் அடிப்படை உரிமைகள் அனைத்து ஆட்சி நிறுவனங்களாலும் மதிப்பளிக்கப்படல் வேண்டும். மேம்படச் செய்தல் வேண்டும் மேலும் அந்த அடிப்படை உரிமைகள் இனி இங்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ள முறைக்கும் அளவுக்கும் அன்றி வேறெந்த வகையிலேனும் வரையறுத்தல் உரிமையற்றதாகச் செய்தல் ஆகாது.

இலங்கையின் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளவாறு மக்கள் இறைமை கொண்டவர்கள் என்ற தர்க்கமும் அதை மாற்ற வியலாது என்ற தாக்கமும் ஜோன் லொக் (1690) மோமஸ் ஜோன் (1775) ஆகிய தத்துவ ஞானிகளின் நூல்களிலும் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க அவை எத்தகய பழமைவாய்ந்தது என்பதை எம்மால் புரிந்து கொள்ள இயலும். இதனால் 1972, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கள் அந்தந்த காலப்பகுதிகளில் நிலவிய சமூக பண்பாடுகளின் விளைவுகளே என்று தனித்து கூற இயலாது. அவை சட்டமியற்றும் உரிமைகளைக் கொண்ட பாராளுமன்றத்தாலும் தேசிய அரசுப் பேரவையாலும் ஏற்படுத்தப்பட்டவையாகும். அரசியலமைப்புக்களுக்கு மாத்திரம் தனித்து நின்று அமைதியை நிலைநாட்டவோ நியாயங்களை வழங்கவோ சிறந்த அரசாங்கங்களை உருவாக்கவோ இயலாது. குறைபாடுகள் நிறைந்த அரசியலமைப்பையொன்றை சிறப்பாக நிருவாகிப்பதனால் கிடைக்கும் விளைவுகளையும் விட மிக மோசமான விளைவுகள் சிறந்த அரசியலமைப்பொன்றை தவறான முறையில் நிறுவகிப்பதனால் ஏற்படுகின்றது. சனநாயகத்தை பயனுள்ளதாக்கும் பொருட்டு சட்டங்களை இயற்றும், அவற்றை செயற்படுத்தும், நிறைவேற்றும் பொது மக்கள் மிக முக்கியமானவர்களாக அனைவராலும் கருதப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 அத்தியாயம்

# அடிப்படை உரிமைகளும் தொழிலாளர்களும்

__வரலாற்றுப் பின்னணி:__

எமது அடிப்படை உரிமைகள் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளாக வேலைகளின் தன்மை தொழில் வாய்ப்புக்கள் வாழ்க்கைத் தன்மை என்பவற்றில் ஏற்பட்டுள்ள வரலாற்றுரீதியிலான மாற்றங்களை குறிப்பிடலாம். வரலாற்று ரீதியிலான பின்னணியில் இந்த உரிமைகளின் நியாயமான தன்மைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அளவிடுவதற்கும் விசேடமாக நாட்டின் உற்பத்திகளை மேம்படச் செய்வதில் உடல் உள ரீதியாக உழைக்கும் பாட்டாளி மக்களில் வரலாற்றில் அந்த மாற்றங்கள் எவ்வாறு தாக்கத்தை விளைவித்துள்ளன என்பதை அளவிடுவதற்கும் இயலும்.

தொழிலாளர் முகாமைத்துவ தொடர்பு செயற்பாட்டினை புரிந்து கொள்ளும் பொருட்டு எமது சாதனை படைத்த வரலாற்றை மறுபடி அலசி ஆராய்தல் வேண்டும். ''இந்த நாட்டின் வரலாற்று பெருமையை புரிந்து கொள்ளும் பொருட்டு அன்று அமைக்கப்பட்டிருந்த வியக்கத் தக்க நீர்ப்பாசன முறைகளின் வரலாற்று போதுமானதென'' பிரித்தானிய நாட்டின் வரலாற்று ஞானியான சேர் இமர்சன் டெனன்ட் கூறியுள்ளார். இலங்கையில் அமைக்கப்பட்டிருந்த விசாலமான நீர்த்தேக்கங்களுக்கு சமப்படுத்தக்கூடிய நிர்மாணங்களை புராதன காலத்திலேயோ அல்லது தற்காலத்திலையோ வேறெந்த இனத்தவராலாலும் மேற்கொள்ள இயலவில்லை என்பதை அவர் மேலும் வலியுறுத்தி உள்ளார். ஐரோப்பிய நாடுகளில் கூட விவசாய முறைகள் மிகவும் வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்த அக்காலத்தில் நவீன தொழில் நுட்பத்தின் உதவி இல்லாமல் இந் நாட்டின் மனித வலுவையும் திறமைகளையும் சிறந்த முறையில் உபயோகித்து நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன திட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்கள் மூலம் செழிப்பற்ற நிலங்கள் செழிப்புள்ள நிலங்களாக மாற்றப்பட்டன. இந்த ''நீர்வலு சமுதாய'' முகாமைத்துவ செயற்பாட்டினில் தொழிலாளர்கள் தலைவரொருவரின் கீழ் ஒன்றுபட்டதுடன் அந்த தலைவரே அரசரா்க விளங்கினார் இந்த அரசாட்சி முறையின் கீழ் தொழிளாளர்களை திறம்பட ஒருங்கிணைத்து செயற்பட செய்வதற்கு பராக்கிரமபாகு அரசருக்கு இயன்றதுடன் அவர்களுக்கு கிராம அடிப்படையில் நிலங்களை வழங்கி எவருக்கும் பாரபட்சமின்றி நியாயமான முறையில் உரிமைகளை வழங்கியதன் மூலம் நாட்டை ஓர் விவசாய ஏற்றுமதி நாடாக உருவாக்கினார். அந்த யுக்த்தில் இந்த நாட்டிலிருந்து அரிசி, வாசனைப் பொருட்கள் இரத்தினக்கற்கள் முத்து என்பவற்றை எடுத்துச் செல்லும் பொருட்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் புத்தளம் துறைமுகத்துக்கு கப்பல்கள் வந்ததைவரலாற்று புகட்டுன்றது. பராக்கிரமபாகு அரசன் திருப்தியுள்ளதும் தேர்ச்சிப் பெற்றதுமான தொழிலாளர்களின் உதவியுடன் எமது நாட்டை அண்டைய நாடுகளின் வர்த்தக கேந்திர நிலையாக உருவாக்கினார். கிரேக்க நாட்டில் போன்று இலங்கையிலும் மலேரியா எனும் நோய்ப்பற்றி குறிப்பிடப்படாத அளவுக்கு முற்றாக தடுக்கப்பட்டிருந்ததாக மருத்துவரீதியிலான கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த வரலாற்று அறிக்கைகளிலிருந்து எமக்கு கற்றுக் கொள்ளக்கூடியது யாதெனில் எவரேனும் தலைவரொருவர் தமது மக்களின் மனித உரிமைகளை மதிப்பின் அவருக்கு அதன் மூலம் உயர் மதிப்பு கிடைப்பதுடன் அவர் அந் நாட்டை வளம்படுத்த கூடியவராகவும் விளங்குவார்.

17 ஆம் நூற்றாண்டை மறுபடி அணுகி இலங்கையில் முதற் தடவையாக ஏற்பட்ட வேலை நிறுத்தத்தை பற்றி ஆராய்ந்து பார்ப்போம். 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இலங்கை அடிக்கடி ஐரோப்பிய காலனித்து வல்லரசுகளின் மோதல்களுக்கு உள்ளானது. 17 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையின் கரையோரப்பகுதி முதலாவதாக போர்த்துக் கேயரினதும் அடுத்து ஒல்லாந்தரினதும் இறுதியாக ஆங்கிலேயரனிதும் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

போர்த்துக்கேய, ஒல்லாந்து ஆங்கிலப் படையினரை தோற்கடிப்பதில் கண்டி இராச்சியத்தில் போர் வீரர்கள் வெற்றி அடைந்தனர். எனினும் அக்காலக் கட்டத்திலேயே தமக்குப் பின் முடிக்குரிய மன்னனாக விளங்குவதற்கு எவரையும் தோற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்காமல் இராஜாதி இராஜசிங்க அரசன் மரணமடைந்தார். கண்டி இராச்சியத்தின் தலைவர்களுக்கிடையில் இருந்த பகைமை, பொறாமை போட்டி என்பவற்றின் காரணமாக தகுந்த ஒருவரை குடிக்குரிய மன்னாக நியமிப்பதற்கு அவர்களால் இயலவில்லை. பிலிமத்தலாவை அமைச்சர் நாயக்கர் வம்சத்துக்குரிய கல்வி அறிவு அற்ற 18 வயது இளைஞர் ஒருவரை அரசனாக நியமித்தார். நாயக்கர் வம்சத்தினரை புடைசூழ ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் என்று அரசேற்ற இந்த அரசன் சிங்கள சமூகத் தலைவர்களின் வழிகாட்டல்கள் ஆலோசனைகள் என்பனவற்றை சற்றும் மதியாமல் தமது ஆதிக்கத்தை உறுதி செய்து கொண்டதுடன் நாயக்க வம்சத்தினரின் அதிகாரத்தையும், பலத்தையும் நிலைநாட்டிக்கொண்டார். இதன் மூலம் இந் நாட்டின் கலாச்சாரங்களும், மரபு முறைகளும் இந்திய வடிவத்தைக் கொண்டமைத்தன.

1801 இல் தமது மாமனாரின் இரண்டு புதல்விகளை திருமணம் செய்து கொண்ட இவர். தனது மாளிகைக்கு அருகாமையில் வாவியுடன் கூடிய பூங்கா ஒன்றை அமைத்து தருமாறு தொழிலாளர்களுக்கு பொறுப்பாக இருந்த தலைவருக்கு கட்டளையிட்டார். தலைவர் 100 கலைநுட்பவியலாளர்களின் உதவியுடன் குளத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். 1 மாத வேலைக்குபின், அவர்கள் சம்பளம் கேட்டு நின்றனர். அரசர் சம்பளம் செலுத்த மறுத்ததனால் அவர்கள் தமது உபகரணங்களை கைவிட்டு வேலை நிறுத்தம் செய்தனர். இது இலங்கையில் முதற் தடவையாக ஏற்பட்ட வேலை நிறுத்தமாகும். கொடுங்கோலாட்சியாளனான அந்த அரசரால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் தம்மால் அமைக்கப்பட்ட குளத்தின் கரையிலேயே குத்திக் கொல்லப்பட்டனர். அரசர் பொழுது போக்குக்காக மனித கொலைகளில் ஈடுபட்டார், 1814 இல் கண்டி இராச்சியத்தின் நிலைமை தொடர்பாக கொழும்பு பிரித்தானிய தளபதியுடன் கலந்துரையாடிய மேஜர் டேலி அதை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''தற்போது மனித கொலைகளின் எண்ணிக்கை எல்லையற்றதாகும். பொதுமக்கள் உட்பட பௌத்த குருமார்களது உயிரைக் கூட பாதுகாக்க இயலாமல் உள்ளது. அரசனின் இந்த நடவடிக்கைகளினால் ஆத்திரமுற்றுள்ள பொதுமக்களும் தலைவர்களும் கலகம் விளைவிக்க எண்ணியுள்ளனர். அவர்கள் பிரித்தானிய போர் விரர்கள் நேசப் படையினராக வரும் வரை எதிர்பார்த்து உள்ளனர். அரசனின் இத்தகைய கொடூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான கொலைகள் தொடர்பாக நாடெங்கும் வதந்திபரவியது. மக்களும் அரசனை மதிக்காமல் விட்டனர். அவர் நாட்டை நிர்வாகிக்க தகுதியுள்ளவரா என்ற கேள்வியும் எழும்பலாயிற்று. கோபமுற்ற மக்கள் அரசனை கொல்வதற்கு இரு தடவைகள் முயற்சித்த போதிலும் அது வெற்றி அடையவில்லை. அரசனுக்கு மலயாள முஸ்லிம், மலபார், ஆபிரிக்க கூலிப்படையினரே பாதுகாப்பு வழங்கினர். அரசனிடம் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு எகலபொல அதிகாரி பிரித்தானியருடன் இச் சந்தர்ப்பத்திலேயே ஒப்பந்தமொன்றை செய்து கொண்டார். இவ்வாறு சமுதாயத் தலைவர்களுக்கு இடையில் இருந்து ஒற்றுமையின்மையை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை படைச் சக்தியை உபயோகிக்காமல் இராஜதந்திர சூழ்ச்சிகள் மூலம் தம் வசப்படுத்திக் கொண்டனர். கண்டி இராச்சியத்தை பிரித்தானியருக்கு ஒப்படைத்த தலைவர்கள் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு தேவைப்படும் ஏற்பாடுகளை உள்ளடக்கள் கூடிய வகையில் ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டனர். இதற்கிணங்க கண்டி ஒப்பத்தம் 1815 மார்ச் மாதம் 02. ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பின் வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

''இப் பிதேசங்களில் பிரதானிகள், பொதுமக்கள் ஆகியோரால் அனுஷ்டிக்கப்படும் பௌத்த சமயத்தை வணங்குவதற்கு இடமளித்தல் வேண்டும். பௌத்த விஹாரைகள் புனித தலங்கள் என்பன பாதுகாக்கப்படல் வேண்டும். அதிகாரிகள், பிரதானிகளுக்கு தமது பதவிகளுக்கு எற்ப உரிமைகள் சலுகைகள், அதிகாரங்கள், வழங்கப்படல் வேண்டும். எல்லா தரத்திலுமான நபர்களின் சொத்துக்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நடமுறையில் உள்ள சட்டதிட்டங்கள் மரபு முறைகள் பழக்கவழக்கங்கள் என்பவற்றுக்கு ஏற்ப அவர்களது சிவில் உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.'' ''நீர்ப்பரசன யுகத்திலும், மற்றும் கொடூர ஆட்சி நிலவிய யுகத்திலும் பொதுமக்களும் தொழிலாளர்களும் எவ்வாறு செயற்பட்டனர் என்பது பற்றி தெளிவானதொரு விளக்கத்தை மேற்கூறிய வரலாற்றுப் பின்னனி மூலம் எமக்கு அறிந்து கொள்ள இயலும்.

நீர்ப்பாசன ஆட்சிமுறை நிலவிய யுகத்தில் ஆட்சியாளர் பொது மக்களின் உரிமைமகளையும் சுதந்திரத்தையும் பாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்ததுடன் தேர்ச்சிப் பெற்ற தொழிலாளர்களின் சக்தியை பயன்படுத்தி தமது நாட்டை ஏற்றுமதி வர்த்தக கேந்திர நிலையமாகவும் மாற்றினார். அதற்கு மாறாக கொடுங்கோலாட்சி நிலவிய காலத்தில் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு பலவந்தமாக தொழிலாளர்களை ஹிம்சைப்படுத்தி அவர்களது உழைப்பினை சுரண்டிய அரசனுக்கு தனது இராச்சியத்தை பிரித்தானியருக்கு இழக்க நேர்ந்தது. இத்தகையதோர் ஆய்வு மேற்கொள்வதற்கான காரணம் மேற்கூறிய மதிப்பீட்டின் மூலம் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது அடிப்படை உரிமைகளுக்கு இடையில் இடம்பெறும் மோதல்களின் தன்மைகளையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் விளக்கும் பொருட்டாகும்.

இலங்கையின் கடலோரப் பிரதேசங்களுடன் கண்டி இராசசியத்தை இணைத்த பிரித்தானியர் கண்டி ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறினர். இதற்கு எதிராக கெப்பெட்டிபொல வின் தலைமையில் மக்கள் கலகம் விளைவித்த போதும் பிரித்தானியப் படையினர் 1818 இல் ஏற்பட்ட அக்கலகத்தை தமது ஆயுதச் சக்தியினால் அடக்கினர்.

எவ்வாறு இருப்பினும் இந்திய சமுத்திர வலயத்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாக இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி முறை முழுமையாக மாறுபட்டதொன்றாக விளங்கியது. சட்டதிட்டங்களை இயற்றி நிருவாகத்தைப் பலப்படுத்தி இதன் கீழ் நாட்டை பொருளாதார நடவடிக்கைகளில் பயன்படுத்திக் வெற்றி கண்டனர். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை விருத்திச் செய்யும் பொருட்டும் தொழிலாளர்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டும் அவர்கள் கண்டி இராசிசிய சட்டத்தில் நிலவிய கட்டாயம் வேலைகளை செய்விக்கும் ''வேலை முறையை'' ஒழித்தனர் இரண்டாவதாக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் பொருட்டு தேவைப்படும் நிலங்களை மலைநாட்டில் பெற்றுக் கொள்ளும் பொருட்டும் பிரித்தானிய செல்வந்தர்களின் மூலதனத்தை இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்த அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1840, 12 ஆம் இலக்கமும் 1914, 09 ஆம் இலக்கமும் கொண்ட தரிசு நிலை சட்டளையில் சட்டத்தை பிரப்பித்தனர். இதன் கீழ் அவர்களுக்கு இலவசமாகவே காணிகள் கிடைத்தவுடன் இதிலிருந்து பயன்பெறும் நோக்கத்துடன் பிரித்தானிய மூதலீட்டாளர்கள் எமது நாட்டுக்குள் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு உரித்தான சமூக பொருளாதார அமைப்பினுள் நாளாந்த விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வாழ்ந்த மக்கள் சம்பளத்துக்காக தமது உழைப்புச் சக்தியினை வழங்கி அடிமை கூலிக்காரர்களாக வாழ விரும்பமாட்டார்கள் என்பதை பிரித்தானிய முதலீட்டாளர்கள் உணர்ந்து கொண்டனர். இதனால் தோட்டங்களில் வாழ்ந்து தமது உழைப்புச் சக்தியினை வழங்கக் கூடிய தென் இந்திய தொழிலாளர்களை பெற்றுத் தருமாறு பிரித்தானிய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர். இதற்கிணங்க 1826 இல் தென் இந்திய தொழிலாளர்களை வரவழைத்து அவர்களை தோட்டங்களில் அமர்த்தினர்- இவர்களுக்கு தங்கும் பொருட்டு லயின் அறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் இவர்களுக்கான உணவு உடை என்பன தோட்டத்து முகாமைத்துவத்தால் வழங்கப்பட்டது.

செழிப்பரன நரடொன்றில் சௌகரியமாக வரழ்வதற்கான வசதிகள் வழங்கப்படும் என ஆசை வார்த்தைகள் கூறப்பட்டு அவர்கள் இங்கு அழைத்து வரப்பட்ட போதிலும் யுத்தமொன்றில் பிடிக்கப்பட்ட போர்க் கைதிகள் போலவே அவர்களுக்கு இங்கு வாழ வேண்டியதாயிற்று. தாம் பிறந்த நாட்டை விட்டு அயல் நாடொன்றில் இத்தகைய நிலைமையிலான தொழிலொன்றை நாடிச் செல்வதற்கு சுதந்திரமான மனிதனொருவன் விரும்புவான என எம்மால் நம்ப இயலாது. இவர்களுக்கு எதிர்பயர்த்ததுக்கும் முரணான வாழ்க்கையை எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

இலங்கையில் விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட காலனித்துவ பொருளாதார முறை குறிப்பிடத் தக்க காரணமாய் அமைந்தது என்பதை எம்மால் மறுக்க இயலாது. இவற்றில் மிக முக்கியமானவை பலநோய்கள் தடுக்கப்பட்டு மரண விகிதாசாரம் குறையும் அளவுக்கு சுகாதார வசதிகள் வழங்கப்பட்டமையும் கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட்டமைவுமாரும் கல்வி வசதிகளை அதிகரிக்கப்பட்டமையும் கல்வி நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டமையும் அரசாங்கச் சேவையில் சேள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டமையும் அரசியல் அதிகாரங்கள் படிப்படியாக வழங்கப்பட்டமையும் காரணமாக மக்களது வாழ்க்கையில் சமூக, பொருளாதா ரீதியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டதுடன் தன்னம்பிக்கை உடையதும் அரசியலில் தன்னம்பிக்கை கொண்டதுமான சமுதாய மொன்று உறுவாயிற்று. ஆங்கில சட்ட முறைகளை நாட்டின் அபிவிருத்தியுடன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. இவற்றில் மிக முக்கியமான சீர்த்ருத்தம் நியாயம் காணுதல் தொடர்பாக அதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரப் பத்திரமாகும். சோல்புறாக் குழுவினால் சிபார்சு செய்யப் பட்ட இந்த அதிகாரப் பத்திரத்துக்கு இணங்க உயர்நீதிமன்றம் மிக உயர் நீதிமன்றமாக கருதப்பட்டதுடன் ஆளுனரின் அதி காரங்களுக்கு அப்பாற்பட்ட நீதிமன்றங்களுக்கு நீதி மன்ற அதி காரங்கள் வழங்கப்பட்டன. டொனமூர் அரசியலமைப்புத் திட்டத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவை யொன்றை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பொதுமக்களுக்கு வழங் கப்பட்டது. சோல்பரி அரசியலமைப்புத் திட்டத்தினால் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதுடன் வெஸ்மினிஸ்ட்டர் சனநாயக முறையை அடிப்படையாகக் கொண்ட பாராளுமன்ற முறையொன்றும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. அந்த பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் உரிமை அரசி யல் சலுகைகளைக் கொண்ட மக்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டது.

காலனித்துவ ஆட்சி முறை எமது நாட்டுக்குநன்மைகளையே விளைவித்தன என முற்றுமுழுவதுமாக கருத இயலாது. இத னால் பல சமூக அமைப்புக்களுக்கும் பெரும் தடைகளே ஏற் பட்டன. எவ்வாறு இருப்பினும் இதனால் மக்களுக்கு கிடைத்த நன்மைகள் அதிகமாகும். இவற்றில் சில நாம் எதிர்பாராத பயன்களாகும். காலனித்துவ ஆட்சி வல்லரசுகள் எமக்கு வழங் கிய நன்மைகள் ஒரே சம நிலையில் இருக்கவில்லை. நிருவாக, சுகாதார, கல்வி நடவடிக்கை நடவடிக்கைகளை நியாயமான முறையில் மேற்கொண்டுள்ளதையும் அரசியல் நிருவாக முறை களை ஓர் நிரந்தர கட்டமைப்புக்கு இணங்க விருத்தி செய் துள்ளதையும் அவதானிக்கையில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் போன்றவர்களை விட ஆங்கிலேயர்கள் சிறந்தவர்களாலர் என கருதலாம். பிரித்தானியரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அரசியல். சட்ட ரீதியிலான நிறுவனங்களை அடிப்படை புரட்சி யாளர்களைத்தவிர வேறு எவரும் நிராகரிக்க மாட்டார்கள்.

## அடிப்படை உரிமைகள்

எமது அண்மைக்கால வரலாற்றை ஆராயும் போது இது வரை நிகழ்ந்துள்ளபாரிய உயிர் அழிவுகள் 2 ஆம் மகா யுத்தத் திலேயே ஏற்பட்டுள்ளது. இது தமது இனத்தின் புனிதத்தை யும், அரசியல் செல்வாக்கையும் உறுதி படுத்தும் மூட நம்பிக் கையில் மற்றைய இனத்தவர்களை கீழ்படியச் செய்யும் நோக் கத்துடன் பாசிசவாதி சர்வாதிகாரி ஆட்சியாளர்களால் ஆரம் பிக்கப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவரை நாம் அறிந்திராத முறைகளை உபயோகித்து இலட்சக் கணக்கான அப்பாவி மக்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இவ்வாறுயுத்த பீதி உலகெங்கும் பரவியிருந்த காலத்தில் ஐரோப்பிய அறிவுச் சபையானது அந்த கொடூர தாக்குதல்களை அடக்கும் பொருட்டு மனித உரிமைகளை காப்பாற்றுதல் வேண்டும் என எண்ணியது. 1948 இல் ஐரோப்பாவின் ஒற்றுமைக்காக இயக்கத்தின் சர்வதேச குழு ஹெக் நகரத்தில் கூழுமியது. இதன் தலைமைத்துவம் இங்கிலாந்தின் போக்கள தளபதி சேர் வின்சென்ட் சார்ச்சிலால் ஏற்க்கப்பட்டது. இந்த சம்மேளத்தின் இறுதியில் பிரதிநிதிகளின் ஏகமனதான தீர்மானத்தின்படி நான்கு தீர்மானங்கல் நிறைவேற்றப்பட்டன அவற்றுள் இரண்டு கீழ்வருமாறு.

1. சிந்திக்கும் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் நூல்கள் உப்பட கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் அரசியல் ரீதியில் எதிர்கருத்துக்களை தெரிவிக்கும் சுதந்திரம் என்பவற்றை உறுதிப்படுத்தும் மனித உரிமைகள் தொடர்பான உரிமைப் பத்திரமொன்று இநத்தல் வேண்டும்.

2. இந்த உரிமைப் பத்திரத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு போதியளவு அதிகாரங்களைக் கொண்ட நீதிமன்றமொன்று இருத்தல் வேண்டும்.

1948 டிசம்பர் மாதம் 10 ஆந் திகதி ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தினால் கீழ்வருமாறு வாசிக்கப்படும் அனைத்து மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டது.

> ''அனைத்து மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை எல்லா இனத்தவர்களினதும் நலனுக்காக இயற்றப்பட்டதாகும். எனவே அனைத்து நபர்களும் சமுகத்தினரும் அனைந்து பிரிவுகளும் இந்த நியமத்தை கருத்திற் கொள்ளுதல் வேண்டும். இதை கற்பிப்பதன் மூலம் மற்றலருக்கு இது தொடர்பாக புரியவைப்பதன் மூலம் இதை மேலும் வலுவடையச் செய்தல் வேண்டும். இந்த உரிமைகளையும் சுதந்திரத்தையும் தேசிய சர்வதேச அடிப்படையில் ஏற்றுக் கொள்ளும் பொருட்டு அனைத்து முற்போக்கான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். அங்கத்துவ நாடுகளின் பொது மக்களாலும் அந்த நாடுகளின் அதிகாரப் பிரதேசங்களில் உள்ள மக்களாலும் இந்த உரிமைகல் ஏற்றுக் கொள்ளப்படுதலும் அவற்றை பின்பற்றுதல் வேண்டும். அதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நியமம் அனைத்து மக்களுக்கும் வாழ்வதற்கான உரிமையையும் சட்டத்தின் முன் எவரும் சமானானவர்கள் என்பதையும் கூட்டங்கள் கூடும் சங்கங்களை அமைக்கும் சுதந்திரம் அனைவருக்கும் உள்ளது என்பதையும் நியாயமானதும் பயனுள்ளதுமான சேவை நியந்தனைகள் இருத்தல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றன. உலகில் வாழும் அனைத்து மக்களையும் சனநாயக வழிக்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக இருந்த மனித உரிமைகள் தொடர்பான கோட்பாடுகள் 1948 ஆம் ஆண்டின் அனைத்து மனித உரிமைகள் பற்றிய அறிக்கையின் மூலம் வெளியிடப்பட்டது.

எனவே அது மிக முக்கியமானதும் முற்போக்கானதுமான சர்வதேச பிரகடனமாகும். நடை முறை ரீதியில் மிக முக்கியமாக இரண்டு விடயங்கள் வெளியிடப்படுதவற்கு 1948 இல் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையே வழி வகுத்தது. அவையசவன.

1. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேசக்குழு.
2. சமூக, அரசியல், உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதுடன் நடைமுறைப் படுத்தப்பட்ட சேரல்பரி அரசியலமைப்புத் திட்டத்துக்கு அடிப்படை உரிமைகள் தொடர்பான வெளியீடு உள்ளடக்கப்படவில்லை. அத்தகைய வெளியீட்டுக்கு சமனான கட்டளையொன்றாக தான் விரும்பும் மதத்தை பின்பற்றுதலை வறையறுக்கும் அல்லது ஏதேனுமோர் மக்கள் குழுவுக்கு அல்லது மதத்துக்கு விசேட அக்கறை காட்டும். அல்லது புறக்கணிக்கும் எந்தவோர் சட்டத்தையேனும் பாராளுமற்றத்தில் நிறைவேற்றுவதை தடை செய்யும் 29 (2) ஆம் பிரிவினை கருதலாம். அனைத்து மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையை அடிப்படையரகக் கொண்ட நியமத்தை 1972 ஆண்டு முதலாவது சனநாயக அரசியல் யாப்பின் ஆவது அத்தியாயத்தில் கட்டலாம்.

நியாயமான முறையில் தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரம், மனச்சாட்சிகளின் சுதந்திரம் வழிபாட்டு சுதந்திரம், அமைதியாக கூட்டங்களை நடத்தும் சங்கங்களை கூட்டும் சுதந்திரம், மொழிச் சுதந்திரம், என்பன இந்த அடிப்படை உரிமைகள் தொடரபான அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உரிமைகள் ஆவது அத்தியாயத்தில் பின்வருமாறு கூறப்படும், (2) ஆவது பிரிவுக்கு உட்படும்.

''இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்க கூடியமையும் நடமுறைப்படுத்த இயன்றமையும் தேசத்தின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டினையும் அரசின் பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பையும் நாட்டில் நிலைப்பாட்டினையும் பாதுகாக்கும் பொருட்டும் தேசிய பொருளாதாரத்தையும் பொதுமக்கள் சுகாதாரத்தையும் ஒழுக்கத்தையும் மற்றோரின் உரிமைகளையும் மற்றும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பொருட்டும் 16 ஆவது பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள அரசாங்கக் கொள்கைகள் தொடர்பான கோட்பாடுகளை நடமுறைப்படுத்தும் பொருட்டு சட்டத்தினால் விதிக்கப்படும் எல்லைகளுக்கு உட்பட்டே''.

அடிப்படை உரிமைகள் தொடர்பாக 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட அளவுக்கும் அதிகமாக வியரங்கள் அடங்கிய பிரிவொன்று 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது சனநாயக அரசியலமைப்பு யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் 14 (1) வது நூல்கள் உட்பட கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் அமைதியாக கூட்டம் கூடும் சங்கங்களை அமைக்கும் சுதந்திரம், தொழிற்சங்கங்களை அமைக்கும் சுதந்திரம் அதில் தொழிற் சங்கங்களில் சேரும் சுதந்திரம் அதில் தெளிவாக சுறப்பட்டுள்ளது. எனினும் தொழிலாளுர் தொடர்பாக அச் சுதந்திரம் 14 (1) வது எல்லைகளுக்கு உட்படுத் பத்துள்ளதை விலங்கிக் கொள்ளல் முக்கிமமாகும்.

14 (1) - (7) 11 12 ஆவது பிாமாணக் ருறிப்பிலும் 13 ஆவது பிரமாணக் குறிப்பிழ் (1), (2) வது துணை பிரமாணக் குறிப்புக்கவிலும். 14 வது பிரமாணக் குறிப்பிலும் வெளியடப்பட்டு ஏற்றுக் கொள்ளக் கொள்ளப்யட்டுள்ள அடிப்படை உறிமைகளை அவிபலிக்க கூடியமையும் நடமுறைப்படுத்தக் கூடியமையும் நாட்டின் பாதுகாப்பையும் நாட்டின் நிலைப்பாட்னடயும் உறுதிசெய்வதற்கு பொதுமக்கள் சுகாதாரந்தையும், ஒழுக்கத்தையும் காதுகாப்பதற்கு பிறரின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் உரிய முறையில் ஏற்றுக் கொள்வதாகயும் அது உரிய முறையில் மதிக்கப்படுலதை கவனிப்பதற்கு சனநாயக சமூகமொன்றில் சமூக நலனோம்புகையின் பொருட்டு நியாயமான வசதிகளை பூர்த்தி செய்யும் பொருட்டுல் சட்டத்தினால் விதிக்கப்படும் எல்லைகளுக்கு உட்பட்துட.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த துணையாப்பின் காரியத்தின் பொருட்டு 1 சட்டம்: என்ற பதத்தின் மக்கள் பாதுகாப்பு தொடர்பாக நிகழ்காலத்தில் ஆக்கப்பட்ட சட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று நடவடிக்கையினால் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் தொடர்பாக அதற்கான தீர்வுகள் 14வது பிரமாணக் குறிப்பில் 17வது பிரிவினில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ''இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் நபரொருவருக்கு உரித்தாகும் ஏதேனும் அடிப்படை உரிமையொன்று ஏதேனும் நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கையினால் மீறப்படக்கூடியதாக இருப்பது தொடர்பாக, 126 ஆவது பிரமாணக் குறிப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபடி உயர் நீதிமன்றத்துக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு அவருக்கு உரிமை உண்டு.

மனிதனின் சிறப்பினை ஜோன் லொக் (சிவில் கவன்மன்ட் 1690) தோமஸ் ஜோன் (கொமன் செக்ஸ்) மொன்டெஸ்ட்டோ (1748) மற்றும் ருசோவ் போன்ற தத்துவ ஞானிகள் வெளியிட்ட கருத்துக்களாலும் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தையும் பேச்சு சுதந்திரத்தினையும் பாதுகாக்கும் பொருட்டு தம்மை அர்ப்பணித்த ஆயிரக்கணக்கான மக்களின் போராட்டங்களாலும் பாதுகாத்துக் கொள்ள இயள்றது. அமெரிக்கா, பிரான்ஸ், பீரித்தானியா அரசியலமைப்பு யாப்புக்களினால் வளம் பெற்ற எமது அரசியலமைப்பு யாப்பானது அவற்றின் இயல்புகளையே கொண்டுள்ளது. இந்த சீர்த்திருத்தங்கள் பெரும்பாலான இலங்கைத் தொழிலாளர்களின் கவனத்துக்கு அப்பாற்பட்டு விளங்குவதற்கான காரணம் இதுவாக இருக்கலாம்.

## தொழிற்சங்க உரிமைகள்

அடிப்படை மனித உரிமைகளின் அடுப்படையிலேயே தொழிற்சங்களின் உரிமையும் உருவாக்கப்பட்டுள்ளன. கைத்தொழில் நாடுகளில் போன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் இவற்றின் மீது தாக்கங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. தேசிய நலனுக்கு தொழிலாளர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும் என்பது அன்று தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். ஏதேனுமோர் தேசத்தின் பொருளாதார செழிப்பும், அரசியல் நிலைப்பாடும் அந்நாட்டுத் தொழிலாளர்கள் தமது வாழ்வில் கொண்டுள்ள திருப்தியிலும் ஒழுக்கத்திலுமே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1919ல் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு பின் வியன்னாவில் அமைக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் இயக்கம் பிற்காலத்தில் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திற் விசேட பிரிவாக உள்ளடக்கப்பட்டது. முப் பிரிவுகளாக விளங்கும் சர்வதேச தொழிலாளர் இயக்கத்திற் அனைத்துச் சபையினரும் அரசாங்கத் தொழிலாளர்களினதும் தொழில் வழங்குவோரினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும். தொழிற் சங்கங்களின் உரிமைகள் தொடர்பாக கவனம் செலுத்தும் சர்வதேச தொழிலாளர் இயக்கத்தை இரண்டு பிரதான உடன்படிக்கைள் கீழ்வருமாறு.

1. 87வது உடன்படிக்கையில் கீழ் சங்கங்கவை கூடும் சுதந்திரம் தொடர்பாகவும் அவற்றை ஒழுங்கமைக்கும் உரிமைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும். தொழிலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் தமது அங்கங்களை அமைத்துக் கொள்வதற்கும் அது சங்களில் அங்கத்துவம் பெற்றுச் கொள்வதற்கும் உரிமை உள்ளதாக இந்த உடன்படிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் செயற்படுவதற்கும் இந்த சங்கங்களுக்கு உரிமைகள் உள்ளது. என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2. 98வது உடன்படிக்கையின் கீழ் ஒழுங்கமைத்தல் உரிமை தொடர்பாகவும் ஒன்று கூடி கலந்துரையாடும் உரிமைகள் மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது. தொழிற் சங்க தொழிற்பாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் தலையீடுகள் என்பவற்றிலிருந்து அவற்றை பாதுகாப்பதாகவும் கூட்டு கலந்துரையாடல்களை வளர்ப்பதற்காகவும் உடன்படிக்கை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையிலும் இந்த உடன்படிக்கைகள் வலுவில் இருந்த போதிலும் அவை முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. செயற்படுத்தப்படாத உடன்படிக்கைகள் கீழ்வருமாறு:

அ. சங்கங்கள், சம்மேளனங்கள் என்பவற்றை அமைத்துக் கொள்ளும் உரிமை, அவற்றில் சேரும் உரிமை இலங்கையின் அரசாங்கத்துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்கப்படாமை.

ஆ. கூட்டுச் சேர்ந்து கலந்துரையாடும் உரிமை இலங்கையில் அரசாங்கத்துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. சுதந்திர வர்த்தக வலயத்தின் ஊழியர்களுக்கு தொழிற் சங்கங்களை ஒழுங்குபடுத்தி அமைக்கும் உரிமை வழங்கப் படவில்லை.

ஈ. தனியார் துறையில் உள்ள தொழிற்சங்கங்களின் எண் ணிக்கை மிக அதிகமாக இருப்பதனால் அவர்களுக்கு கூடிக் கலந்துரையாடும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

சர்வதேச தொழிலாளர் இயக்கத்திற் 87,98 வது உடன் படிக்கைகள் முழுமையாக செயற்படுத்தப்படாமல் மீறப்பட் டுள்ளது எனவே இலங்கைத் தொழிலாளர்கள் தமது தொழில் உரிமை போராட்டங்களுடன் இந்த உடன்படிக்கையில் உள்ள தொழிலாளர்கள் உரிமைகளை கீழ்வரும் தலையங்கத்தின் கீழ் கலந்துரையாடல்களுக்கு உள்ளாக்குதல் வேண்டும்.

1. சேவை நிபந்தனைகள்.

2. தொழில்களும் அவற்றின் பாதுகாப்பும்.

3. சம்பளமும் வாழ்க்கைத் தரமும்.

4. இழைக்கப்பட்ட அநீதிகள்.

5. அரசியல் ரீதியிலும், நிர்வாக ரீதியிலுமான இன்னல் கள்.

6. அத்தியாவசிய சேவைகள்.

## தொழில் நிபந்தனைகள்

தற்காலத்தில் தொழிலாளர்களின் தேவைகள் வேண்டா வெறுப்புக்கள் முன்னுரிமைகள் என்பன மிக வேகமாக மாற்ற முறுகின்றது. இவர்கள் சிறந்த கல்வி அறிவையும் பயிற்சி யையும் பெற்று தமது வேலைத் தலங்களில் பல கடமைகளை செய்யும் பொருட்டு திறமை உள்ளவர்களாக விளங்குகின்ற னர். இவர்களின் சிந்தனைகள் கருத்துக்கள் என்பன முற்கால தொழிலாளர்களின் சிந்தனைகள் கருத்துக்கள் என்பனவற்றிலி ருந்து மிகவும் வேறுபட்டு விளங்குகின்றது. இவர்கள் மிகச் சிறந்த தொழில் நிலையையும் எதிர்பார்க்கின்றனர். இவர்கள் உயர் வாழ்க்கைத் தரத்தையும் கௌரவமானதும். மதிப்புள்ள துமான கடமைகளையே எதிர்பார்க்கின்றனர்.

இதனால் மேலெழும் தொழிலாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு முற்போக்கான பல நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை மேற்கொள்ள நிகழ்கால தொழிற்சங்கங்களுக்கு நேர்ந்துள்ளது. தொழில் நிலையங்களில் காணப்படும் அடிப்படை இன்னல்களை பின்வருமாறு காட்டலாம்.

(எ) வேலைத்தள சுகாதார நிலைகளும் உடல் நலத்தன்மைகளும்

முற்காலத்தில் இது அரசாங்க, தனியார் பெருந்தோட்டத்துறைகளில் பாரதூரமான பிரச்சினையாக விளங்கியது. எனினும் தற்போது அரசாங்க தனியார் துறைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டத் துறையில் அத்தகைய முன்னேற்றம் ஏற்படவில்லை. இது நிகழ்காலத்தில் தொழிற் சங்கங்களுக்கு பெரும் பிரச்சினையாக இருப்பதுடன் எதிர்காலத்தில் கூட இதில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

(பி) தொழில் ரீதியான இன்னல்கள்

கொழும்பு 07. பழைய கட்டிடங்கள் சிறு அளவிலான கைத்தொழில் உற்பத்தித் துறைகள், சுகாதார சேவைகள் என்பன இப்பிரிவினில் அடங்கும்.

(சி) தொழில் காரணமாக ஏற்படும் நோய்கள்

தாம் ஈடுபடும் தொழில்கள் காரணமாக தமக்கு ஏற்படும் இன்னல்கள், நோய்கள் பற்றி சுகாதாரதுறையைச் சேர்ந்த தொழிலாளர்கள், கைத்தொழிற் சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சுரங்கத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களுக்கும் வெகுஜன தொடர்புச் சாதானங்களுக்கும் முறைப்பாடுகளை செய்திருந்த போதும் தடுக்கும் பொருட்டு உகந்த நடவடிக்கைகள் தொழில் வழங்குவோர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

போக்குவரத்து

போக்குவரத்தானது அனைத்து தொழிலாளர்களுக்கும் மிக முக்கிய சாதனமாக விளங்குவதுடன் அந் நிலை தொடர்ந்தும் அவ்வாறே விளங்கும். தற்போதைய போக்குவரத்து பாதை அமைப்பு முறைகளும் போக்குவரத்து சாதனங்களும் மிகவும் ஆபத்தை விளைவிப்பனவாகவே உள்ளன. பஸ் வண்டிகளில் காணப்படும் நெரிசல் நிலைமைகள் மிக கடுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவே உள்ளன. இதனால் பெண் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் இன்னல்கள் அளவற்றவைகளாகும்.

புதிய பரம்பரைக்கு உரித்தான தொழிலாளர்கள் சிறந்த நிலையிலான தொழில்களையே எதிர்பார்க்கின்றனர். அவர்கள் மனிதாபிமான திருப்திகரமான தொழில்களையே எதிர்பார்க்கின்றனர். இன்னல்கள் அற்ற சுதந்திரமான பாது காப்பான சிறந்த சூழலைக் கொண்ட தொழில்களையே எதிர்பார்க்கின்றனர். இவ் விடயம் தொடர்பாக கைத்தொழில் கொள்கைகளில் நியாயங்களை கோரும் தொழிற் சங்கங்கள் தமது அங்கத்தவர்களை திட்டமிடப்பட்ட காரியங் களை செய்விப்பதற்கான ரோபோ ,இயந்திரங்களாக உப யோகிக்கப்படுவதை விரும்பவில்லை. நிகழ்கால தொழில் ஒழுங்கமைப்புக்கள் தற்கால சந்ததியினரின் எதிர்பார்க்கை களையோ, தேவைகளையோ நிறைவேற்றுவதற்கான தகை மைகளை கொண்டமையவில்லை என்பது தொழிற்சங்கங்க ளின் கருத்தாகும். தொழில் அடிப்படையிலான சூழலை மேம் படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டு அவர்கள் தொழிலாளர்கள் உரிமைகளை உபயோகப்படுத்திக் கொள்கின்றனர். எனினும் அவர்களது தொழில் உரிமைகள் கட்டாயச் சேவை பிரமாணங்களினால் வரையறுக்கப்பட் டுள்ளன.

## தொழில்களின் பாதுகாப்புத் தன்மை

சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக் காலக்கட்டங்க ளில் இலங்கையில் தொழிலாளர்கள் மீது கடுஞ் தொழில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. நிரந்தர ஊழியர்களை பெற்றுக்கொள்வது கடினமானதொரு காரியமாக விளங்கிய தால் அரசாங்கத்தின் அனுமதியின்றி நிரந்தர ஊழியர்கள் ஒருவரை சேவையிலிருந்து விலக்க முடியவில்லை.

''வாழ்க்கைப் பூராண தொழில் முறை 1940ஆம் ஆண்டளவில் உச்சக் கட்டத்தை அடைந்திருந்ததுடன் நிரந் தர ஊழியரொருவர் ஓய்வு பெறுவதனால் அல்லது மரணிப் பதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புகையில் அதற்கான முன்னுரிமை அத்தகைய ஊழியரின் பிள்ளைகளுக்கே வழங்கப்பட்டது. ''வாழ்க்கைப் பூராண'' தொழில் முறை இலங்கையிலும் இந்தியாவிலுமே பின்பற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1934 ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் விதிக்கப்பட்டதன் மூலம் தொழிலாளர் களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டன. 1983 ஆம் ஆண்டின் முற்பகுதி தொடக்கம் விசேட மாக இலங்கையின் பொருளாதார நிலைக்கிணங்க உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்றவற்றிலிருந்தும் மற்றைய நிதி உதவி நிறுவனங்களிலிருந்தும் பெருமளவிலான கடன் களை பெறும் பொருட்டு பல தரப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதாயிற்று. இதற்கிணங்க அத் துறைகளை தனி யார் மயமாக்கும் நடவடிக்கைகளும் வர்த்தக மயமாக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பெருந்தொகையான அரசாங்கத்துறைகள் தனியார் துறையினருக்கு விற்கப்பட்டன. ஒப்படைக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு அளப்பரிய சேவை யை ஆற்றிய இலங்கை போக்குவரத்துச் சபையும் சிறு பிரிவு களாக பிரிக்கப்பட்டு மக்கள் மயமாக்கப்பட்ட போக்குவரத் துச் சேவை என்று அழைக்கப்பட்டது. புதிதாக பஸ் வண்டி களை கொள்வனவு செய்வதற்கு அல்லது உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்துறை வங்கிக ளிலிருந்தோ அல்லது தனியார் வங்கிகளிலிருந்தோ கடன் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகளை இந்த போக்கு வரத்துச் சேவைகள் கொண்டிராததால் வெகுகாலம் செல்வ தற்கு முன் இந் நிறுவனங்கள் மூடப்படும் நிலைமையில் இருப்பதுடன் ஊழியர்களுக்கு தமது தொழில்களை இழக்க வும் நேரிடும் தொலைத்தொடர்பு திணைக்களம் தற்போது ரெலிகொம் என்ற பெயரில் தனியார் மயமாக்கப்பட்டுள்ள துடன் தபால் புகையிரத சேவைகளையும் தனியார் மயமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் காரணிக்குள் முதலீட்டு தன்மைகள், உற்பத்தி அமைப்புக்கள் தொழிலாளர் சந்தை என்பவற்றையும் குறிப்பிடலாம். கடந்த 10 ஆண்டு காலங்களில் நாடு பூராகவும் உள்ள சுதந்திர வர்த்தக வல யங்களில் குறைந்த சம்பளங்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கிய வெளிநாட்டு முதலீடுகள் தொழில் ரீதியில் தொழிற் சங்கங்களின் மீது பெரும் தாக்கத்தை விளைவித்தவையாகும். தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்களை சேர்த்துக் கொள் வதை கடினமாக்கும் விதத்தில் ஆசியா கண்டத்திலுள்ள நாடு களின் அரசாங்கங்களும், முகாமைத்துவங்களும் ''நெகிழும் தன் மையை பாதுகாப்பதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள் ளன. இதன் காரணமாக தொழிற்சங்ககங்ளுக்கு தொழிலாளர் களை ஒழுங்கமைப்பது பெரும் கடினமாகவே உள்ளது. சுதந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திர வர்த்தக வலயத்துக்கு வெளியே அமைந்துள்ள நிறுவனங்களில் தொழிற்சங்க உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருந்த போதிலும் தனியார்மயமாக்கலுக்கு உட்பட்டிருந்த அரசாங்க நிறுவனங்கள் மீதும் இத்தகைய ஆபத்தான நிலைமைகள் ஏற்படலாம். தனியார் துறையினர் தொழிலாளர்கள் சட்டங்களை இரத்துச் செய்வதாக பயமுறுத்தியுள்ள இச் சந்தர்ப்பத்தில் தற்கால பொருளாதார தன்மைகளின் கீழ் தொழிற்சங்கங்கள் தொழில் பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு சலுகைகள், பயனுள்ள முறையிலான மனித வள அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய விதத்தில் அந்த தொழிற்சங்கங்களின் கடமைகளும் சிந்தனைகளும் மாறுபடுதல் வேண்டும். ஒழுங்கற்ற நடவடிக்கைகள் மூலம் விதிக்கப்படும் தண்டனைக்கு இணங்க சேவை முடிவுறுத்தல் தவிர்ந்த சேவை முடிவுறுத்தும் மற்றைய அனைத்தும் சந்தர்ப்பங்களை ஈடுசெய்யும் 1976, 1988 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்க சேவையை முடிவுறுத்தும் சட்ட மூலத்தை இரத்துச் செய்யும்படி வர்த்தக கைத்தொழிற் சபை சம்மேளனம் ஏற்றுமதியாளர் சம்மேளனம் இலங்கை வர்த்தக சபை, தேசிய கைத்தொழிற்சாலை சபை, புடவை ஏற்றுமதியாளர்களின் சபை என்பன நிதி நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சரவை செயற்குழுவுக்கு நிருபமொன்றை முன்வைத்துள்ளது. வர்த்தக சபை முன்னளித்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு இந்த வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்கு அரசு கடமைபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது, 1971 ஆம் ஆண்டு தொழிற் முயற்சிகளை கையேற்கும் சட்ட மூலத்தை இரத்துச் செய்தது. போன்று இச்சட்டமூலத்தையும் இரத்துச் செய்தல் வேண்டும் என அவர்கள் கேட்கின்றனர்.

சேவையை முடிவுருத்தும் சட்டமூலத்தினால் தனியார் துறை சார்ந்த ஊழியர்களின் உரிமைகளுக்கு தடைகள் ஏற்படுகின்றன. எனவும் எல்லைகள் விதிக்கப்படுகின்றன எனவும் நிறுவனங்களை ஒன்று சேர்த்தல், இணைத்தல், கையேற்றல் போன்ற அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க நிறுவனங்களை மீழ் ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளுக்கு இச் சட்ட மூலத்தினால் தடைகள் ஏற்பட்டுள்ளதெனவும் அந்த நிருபத்தில் கூறப்பட்டுள்ளது. 1989 இல் வெளியிடப்பட்ட இலங்கையில் கைத்தொழில் மயப்படுத்தலுக்கான உபாய முறைகள் எனும் கொள்கை வெளியீட்டு மீதும் கவனம் கோரப்பட்டுள்ளது. சேவையை முடிவுறுத்தும் சட்ட மூலத்தினால் விசாரணைகள் நீடிப்பதாகவும் தொழிலாளர்களும், ஊழியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் இதனால் நம்பிக்கை இழப்பதகபவும் இதனால் சேவையை முடிவுறுத்தம் சட்ட மூலத்தை இரத்துச் செய்யும்படியும் இந்த நிருபத்திம் கேட்கப்பட்டுள்ளது.

தொழில் ஆனையாளர் திரு. பி, வீரக்கோன் அவர்களும் தொழிற்சங்கங்கள் சார்பாக தோன்றும் சட்டத்தரணிகளும் பெரும்பாலரனோரும் வர்த்தக சபையின் வேண்டுகொள்களுங்கு தமது எதிர்பார்ப்புக்க்ளைத் தெறிவித்துள்ளதுடன். இந்த சட்டமூலத்தை இரத்துச் செய்தால் தொழில் உரிமைகள் இல்லாமல் ஆவதை தொழிற்சங்கபணிகளில் ஈடுபட்டுள்ள நாம் அனைவரும் புரித்து கொள்கள் வேண்டும்.

## சம்பளங்களும் வாழ்க்கைத் தரமும்.

எல்லா தொழிலாளர்கலினும் அடிப்படை தேவைகளாக தொழிலின் நிரந்தரத் தன்மையும் போதிபளவு சம்பவத்தையும் ருறிப்பிடலாம். ஊழியரின் வருமானமானமாக விளங்குவது சம்பளம் அல்லது கூலியே இது தொழிலதிபர்களுக்கு உற்பத்திச் செலவாகவே விளங்குகின்தது.

தொழிலாளர் உள பொருளாதாரத்தில் சம்பளத்தை தீர்மானிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதுடன் கூட்டு பேச்சுலார்த்தைகள் இந்த சம்பளங்கள் அல்லது. கூளிகள் தொடர்பாக மிக முக்கியம் வாய்ந்ததாக விளங்குகின்றத,

அரசாங்கத்துறையில் உள்ள ஊழியர்களுக்கு வாழும் பொருட்டு போதுமானளவு சம்பளம் வழங்கப்படல் வேண்டுமென அரசாங்கச் சேவை சுதந்திர தொழிற்சங்க சம்மேளத்தினால் காரணங்கள் முன்னளிக்கப்பட்டுள்ளது. இந்த சம்மேளனத்தினால் முல்லவக்கப்பட்டுள்ள வேண்டுகோள் யாதெனில் அனைத்து சம்பள திருத்தங்களின் போதும் தொழிலாளர்களின் வாழ்க்கையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும் எனவும் சம்பள அளவுகளை தீர்மானிக்கையில் வாழ்வதற்கு ஏற்ற சம்பளங்களை பெற்றுக் கொடுக்கும் சொள்கையை பின்பற்றுதல் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கட்டுப்பாடற்ற பொருளாதார முறையினால் உணவுப் பொருட்களின் விலைகளில் பெரிதும் தாக்கம் ஏற்பட்டுள்ளதெனவும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை 40 சத வீதத்தினால் அதிகரித்துள்ளதெனவும் அடிக்கடி சம்பள திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது 13 சதவீதத்தினாலேயே அதிகரித்துள்ளதெனவும் அரசாங்கச் சேவை சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்தினால் தெளிவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கச் சேவை சுகந்திர தொழிற்சங்கமானது வாழ்க்கைச் சம்பளத்தின் பொருட்டு குடும்ப மொன்றில் வரவு செலவினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரசாங்க சேவையின் நடுத்தர வகுப்பைச் சார்ந்த சாதாரண குடும்ப மொன்றின் வரவு செலவுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து உடல்ரீதியிலான உழைப்புச் சத்தியை வழங்கி உழைக்கும் தொழிலாளர் மட்டத்திலிருந்து வாழ்க்கைச் சம்பளம் ரூபா. 4,000/– இருந்த ஆரம்பித்து அதிகரித்தல் வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமான வாழ்க்கைச் செலவு சுட்டெண்களுக்கு இணங்க 5/. ரூபா வீதம் செலுத்துதல் எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது,

உழைப்புச் சக்தி பற்றிய பொருளாதாரத்லத பின்னணியாகக் கொண்டு புள்ளிவிபரங்களை அடிப்படையாக வைத்து சம்பள ஊழியர் கோப்பு ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட நியாயமான வேண்டுகோள் இதுவாகும். அரசாங்கத்துறையில் உள்ள தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்பின் பொருட்டு முன்னளிக்கும் வேண்டுகோள்களுக்கான ஒரே தீர்வாக இந்த வாழ்க்கைச் சம்பள முறையை மேற்கூரிய குழுவின் அங்கத்தவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் போலும் இந்த அறிக்கை அரசாங்கத்துக்கு முன்னளிக்கப்பட்ட போதிலும் அது இது வரை வெளியிடப்படவில்லை.

இந்த வாழ்க்கை சம்பள கருத்து அரசாங்கச் சேவை தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல அனைத்து பிரிவுகளிலும் உள்ள தொழிலாளர்களுக்கும் பொருந்துவதாகும். கடும் மழையிலும் கடும் வெயிலிலும் உழைக்கும் தொழிலாளர்கள் போசாக்கின்மையினால் பீடிக்கப்படுவதுடன் கடன்படும் நிலைமையிலும் உள்ளனர். இதனாலேயே இவர்கள் வாழ்க்கைச் சம்பளத்தை கேட்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தேயிலைத் தோட்டங்களிலும் இறப்பர் தோட்டங்களிலும் தொழில் புரியும் இந்த தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலாளர்களினால் வழங்கப்படும் நாட்களில் மட்டுமே வேலை செய்ய நேர்ந்துள்ளது. குறைந்த பட்சம் மாதத்துக்கு 25 நாட்களாவது வேலை செய்ய கிடைக்காவிட்டால் குடும்பத்துக்கு போதுமானளவான உணவுப் பொருட்களையாவது பெற்றுக் கொள்வதற்கு அவர்களால் இயலாமல் செல்கின்றது.

அரசியலமைப்பு யாப்பின் 27 (இ) பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. ''போதியளவு உணவுகள், உடைகள், குடிமனை, வசதிகள். வாழ்க்கைத் தரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி ஓய்வு மற்றும் சமூக கலாச்சார விடயங்களில் கலந்து கொண்டு அவற்றை உபயோகப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் உட்பட அனைத்து பிரஜைகளாலும் தனக்கும் தனது குடும்ப அங்கத்தவர்களுக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குதல்.

உணவுப் பொருட்களின் விலைகள் அடிக்கடி அதிகரிக்கும் இச்சந்தர்ப்பத்தில் தொழிலாளர்களுக்கு அரசியலமைப்பு யாப்பின் 27 (இ) பிரிவில் காட்டப்பட்டுள்ள உரிமைகளை பெற்றுக் கொள்ள இயலுமா? இதனால் 27 (இ) பிரிவினில் காட்டப்பட்டுள்ள உரிமைகள் பெறும் பொருட்டு தொழிற் சங்கங்களின் ஊடாக அவற்றை வென்றெடுப்பதற்கான அனைத்து உரிமைகளும் தொழிலாளர்களுக்கு இருத்தல் வேண்டும். கட்டாயச் சேவை பிரமாணங்கள் அமுலில் இருப்பதனால் இலங்கையில் தற்போது இருக்கும் நிலைக்கேற்ப அதை அவர்களுக்கு வென்றெடுக்க இயலுமா எனும் அடிப்படை பிரச்சினை மீது தொழிற்சங்கங்களின் தலைவர்கள் தமது கவனத்தை செலுத்த வேண்டும்.

## வேறுபாடு காட்டுதல்

ஆளனி முகாமைத்துவத்தின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வேறுபாடுகள் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. கைத்தொழில் மயமாக்கப்படுதலின் போதான தொடர்புகளை வளர்க்கும் போதும் தொழிற்சங்க போராட்டங்களை தீர்த்திவைக்கும் போதும் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளை மீளாய்வு செய்கையில் பலவித அணுகு முறைகள் கையாளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த போராட்டங்களை நாம் அரசியல் கண்ணோட்டத்தில் அல்ல தொழிற்சங்க கண்ணோட்டத்திலேயே ஆராய்தல் வேண்டும்.

இலங்கையில் அரசாங்கத் துறை சார்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது அறியக் கிடைத்த தகவல்களுக்கு இணங்க பொது மக்கள் நன்மை அல்லது கட்டாயச் சேவை சட்டங்களினால் தாம் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு அளவில்லை என தொழிற்சங்கங்களின் 77.1 மானவை தெரிவித்துள்ளன. அரசாங்கத்துறை தனியார் துறை பெருந்தோட்டத்துறை தொழிற் சங்கங்கள் ஒன்றாக இணையாததால் அந்த அனைத்து சங்கங்களின் நடவடிக்கைகளும் தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தொழிற் சங்கங்களுக்கு தொழிற்சங்கங்கள் தொடர்பாக பேச்சுவார்த் தைகளைக் வெற்றிகரமாக மேற்கொள்ள இயலவில்லை.

சேவையிலிருந்து நீக்கப்படுதல், பதவிகளிலிருந்து கீழ்த் தாழ்த்தப்படுதல், இடமாற்றப்படுதல் உட்பட வேறு முறைக ளால் தொழிலாளர் மீது மேற்கொள்ளப்படும் தொழிற்சங் கங்கள் மீதான எதிர்ப்பு நடவடிக்கைகளிலிருந்து போதுமான ளவு பாதுகாப்பினை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை தொழி லாளர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பதேதொழிற்சங்கங்களை அமைத்து அவற்றை சுதந்திரமாக இயங்க வைப்பதன் நோக்க மாகும். தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் தொடர்பாக இந்த பாதுகாப்பு விசேடமாக இருத்தல் வேண்டும். அதற்கான காரணம் தொழிற்சங்களில் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள அதிகாரங்கள் பொறுப்புக்களுக்கு இணங்க தடைகள் இல்லாமல் முழுச் சுதந்திரத்துடன் தொழிற்சங்கங்களில் ஈடு படுவதற்கான சுதந்திரம் அவர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பதாகும்.

ஆதாரம்: சர்வதேச தொழிலாளர் அமைப்புக் கோவை – பந்தி 556

பலவழிகளில் வேறுபாடுகளை காட்டுவஅ அநீதி என்றே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இத்தகைய வேறுபாடுகாட்டும் நிலைமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற் பாடுகள் அரசியலமைப்புத் திட்டத்தில் எடுத்துக் காட்டியுள் ளன. இலங்கை குடியரசின் இரண்டாவது அரசியலமைப்பு யாப்பின் 111 வது அத்தியாயத்தின் 12 (2) வது பிரிவின் முலம் சம உரிமைகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

''எந்தவொரு பிரஜையையும் இனம், மதம், மொழி குலம் ஆண் பெண் பாகுபாடு அரசியல் கொள்கைகள் அல்லது பிறந்த இடத்தை அடிப்படையாகக் கொண்டோ அல்லது வேறு எந்த காலத்தினாலுமோ வேறுபாட்டுக்கோ விசேடத் துக்கோ உட்படுத்தல் ஆகாது.

ராமுபிள்ளை வழக்கில் அரசியலப்புத் திட்டத்தில் உள்ள இந்த வேறுபாடு உயர் நீதி மன்றத்தினால் கவனத்துக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது, ஒவ்வொரு நபராலும் இனவாத பிரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினை தொடர்பாக தாம் கொண்டுள்ள கருத்துக்களுக்கு இணங்க இந்த ஏற்பாடுகள் விமரிசனத்துக்கு உட்படுத்துப்பட்டுள்ளதுடன் சில சந்தர்ப்பங்களில் இதற்கு ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது. கடந்த காலங்களில் தமிழ் இனத்தவர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதை உறுதி செய்யக் கூடிய சாட்சிகள் இல்லாமையால் பதவி உயர்வுகள் இனவிகிதாசார அடிப்படையிலேயே மேற்கொள்ளல் வேண்டும் என்ற நியதி நீதிமன்றத்தால் நீக்கப்பட்டது.

த சில்வா வழக்கில் தனது தொழிலதிபருக்கு எதிராக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கு சில தகவல்களை முன்னளித்தமை தொடர்பாக தனது செயலாளராக கடமையாற்றிய பெண்மணியொருவரை சிறு காலம் லீவில் அனுப்பி பின் மறுபடி சேவைக்கு அழைக்கப்பட்ட போதிலும் அவரை முன் பாற்றிய கடமைகளில் ஈடுபடுத்தாமல் அலுவலகத்துக்கு வெளியில் காத்திருக்க வைத்ததின் மூலம் அவருக்கு பெரும் அவமானம் விளைவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளருக்கு இழைக்கப்பட்ட உடல் உள ரீதியான சித்திரவதை அரசியலமைப்பு யாப்பின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளவை என நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவர் மீது செய்யப்பட்ட தாக்கங்கள் அவ்வளவு பாரதூரமானவை அல்ல என தீர்மானிக்கப்பட்டது.

அனைவருக்கும் சம பாதுகாப்பு வழங்குதல் தொடர்பாக எல்மோ பெரேரா (நில அளவைத் திணைக்களம்) வழக்கின் தீர்ப்பை உதாரணமாக காட்டலாம் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதை நிருபிக்கும் பொருட்டு குறிப்பிட்ட குழுவில் அடங்கும் நபர்கள் சம அந்தஸ்தையும் சம நிலைமையையும் கொண்டவர்கள் என்பதையும் இவர்கள் வெவ்வேறான முறைகளில் உபசரிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் பிருநித்தல் வேண்டும். எல்மோ பெரேரா வழக்கின் மூலம் பாரபட்சம் காட்டும் நிலைமைகளினால் அனைவருக்கும் பொதுவரன நியாயம் வழங்கும் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதை காணலாம்.

செயற்பாட்டுத் திறன் மதிப்பீடுகளில்' பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கைகளில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. ஊழியர்களின் செயற்பாட்டுத் திறனை மதிப்பீடு செய்யும் பொறுப்பினை கொண்டுள்ள நிருவாகிகள் அக் காரியத்தின் போது ஊழியர்களின் இன. மத. மொழி. குலம் அல்லது அரசியல் நீதியில் பாரபட்சம் காட்டுகின்றனர். இது தொடர்பாக நீதி மன்றங்கள் மூலம் நியாயம் காணும் உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் சங்கங்களுக்கு அல்ல தொழிலாளர்களுக்கே உண்டு இங்கு ''பிரஜை எனும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ளதால் வழக்குகளில் போது தொழிற்சங்கங்களை சேர்த்துக் கொள்ள இயலாது.

## அரசியல், மற்றும் நிருவாக கொடுமைகள்.

தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் தோல்வியடைந்தவர் களுக்கு கொடுமைகளையும் இன்னல்களையும் விளைவித்து தமது மகிழ்ச்சியை கொண்டாடும் முறையானது இலங்கையில் 1960 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்தது. தேர்தல் முடிவுடன் பெரும்பாலான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு திடீர் இடமாற்றம் பிறப்பிக்கப்படுகின்றது. இதில் நாம் ஆராய்வது ஊழியர்களுக்கு செய்யப்படும் இத்தகைய கொடுமைகளிலிருந்து அவர்களை பாதுகாக்கும் பொருட்டு எடுக்கக் கூடிய சட்டப்படியான நடவடிக்கைகள் யாவை என்பதாகும். நிறுவனமொன்று நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டுமாயின் அதிலுள்ள ஊழியர்களை தொடர்ந்தும் அதில் நிலைத்திருக்கச் செய்தல் வேண்டும். தொழில் நிருவாகிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகள் முறிவடையாமல் இருந்தல் வேண்டும்.

ஓர் அரசியல் நிர்வாகத்திலிருந்து இன்னுமோர் அரசியல் நிருவாகத்துக்கு இடையிலான இயக்கங்களை தொடர்ந்தும் நிலைத்திருக்குச் செய்யும் பொருட்டு ஊழியர்கள் மிகவும் இன்றியமையாதவர் களாக விளங்குகின்றனர்.

சேவைகளை பயனுள்ள முறையில் வழங்கச் செய்து சமூக தேவைகளை நிறைவேற்றுவதையே முன்னுரிமை வாய்ந்த முக்கியமானதோர் விடயமாக கொள்ளவேண்டும். தொழிலாளர் களின் தொழில் ரீதியிலான வளர்ச்சிக்கு அடுதபடியாக உதவுதல் வேண்டும் எனினும் இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், புலமைப்பரிசில்களை வழங்கல் போன்ற விடயங்களில் தமக்கு வேறுபாடு காட்டப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் உரிமைகள் தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வின்போது பெருந் தோட்டத் தொழிலாளர்களில் 37.8 வீதத்தினர் குறிப்பிட்டுள் ளனர். அரசாங்கத் துறையின் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போது செயற்திறன் மதிப்பீடுகள் சித்தியடைந்துள்ள சினைத்திறன்கான் தடைகள் போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. செயற்திறன் மதிப்பீட்டின் மூலம் திறமை அடிப்படையிலான கொள்கை தயார் செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. இந்த திறமை அடிப்படையிலான கொள்கை பெரும் பாலான சந்தர்ப்பங்களில் முறையற்ற விதத்தில் செயற்படுத்தப் படுகின்றது எனவும் அரசியல் செல்வாக்கு தனிப்பட்ட நட்பு என்பவற்றின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படு வதாக இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சேவை முதிர்வு திறமை எனும் இவை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்ட போதிலும் புள்ளிகளை வழங்குவதில் சேவை முதிர்வானது விசேட கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டுமென அண்மையில் வழங்கப்பட்ட உயர்நீதிமன்ற தீர்ப்புக்களிலிருந்து தெரியவந்துள்ளது. திறமைகளை உறுதி யற்ற விடய அளவு கோள்களின் அடிப்படையில் அல்ல அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய அளவு கோளின் அடிப் படையிலேயே அளத்தல் வேண்டுமென காட்டப்பட்டுள்ளது. இந்த தேர்வு முறை பின்னர் சவால்களுக்கு உட்படுத்தப்படும் பட்சத்தில் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இது நியாயமா னது என்பதை நீதி மன்றத்தின் நிரூபிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

அனைத்து தேர்தல்களின் இறுதியிலும் அரசியல் அசம்பாவி தங்கள் ஏற்படுகின்றன. அது தொடர்பாக நீண்டளவில் கருத்து தெரிவிப்பதற்கு நேரமோ இடவசதியோ இல்லை. எனவே இதனுடன் தொடர்பான இரண்டு உயர்நீதிமன்ற தீர்ப்புக்கள் அவதானிப்பின் பொருட்டு கீழ் தரப்பட்டுள்ளது.

மின்னேரிய – கிரிதளை இயற்கை வன பாதுகாப்பு பிரதேசத் தில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுவதையும், ஏற்றித் செல்லப்படுவதையும் பரிசோதிக்கும் பொருட்டு 1991 இல் வனபாது காப்பு உத்தியோகத்தர் திரு மொஹமட் பயிஸ் அவர்கள் வனபாதுகாப்பு காவலாளர்களுடன் சென்றார். வன்டிகளில் மரங்களை ஏற்றும் நபர்களையும் மரங்கள் ஏற்றப் பட்ட டக்டர் ஒன்றையும் அவர் கண்டார். சந்தேக நபர்களை யும் குற்றத்துக்கான சாட்சிகளையும் தன்னுடன் தனது அலுவல கத்துக்கு எடுத்துச் செல்கையில் ஆட்கள் பலர் ஜீப் வண்டியில் வந்து அவரை வழிமறித்தனர். அவர்களுடன் இருந்த பாராளு மன்ற உறுப்பினர் ஒருவரையும் மாகாணச் சபை அங்கத்தவர் ஒருவரையும் மாகாணச் சபை அங்கத்தவர் ஒருவரையும் அவரால் இனங்காணமுடிந்தது. சந்தேக நபர்களை விடுவிக்கும்படி அவர்கள் விடுத்த வேண்டுகோளை திரு. பயிஸ் அவர்கள் நிரா கரித்தார். இதனால் கோபமுற்ற ஆட்கள் திரு பயிசை தாக்கினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பாதுகாப்பின் பொருட்டு எடுத்துச் சென்ற இரும்புக் கம்பியினால் தாக்குண்ட திரு பயிஸ் கண்ணிலும் தனது தோள்களிலும் படுங்காயங்களுக்கு உள்ளானார்.

இந்த விபரத்தை உதவி பணிப்பாளருக்கு தெரிவித்த திரு பயிஸ் அவர்கள் பொலன்னறுவை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றதுடன் இன்னும் பல நபர்களுடன் குறிப்பிட்ட பாராளு மன்ற உறுப்பினரும், மாகாணச் சபை அங்கத்தவரும் அங்கிருப்பதை திரு பைஸ் கண்ணுற்றார். பாராளுமன்ற உறுப் பினரின் வாக்கு மூலம் பதிவு செய்யப்படும் வரை திரு பைஸ் அவர்களின் வாக்கு மூலம் பதிவு செய்யப்படுவது நிராகரிக்கப் பட்டது. எவ்வித காரணமும் தெரிவிக்கப்படாமல் திரு பைஸ் கைது செய்யப்பட்டார். அன்றைய தினம் அந்த பாராளுமன்ற உறுப்பினருடன் வந்த இராஜாங்க அமைச்சரான மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர். திரு பைஸ் அவர்களின் காயங்களை புண்படும் விதத்தில் பொலிசார் முன்னிலையில் அவரை தாக்கிய துடன் பொலிசார் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளை யும் எடுக்கவில்லை.

பின்பு திரு பைஸ் அவர்கள் பொலன்னறுவை பதில் நீதவான் முன்னிலைக்கு ஆஜராக்கப்பட்டதுடன் இரண்டு நாட்கள் ரிமான்டிலும் வைக்கப்பட்டார். அதன் பின்னரே அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். திரு பைஸ் அவர்களால் கைது செய்யப்பட்ட நபர்கள் மறுபடி கைது செய்யப்பட்டு காட்டு வன விலங்கு பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டது.

அரசியலமைப்பு யாப்பின் 126 வது பிரிவின் கீழ் விண்ணப் பம் செய்த திரு பைஸ் அவர்கள் கொடுமைகளுக்கு அல்லது சித்திரவதைகளுக்கு அல்லது அவமானப்படுத்தலுக்கும் உள் ளாக்கும் தண்டனைகளை வழங்கியமை தொடர்பாக 11 வது பிரிவின் கீழும் சட்டத்தின் முன் நியாயம் 'விழங்கடபடாமை தொடர்பாக 12 (1) வது பிரிவின் கீழும் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டமை தொடர்பாக 13 (1) வது பிரிவின் கீழும் விபரங்களை முன்னளித்து அடிப்படை உரிமைகள் மீறப் பட்டுள்ளதாக மனுதாக்கல் செய்தார். 1993 இல் வெளியி டப்பட்ட வழக்குத் தீர்ப்பின்படி திரு பைஸ் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமை நிருபிக்கப்பட்டது. மனுதாரருக்கு 50 ஆயிரம் ரூபா நட்ட ஈடாகவும். 5 ஆயிரம் ரூபா வழக்கு கட்டனமாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீட்டை எதிர்க்கட்சியின் பத்திரிகையில் அலுவலகத்திற்காக வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக புகையிரத சேவையிற் தலைமை பொறியியலாணர் 1993 மார்ச் மாதம் கட்டாய லீவில் அனுப்பப்பட்டார். ராவய பத்திரிகையில் பதிப்பாசிரியர் அலுவலகத்துக்காக தனது வீட்டை வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக தனக்கு தண்டனை வழங்கப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தலைமை பொறியியலாளர் அரசியலமைப்பு யாப்பின் 126 வது கீழ் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் மூவர் முன்னிலையில் இந்த வழக்கு தீர்க்கப்பட்டது. இந்த தீர்ப்பின்படி தலைமை பொறியியலாளரை கட்டாயம் ஓய்வில் அனுப்பும் கடிதத்தை வாபஸ் பெறவும், அவர் முன்பு அனுபவித்த அலனத்து உரிமைகள் சலுகைகள் என்பவற்றுடன் அவரை மறுபடி சேவையில் அமர்த்துவதற்கும் புகையிரத திணைக்களம் உடன் பட்டது.

அடிப்படை உரிமைகள் தொடர்பான பல வழக்குகள் இன்னும் விசாரனை முடிவடையாபல் உள்ளன. அவை தீர்ப்பு வழங்கப்படுவது தாமதிக்கப்படுவதாகவும் அவை பொதுவான வழக்குகளின் நிலைக்கு உள்ளாகி உள்ளது எனவும் அறியக் கிடைத்துள்ளது. மனித உரிமைகள் மீறப்படல். சமூக. பொருளாதார உரிமைகள் மறுக்கப்படல். பாரபட்சம் காட்டும் நிலைமை, தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் என்பன சனநாயக முறையை பின்பற்றும் நாட்டுக்கு ஒவ்வாத விடயங்களாகும். எமது நாட்டின் தொழிலாளர்கள் கத்தி சிறந்த கல்வி அறிவை கொண்டவர்களை உள்ளடக்கியுள்ளதால் அடிப்படை உரிமைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு புரிய வைப்பது தொழிற்சங்கத் தலைவர்களால் உடனடியாக செய்யவேண்டியதொன்றாகும்.

## அவசர காலச் சட்ட ஒழுங்கு விதிகள்

இலங்கையில் முதற்தடவையாக அவசர காலச் சட்டம் 1942 மார்ச் மாதம் 19 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது. அது இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பொருட்டாகும் இலங்கையின் காலனித்துவ அரசாங்கத்தின் ஆளுனர் அவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் கீழ்வரும் 43 சி இலக்க பாதுகாப்பு (நானாவித) சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

1, இக்கட்டளை 1912 கட்டாயச் சேவைகள் (வேலை நிறுத்தங்களை தடுக்கும் கட்டளை) என்று அழைக்கப்பட்டது.

2. எந்தவொரு நபரும் எந்தவோர் கட்டாயச் சேவை தொடர்பாகவேனும் தொழிற்சங்கப் போராட்டங்களில் வேலை நிறுத்தங்களில் ஈறிபடல் அல்லது வெளியேறுதல் அல்லது அவற்றை மேற்கொள்ளல் கலந்து கொள்ளல் அவற்றை நீடிக்கச் செய்தல் போன்றவற்றை செய்தலாகாது.

5. ஓவ்வொரு மாவட்டங்களிலும் கட்டாயச் சேவைகள் தொடர்பான தொழிற் சங்க போராட்டங்களை தீர்த்துவைக்கும் பொருட்டு சடுவர் சபையாக அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட நீதியரசரே கடமை புரிவார்.

6. ஏதேனும் மாவட்டமொன்றில் தொழிலதிபர்களுக்கும் இடையில் தொழிற்பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் அந்த பிரச்சினையை - மாவட்டத்திற்கு பொருப்பான மாவட்ட நீதியரசர் மூலம் திர்த்து தரும்படி கேட்டு தொழிலதிபராலோ ஊழியராலே நிருவாகத்தருக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்ற காலத்தில் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தால் 1942 மார்ச் மாதம் 19 ஆம் திகதி 8888 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. சம்பளங்கள் சேவை நிபந்தனைகள் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானங்களை எடுத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தீர்வுக்கான இயலாத சந்தர்ப்பங்களில் அவற்றை ஆலோசனை சபைகளுக்கு முன்னளித்தல் வேண்டும் எனவும் அனைத்து தரப்பினரும் ஆலோசனைச் சபையின் முடிவுகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும் எனவும் வேலை நிறுத்தங்கள் அல்லது கடமைகளுக்கு செல்லாது தகுத்தல் போன்றவற்றில் ஈடுபடலாகாது, எனவும் 1940 ஆம் ஆண்டு வசந்த காலத்தின் போது பிரான்ஸ் வீழ்ச்சியின் பின்பு பிரித்தானிய தொழிலதிபர்களினது ஒன்றியத்தினதும், தொழிற் சங்க சம்மேளத்தினாலும் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய இணைந்த ஆலோசனை சபையால் சிபாரிசுகள் செய்யப்பட்டன.

பிரித்தானிய தொழில் அமைச்சர் அவர்களால் இந்த சிபாரிசுகளில் உள்ளடக்கப்பட்ட கோட்பாடுகள் ஏற்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் 58 எ இலக்கமுள்ள பாதுகாப்பு நிபந்தனைகள் (1940 1217) ஆம் இலக்க நியதிச் கட்டங்கள் கட்டளைகள்) மூலம் அந்த கிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டன. இந்த கட்டாயச் சேவை கட்டளைச் சட்டமானது ஜப்பான் படையினரால் இலங்கை கற்றிவளைக்கப்பட்ட காலப்பகுதியிலேயே விதிக்கப் பட்டது பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை கோரி இலங் கையில் உள்ள அறிவாளிகள் இக்காலத்திலேயே கோசங்களை எழுப்பினர். எந்தவொரு சூழ்நிலையிலும் நீதி மன்றத்தால் வழங்கப்படும் வழக்குத் தீர்ப்பினை பிரித்தானியர் நிராகரிக்க மாட்டார்கள் எனும் உறுதியான நிலைமை இதில் மிக முக்கியம் வாய்ந்ததாகும். 1971 ஆம் ஆண்டின் கலகத்துக்கு பின்னர் 1972 ஆம் அரசியலமைப்புத் திட்டத்திற் 134 (1) ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு எனும் பிரிவின் கீழ் இரண்டாவது அவசர காலச் கட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

134 (1) தேசிய அரசு பேரவை வேறு சட்டங்களை இயற்றினால் அன்றி பெபதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் கட்டம் உறிய திருத்தங்களுடன் அரசியலமைப்பு யாப்பின் ஏற் பாடுகளுக்கும் இப்பிரிவின் (2) ஆவது உப பிரிவினுக்கு உட் பட்டு தேசிய அரசுப் பேரவையால் விதிக்கப்பட்ட சட்டமா கக் கொள்ளப்படும்.

(2) நாட்டில் அவசர கால நிலைமை ஏற்பட்டுள்ளதாக அல்லது ஏற்பட அண்மித்துள்ளதாக பிரதம அமைச்சர் அவர் கள் ஜனாதிபதி அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் பட்சத் தில் அப்போது ஜனாதிபதி அவர்கள் அவசர கால நிலை மையை பிரகடனம் செய்தல் வேண்டும் அவசர கால நிலை மை தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை ஜனாதிபதி அவர்க ளால் எடுக்கப்பட வேண்டுமென சட்டத்தால் விதிக்கப்பட் டுள்ளவிடத்து அந்த அனைத்து நடவடிக்கைகளையும் நிறை வேற்றுகையில் அவசரகால நிலைமை தொடர்பாக ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி அவர்களுக்கு சட் டத்தால் அதிகாரம் கிடைத்திருப்பின் அந்த அனைத்து நட வடிக்கைகளின் போதும் ஜனாதிபதி அவர்கள் பிரதம அமைச் சர் அவர்களின் ஆலோசனைக்கு இணங்க செயற்படல் வேண் டும்.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 155 (2) மற்றும் (3) ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கு இணங்க 1978 மே மாதத்தில் மூன்றாவது அவசர கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை ஒழுங்குவிதிகள் பிரகடனபடுத்தப்பட்டன. 155 (2) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பாக தற்காலத்து நடைமுறையில் உளள சட்டத்தின் கீழ் அல்லது அவசர கால சட்டங்களை இயற்றும் அதிகாரத்துக்கு அரசியலமைப்பு யாப்பின் ஏற்பாடுகளைத் தவிர்ந்த எந்தவோா சட்டத்தினதும் ஏற்பாடுகளை திருத்கம் அல்லது இடைநிறுத்தம் கட்டளைகளை இயற்றும் அதிகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(3) ஏதேனும் சட்டமொன்றில் ஏற்பாடுகளை திருத்தும் அல்லது அந்த ஏற்பாடுள நடைமுறைப்படுவதை இடைநிறுத்தம் கட்டபூர்வமான அதிகாரமுள்ள அவசர காலச் சட்டங்களை இயற்ற ஜனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்படும் பொது மக்கள் பாதுகாப்பான ஏதேனும் சட்டமொன்றின் ஏற்பாடுகள். ஏற்பாடுகளை செயற்படுத்தி அந்தச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டாலன்றி செயற்படுத்தலாகாது.

தற்போது இலங்யைில்க பொதுமக்கள் பதுகாப்பு சட்டமூலம் ஒன்று உள்ளது எனவும், அந்த சட்ட மூலத்தின் கீழ் நாடு பூராகவோ அல்லது ஓர் குறிப்பிட்ட பிரதேசத்திலேயோ அவசர கால நிலைமையை பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதி அவர்களுக்கு இயலும் என்பதை இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும். மாதத்துக்கு பின்பு அவசரகாலச் சட்ட பிரகடனம் தானகவே இரத்தாகும். எனினும் தேவைப்படும் என ஜனாதிபதி அவர்கள் கருதும் வரை மாதா மாதம் தொடர்ந்து நீடிக்கப்படும்.

அவசர கால நிலைமை சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த கட்டளையின் கீழ் நிருவாகத்தை மேற்கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி அவர்களுக்கு இயன்ற போதிலும் பாராளுமன்றத்தில் அறிவித்தல் வேண்டும். பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய அவசர கால நிலைமை அவசர காலச்சட்டத்தின் கீழ் ஆழப்பட்டதால் இது மேலும் மிக முக்கியமான தொன்றாக விளங்கும்.

தற்போது உள்ள அவசரகால நிலைமை 1989 ஜூன் மாதம் 26 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்டதுடன்: அது மாதாந்தம் நீடிக்கப்பட்டுள்ளது இந்த பிரமாணங்கள் தொழிலாளர்களுக்கு நேரடிய தாக்கத்தை விளைவிக்கின்றன அன்றாட வாழ்க்கைப் பணிகளுடன் தொடர்புபடும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கப்படும் இந்த பிரமாணங்கள் தொடர்பாக பெரும்பாலும் தொழிலாளர்கள் ஏதும் அறியாதவர்களாகவே விளங்குகின்றனர்.

இந்த அவசர காலச் சட்டம் ஒழுங்குவிதிகளை நாடு முழுவதும் செயற்படுத்துவது தேவையற்றதாகும். என்பதுடன் தேவைப்படும் பிரதேசங்களில் மாத்திரம் செயற்படுத்துவது போதுமானது என்பதே எமது கருத்தாகும்.

## கட்டாயச் சேவைகள் சட்டம்.

1942 இல் விதிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது கட்டாயச் சேவைச் சட்டம் எம்மால் கலந்துரையாடப்பட்டது டன் அது அன்று தொழிலாளர்களைப் பொறுத்தவரை நியாயமான தொன்றாகவே விளங்கிற்று. என்பது எமது நம்பிக்கையாகும். 18 (2) வது ஒழுங்கு விதியை போலன்றி 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு யாப்பில் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

> 18 — 2 "இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் அனுபவிக்க இயன்றமை, செயற்படுத்தக்கூடியமை நாட்டின் ஐக்கியம் ஒருமைப்பாடு, அரசாங்கத்தின் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, நாட்டின் நிலைப்பாடு என்பவற்றை உறுதி செய்யும் பொருட்டும் தேசிய பொருளாதாரம், பொதுமக்கள் சுகாதார நலன், ஒழுக்கம், மற்றோரின் உரிமைகள் சுதந்திரம் என்பவற்றை பாதுகாக்கும் பொருட்டும் 16 ஆம் பிரிவினில் காட்டப்பட்டுள்ள அரசாங்கக் கொள்கைகள் தொடர்பான கோட்பாடுகளை நடமுறைப் படுத்தும் பொருட்டும் சட்டத்தால் விதிக்கப்படும் எல்லைகளுக்கு உட்பட்டதாகும்.

அரசரங்கப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கமான அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்களின் சங்கத்தால் மேற்கொள்ளவிருந்த வேலைவிறுத்தத்தை முறியடிக்கும் பொருட்டு 1979 ஒகஸ்ட் மாதம் 30 ஆந் திகதி அவசரமாக சட்டமூலமொன்று இயற்றப்பட்டதுடன் அதன் பின்பு 1978 ஆம் ஆன்டிற் அரசியலமைப்பு யாப்பின் 155 (2) மற்றும் 93) ஆம் பிரிவுகளின் கீழுள்ள கட்டாயச் சேவை பிரமானங்கள் வலுவில் கொண்டுவரப்பட்டன. அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத் தாபனங்கள், பிரதேச அதிகாரச் சபைகள், கூட்டுறவுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்கள் என்பவற்றால் வழங்கப்படும் சேவைகள் கட்டாய அரசாங்கச் சேவைகளாக் பிரகடனப்படுத்துவதற்கு இந்த சட்ட மூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த சட்டம் கட்டாயச் சேவை சட்டமூலம் என்று அழைக்கப்பட்டது. அரசாங்க திணைக்களங்கள் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், பிரதேச அதிகாரச் சபைகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றால் வழங்கப்படும் பலவகைப்பட்ட சேவைகள் தொடர்பாக பூரணமான பட்டியலொன்று சட்ட மூலத்திற்கான அட்டவனையில் காட்டப்பட்டுள்ளது. பட்டியல் நீணடதாக இருப்பதால் இங்கு குறிப்பிடுவது கடினமாகும்) ஜனாதிபதி அவர்கள் கருதும் வகையில் ஏதேனும் சேவை யொன்று மக்களின் வாழ்க்கையின் பொருட்டு இன்றியமை யாதொன்றாக விளங்கும் போது அந்த சேவையை கட்டாயச் சேவையாக பிரகடனப்படுத்த அவருக்கு அதிகாரம் உண்டு, அந்த சட்டமூலம் பின்வருவனவற்றை தடை செய்துள்ளது.

(எ) அத் திணைக்களத்தின், கூட்டுத்தாபனத்தின். பிர தேச அதிகார சபையின் அல்லது கூட்டுறவுச் சங்கமொன்றின் ஊழியரொருவர் குறிப்பிட்ட கடமையை நிறைவேற்ற தவறு மிடத்து அல்லது மறுக்குமிடத்து அல்லது பேற்பார்வையா ளரின் கருத்தின் படி குறிப்பிட்ட கால எல்லைக்குள் அதை நிறைவேற்ற தவறுமிடத்து அல்லது மறுக்குமிடத்து அந்த ஊழியர் சட்ட மூலத்தின் கீழ் குற்றவாளியாவார்.

(பி) ஏதேனும் விதத்தில்

i. அந்த கடமையை செய்யவிடாது தடுத்தல். அதற்கு இடையூறு செய்தல். தாமதப்படுத்தல், இடை நிறுத்தல்.

ii. தமது சேவைநிலையத்தில் கடமைபுரியும் வேறு ஊழியர் ஒருவரை கடமையிலிருந்து தடுத்தல், அவருக்கு இடையூறு விளைவித்தல்.

iii. தமது சேவை நிலையத்தில் கடமை புரியும் போது ஊழியர்களை கடமையில் ஈடுபடாமல் இருப்ப தற்கு அவர்களை தூண்டுதல், ஊக்குவித்தல்.

iv. தனது சேவை நிலையத்திலிருந்து வெளியேறும்படி இன்னுமோர் ஊழியரை நிர்ப்பந்தம் செய்தல் தூண்டுதல் ஊக்குவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. அத்தகய சேவையை செய்யும் பொ ட்டு கடமை ஏற்பதிலிருந்து மற்றுமோர் நபரை தடுத்தல்.

என்பன இந்த சட்டமூலத்தினால் தடை செய்யப் பட்டுள்ளன.

(சி) செயலினால் பேச்சினால். எழுத்து மூலமாக வேறோர் நபரை மேலே (பி) யில் (1) தொடக்கம் (4) வரையுள்ள பந்திகளில் காட்டப்பட்டுள்ள செயல்களின் பொருட்டு தூண்டினால், ஊக்குவித்தால், அந்த நபர் அத்தகய செயலை செய்தாலும் செய்யாவிட்டாலும் தூண்டிய அல்லது ஊக்குவித்த நபர் குற்றவாளியாவார்.

இந்த குற்றத்துக்கு வருடத்துக்கு குறையாத 5 வருடத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் மற்றும் / அல்லது ரூபா 2,000/- க்கு குறையாத 5,000/- க்கு மேற்படாததுமான அபராதமோ விதிப்பதற்கு நீதிமன்றத்துக்கு இயலும். என்பதுடன் அதற்கு மேலதிகமாக

4. 1 குறிப்பிட்ட நபரை குற்றவாளியாக்கும் கட்டளை ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட்டதன் பின்னர் பிறர் மயமாக்கப்பட்ட அல்லது விற்ற கொத்துக்கள் உட்பட அனைத்து சொத்துக்களையும் அரசாங்க உடமையாக்கும் கட்டளையை வழங்குவதற்கோ அல்லது

4. 2 குற்றவாளியாக்கப்பட்ட நபருக்கு ஏதேனும் தொழிலொன்றில் தொழிலில் ஈடுபட தகமை கிடைக்கும் விதத்தில் எழுத்து மூலச் சட்டத்தில் கீழ் பேணப்படும் பதிவேடுகளில் தமது பெயரை பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த பதிவை இரத்துச் செய்வதற்கான கட்டளையொன்றை வழங்க. நீதிமன்றத்துக்கு இயலும்.

இந்த சட்டமூலத்தை அல்லது அதில் ஏதேனும் ஏற்பாடொன்றை 85 வது ஒழுங்கு விதியின் (2) வது பந்தியிற் கீழ் பொதுமக்களின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அதன் மூலம் பொதுமக்களின் அனுமதியை பெறுவது தேவையா என்பதை தீர்மானிக்கும் பொருட்டு, அதை உயர் நீதிமன்றத்துக்கு முன்னளித்தன் பின்பு அந்த வழக்குத் தீர்ப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட முக்கியமான குறிப்புக்களை இங்கு விபரிப்பது மிகவும் உபயோகப் படல் கூடியதாகும்.

தண்டனைகளின் அளவு அதிகமாக உள்ளதால் இந்த தண்டனை ஏற்பாடுகள் மிகவும் பாரதூரமானவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் 4 வது பிரிவில் குற்றத்தின் அளவை கருத்திற் கொள் ளாது அனைத்து குற்றங்களுக்கும் ஒரே சமமான முறையில் விதிக்கபபட்ட பொது கட்டளையாகும்.

எமது கருத்து யாதெனில் பழைய தண்டனை முறையின் கீழோ அல்லது புதிய தண்டனை முறையிற் கீழோ அதிக மான தண்டனைகளை விதிக்கும் இத்தகைய சிக்கலான தண்டனைகளை வழங்கும் சந்தர்ப்பங்களை செல்லுபடியான வைகளா விளங்கக் செய்ய வேண்டின் அரசியலமைப்பில் கீழ் காட்டப்படும் 11 வது அத்தியாயத்தின் கீழ் ஆய்வினுககு உட்படுத்தப்பட வேண்டும்.

எந்தவோர் நபரையும் கொடுமைப்படுத்தும் சித்திரவதைப் படுத்தும் மனிதாபிமானமற்ற முறையில் இழிவுபடுத்தும் செயலுக்கோ தண்டனைக்கோ உட்படுத்தல் ஆகாது'' எமது கருத்துக்கு இணங்க இது தண்டனை அதிகமாக இருப்பதை மட்டுமல்ல எந்தவித கருணையும் இல்லாமல் தண்டனை விதிப்பதையும் குறிக்கின்றது.

''எமது கருத்துக்கு இனங்க கட்டாயச் சிறைத் தண்டனை மற்றும் அதிகாரத்துக்கு மேலதிகமாக குற்றவாளியின் சொத் துக்கள் அரச உடமையாக்குதல், மற்றும் அவரின் பெயர் தொழில் பெறுவோரின் பட்டியலிலிருந்து அகற்றுதல் என்பன எல்லையையும் மீறி தண்டனை விதிப்பதையும் மற்றும் மிக்ககொடூரமான முறையில் தண்டனைகளை விதிப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. கருமது கிரத்துக்கு எணங்க சட்ட மூலத்தின் 4 வது பிரிவு அரசியலமைப்பின் 11 வது பிரிவுக்கு முரணானதாகும்.

உயர் நீதிமன்றமானது இந்த பயன்பாட்டுக்கு தகுதி யற்ற ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட சட்ட மூலத்லதை நிறை வேற்ற இயலாது என்பதை அல்ல அரசு அரசியலமைப்பில் உள்ள இரண்டு ஏற்பாடுகளை பின்பற்றுமாயின் மற்றும் நிறைவேற்றுமாயின் மேற்குறிப்பிட்ட சட்டமூலத்தை சட்ட மாக நிறைவேற்ற இயலும், என்பதையே குறிப்பிடுகின்றது இந்த ஏற்பாடுகள் அரசாங்கத்திலிருந்தும், பாராளுமன்றத் திலிருந்தும் மக்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவே விதிக்கப்பட்டுள்ளது அந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் கீழ்வரு மாறு

1. பயன்பாட்டுக்கு தகுதியற்ற ஏற்பாடுகளை உள்ளடக்கிய சட்டமூலத்தை அரசாங்கத்தின் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட வாக்குளால் நிறைவேற்றுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இந்த சட்ட மூலம் ஜனாதிபதி அவர்களால் மக்களின் வாக்கெடுப்புக் விடப்படல் வேண்டும்.

அரசாங்கம் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மையைக் கொண்டிருந்த போதிலும் குறிப்பிட்ட சட்ட மூலத்தை மக்கள் வாக்கெடுப்புக்கு விட்டால் பொது மக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதுடன் அவ்வாறு செய்யுமிடத்து ஏற்படக்கூடிய நிலைமையை உணர்ந்த அரசாங்க உயர்நீதி மன்றத்தின் ஆலோசனையை ஏற்று தகுதியற்ற ஏற்பாடுகளை சட்ட மூல வரைவிலிருந்து அகற்றி அதை பாராளுமன்றத்துக்கு முன்னளித்தது. மற்றைய ஏற்பாடுகளுடன் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டது.

அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தால் மேற்கொள்ளப்படவிருந்த வேலை நிறுத்தப் பயமுறுத்தல் காரணமாக நிறைவேற்றப்பட்ட கட்டாய அரசாங்கச் சேவை சட்ட மூலத்தினால் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு மட்டுமல்ல அரசாங்க, பகுதி அரசாங்க, உள்ளூராட்சி, கூட்டுத்தாபன, பெருந்தோட்டத் துறைகளிலுள்ள அனைத்து ஊழியர்களுக்கு அவர்களின் நண்பர்களுக்கும் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 40) 1993. 06. 17ஆந் திகதி 771/16 ஆம் இலக்கமுள்ள வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டது. எவ்வாறு இருப்பினும் கட்டாயச் சேவை பிரமாணங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டன. அதன் 31 (1) ஆம் பிரிவின்படி 1993 ஜூன் 17 ஆம் திகதி அல்லது அதற்கு பின்பு கட்டாயச் சேவையாக அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அந்தவொரு சேவையிலும் அமர்த்தப்பட்டுள் அல்லது அத்தகய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள எந்தவோர் நபரேனும் அத்தகய வேலை நிறுத்தமொன்றில் ஈடுபட்டால், சட்டப்படியாக அனுமதியைப் பெறாமல் கடமைக்கு சமூகமளிக்கத் தவறினால் அல்லறு மறுத்தால்

1. வேறு சட்டமொன்றில் அல்லது தொழிலொன்றுக்கு உரித்தான ஒப்பந்தத்தில் நிபந்தனையில் காட்டப்பட்டவற்றை கருத்திற்கொள்ளாது அவர்கள் சேவையை முடித்து அல்லது சேவையை விட்டு விலகிச் சென்றவராக கருதப்படுவார்

2. இதற்கு மேலதிகமாக குற்றமொன்றை புரிந்து குற்றவாளியாகவும் கருதப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாத அரச சேவைகள் சட்டம் வலுவிலிருக்கும் போது தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட சில தொழிற்சங்கங்களைப் பற்றி கலந்துரையாடுவோம். வேகமாக அதிகரிக்கும் பணவீக்கத்தின் காரணமாக 1990 ஜூலை மாதத்தில் அரச துறைகள் மற்றும் தனியார் துறைகளைக் சேர்ந்த தொழிலாளிகள் 300/- ரூபா கொடுப்பனவொன்றை கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 50,000 க்கு மேற்பட்ட அரசதுறை மற்றும் தனியார் துறை வொழிலகளிகள் மாபெரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்கள் தொடர்பில் கட்டாயச் சேவை ஓழுங்கு விதிகள் செயற்படுத்தப்பட்டன. அவர்கள் அனைவரும் பதவிகளைக் கைவிட்டுச் சென்றவர்களாகக் கருதப்பட்டார்கள். இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 14 (1) (சீ) மற்றும் (டி) ஆகிய பிரிவுகளின் கீழ் ஒன்று கூடும் சுதந்திரம் மற்றும் தொழிற்சங்கங்களை அமைக்கும் தொழிற்சங்கங்களின் சேரும் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் காட்டப்பட்டிருப்பினும் அரசதுறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் நடுத்தரத்திலான 40,000க்கு மேற்பட்டவர்கன் பதவி நீக்கம் செய்ப்பட்டார்கள்' நனில் விக்கிரமசிங்காவுக்கு எதிராக யசபால என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் மூலமாகவே இலங்கையில் வேலை நிறுத்தம் செய்வதற்குள்ள உரிமை பற்றி கேள்வி உயர்நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டது மனுவைத் தாக்கல் செய்த சகோதரர் யசபால அரச துறையில் உதவி ஆசிரியரொருவராக இருந்து 1980 ஜூலை லேலை நிறுத்தம் காரணமாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

சகோதரர் யசபால அரசியலமைப்புச் சட்டத்தின் 14 (1) (சீ) - (டி) பிரிவுகளின்படி வேலை நிறுத்தம் செய்தல் தொழிற்சங்கச் சடட்த்திற்கு அமைவான நோக்கமாக இருப்பதால் கல்விச் சேவையைச் சேர்ந்த ஆசிரியராக தன்னை மீண்டும் சேவையில் அமர்த்தும்படி தனது மனு மூலம் கேட்டுக் கொண்டார்.

அரசியலமைப்புக் சட்டத்தின் (1) 1 (டி) பிரிவின் படி தொழிலாளிகளுக்கு தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் தொழிற்சங்கங்களில் சேர்வதற்கும் சுதந்திரம் உள்ளதென்றும் அத்தகைய உரிமையை கட்டுப்படுத்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (7) ஆம் பிரிவின் கீழுள்ள ஏற்பாடுகளினால் சட்டப்படியான தடைகள் ஏற்படாது என்று ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் தொழிற்சங்கங்களை அமைக்கும் உரிமையின் அம்சமாக விளங்கும் அதனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் இணைந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையை சட்டவாக்கங்கள் மூலம் கட்டுப்படுத்த இயலும் என்பது அதன் மூலம் கருதப்படவில்லை என உயர் நீதிமன் றத்தால் குறிப்பிடப்பட்டு யசபால சகோதரரின் மனுவை நிராகரித்தது.

தொழிற்சங்கங்களை அமைக்கும் போது அதில் நோக்க மாக கொண்டுள்ள அனைத்து தேவைகளையும் நிறைவேற்றிக் கொவதற்கு உறுதி செய்யப்பட்ட உரிமைகள் வழங்கப்படு மிடத்து தொழில் வழங்குவோர் தொடர்பாகவும் அத்தகைய உரிமைகளை வழங்க நேரிடும் எனவும் அதற்கிணங்க சேவை நிலையத்திலிருந்து வெளியேற்றும் உரிமையையும் அடிப்படை உரிமையாக ஏற்றுக் கொள்ள நேரிடும் எனவும் நீதிமன் றத்தால் குறிப்பிடப்பட்டது. இது பொருந்தாத எடுகோ ளாகும்.

ஊழியர்களால் வேலை நிறுத்தம் செய்யப்படுவது சில சந்தர்ப்பங்களில் நியாயமான தொன்றாக தென்பட்ட போதி லும் அது தொழிலாளர்களின் அடிப்படை உரிமையல்ல எனவும் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை சட்டப்படி வரையறுக் கலாம் எனவும் அத்தகய சட்டப்படியான உரிமையை மீறுவது அரசியலமைப்பிற் 126 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் முறைப் பாடு செய்வதற்கான விடயமாக கொள்ள இயலாதெனவும் நீதியரசர் சர்வானந்த அவர்களால் கூறப்பட்டது.

இதனுடன் தொடர்புபட்ட வேலை நிறுத்தமும் அதனால் ஏற்பட்ட எதிர்த் தாக்கங்களும் இலங்கையில் தொழிற்சங்க இயக்கத்துக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. 300/- சம்பள உயர்வை கேட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் பதவியிலிருந்து விலகிச் சென் றமைக்காக அறிவித்தல் வழங்கப்பட்டு அவர்களை நீக்கிய போதிலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாதவர்களுக்கு அந்த 390/- ரூபாவும் அதற்கு மேலதிகமாக சம்பள உயர்வும் வழங்கப்பட்டது. உயர் நீதிமன்றத்துக்கு முன்னளிக்கப்பட்ட இன்னுமோர் வழக்கொன்றை இங்கு ஆராய்ந்து பார்ப்போம்,

இந்த வழக்கு அரசாங்க நிர்வாக அமைச்சர் திரு மோன் டேகு ஜயவிக்ரமவுக்கு எதிராக அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்டதாகும். அரசாங் கச் சேவையில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்க மொன்றான அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார் சங்கத்துக்கு உரித்தான தாதிமார்கள் சம்பள உயர்வு கோரி 1986 மார்ச் ஏப்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களின் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். மறுபடி கட்டாயச் சேவை கட்டளை மூலம் வேலை நிறுத்தம் சட்டப்படியற்றது என்று அறிவிக்கப்பட்டது. சங்கத்தின் சில அங்கத்தவர்களுக்கு பதவிகளை விட்டு நீக்கிச் செல்லவும் அறிவித்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் வேலைநிறுத்தம் முடிந்ததன் பின்னர் பதவியை விட்டு நீங்கிங்கிச் செல்லும் அறிவித்தல் கடிதங்கள் வாபஸ் பெறப்பட்டன.

இத்துடன் வேலை நிறுத்தக் காலத்தில் கடமையில் ஈடுபட்ட எதிர் தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள் 2600 பேருக்கு அரசாங்கத்தால் விசேட சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டன. இந்த கொடுப்பனவுகள் தொடர்பாக அரசாங்கச் சேவை ஐக்கிய தாதிமார்கள் சங்கமானது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமைக்கு எதிராக மனுத்தாக்கல் செய்லது அந்த மனு உயர் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஒரு பகுதி தாதிமார்களுக்கு மாத்திரம் குறிப்பிடட சம்பள உயர்வு வழங்கப்பட்டமை நியாயமற்ற முறையில் எதேச்சாதிகாரமாக அவர்களை வகைபடுத்தல் எனவும் அவ்வாறு செய்வதன் மூலம் அரசியலமைப்பிற் 12 வது பிரிவு மீறப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. துயரங்கள் ஏற்பட்டு தமது தொழிலதிபர்களுக்கு எதிராக தொழிற் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமைகளை உலகம் பூராகவும் உள்ள தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்றனர். சில சந்தர்ப்பங்களில் இது வேலை நிறுத்தமாகவும் அமையும் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை சிறு காரியமாக கருதுவதில்லை வேலை நிறுந்தத்தில் ஈடுபடுவது என்பது சம்பளத்தை இழப்பதாகும். விசேடமாக பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள இலங்கை போன்ற நாடொன்றில் வேலை நிறுத்தம் ஒன்றின் போது தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் முழுச் சமூகத்துக்கும் பெரும் இன்னல்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது. எவ்வாறு இருப்பினும் இத்தகய போராட்டங்களைத் தவிர்ந்த வேறு மாற்று வழிகள் இல்லையென தொழிலாளர்கள் நம்புமிடத்து அத்தகய வழிமுறையை பின்பற்ற அவர்களுக்கு உரிமை இருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

சொழிற்சங்க கட்டளைச் சட்டத்தில் 2 (4) வது பிரிவில் கீழ் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் உரிமை தொழிற்சங்கங்களுக்கு உரித்தான சட்டப் பூர்வமான உரிமையாகும்- இங்கு தொழில் ஒப்பந்தங்களை மீறுதல் தொடர்மான கட்டளைச் சட்டத்திற் 26 ஆவது பிரிவின் கீழ் உள்ள மற்றைய விடயங்களுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாகவும் தொழிற் சங்கப் போராட்டங்களை நீடிக்கும் பொருட்டு வேலை நிறுத் தங்ய்ள் செகவது தொடர்பாகவும் கட்டளைச் சட்டத்திற் 27 ஆவது பிரிவின் கீழ் கூறப்படுலதற்கு இனங்க தம்மை கொடுமைபடுத்தல்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் பாது காத்துக் கொள்ளும் சுதந்திரம் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களுக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் இருத்தல் வேண்டும். தொழிலாளர்கள் தொழிற்சங்க் வேலை நிறுத்தங்களை மேற்கொள்வதற்கு தீர்மானம் செய்ணதற்கான காரலம் தமது பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றுக்கு செவிச்சாய்த்து கலந் துரையாடல்கள் மூலம் அவற்றை தீர்த்து வைப்பதற்கு தொழி லதிபர்கள் உடன்படாமையே தொழிற்சங்கங்கள் வேலை நிறுத் தங்களை சட்டப்படியான வழிமுறையென நம்புவதாலேயே வேலை நிறுத்தங்கள் தொடர்பான அறிவித்தல்கள் செய்கின்றன. எவ்வாறு இருப்பினும் வேலை நிறுத்தம் செய்யும் அடிப்படை உரிமை அரசியலமைப்பினால் பாதுகாக்கப்படவில்லை என்பது எம்மால் முன்னளிக்கப்பட்ட விடய ஆய்வின் மூலம் தெளிவா கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 அத்தியாயம்

# அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்

அரசாங்கம் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்ய தெரிவுக் குழு ஒன்றை நியமித்துள்ளது. இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு மீதான திருத்தங்களும் மாற்றங்களும் பற்றிய உத்தேச கொள்கைகளைச் சமர்ப்பிக்குமாறு பொதுமக்களும் ஏனைய ஒழுங்கமைப்புக்களும் கோரப்பட்டுள்ளனர். இலங்கையில், அடிப்படை உரிமைகள் பற்றிய அரசியலமைப்பு சீர்திருத்தங்களும், அங்கீகரிப்பும் எல்லாக் கட்டங்களிலும் மேலிருந்து உருவாகியுள்ளன. இவை அநேகமாக மேலிருந்து கீழ்நோக்கிய விதிப்புக்களாக இருந்தனவேயொழிய கீழிருந்து மேல் நோக்கி படிவளர்ச்சி கண்டவையாக இருக்கவில்லை. இச் சீர்திருத்தங்கள் அவர்களது சொந்த உரிமைகளில் குறிப்பிடத் தக்கனவாக இருந்த போதிலும், எமது சமுதாயத்தினர் தமது விருப்பார்வங்களைப் பிரதிபலிப்பனவாக அவற்றை உணர்ந்து கொள்ளாமைக்கு இதுவே காரணமாக இருக்கலாம். தற்போதைய எமது அரசியலமைப்பு அமெரிக்க, பிரான்ஸ், பிரிட்டிஷ், அரசியலமைப்பின் வழித்தோன்றலாக இருப்பதுடன் பெரும்பாலான பொதுமக்கள் அறிந்திராத வகையில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்படும் பல்வேறு அப்போதைக்கான திருத்தங்களுக்கு உட்பட்டதாகவும் இருந்து வருகின்றது.

பகிரங்கசேவை சுதந்திர தொழிற்சங்க மாநாடு, 2 ஆவது குடியரசு அரசியலமைப்பு மீதான திருத்தங்களும், மாற்றங்களும் பற்றிய தெரிவுக்குழுவுக்கு பின்வரும் உறுப்புரைகள் சம்பந்தமாக உத்தேச கொள்கைகளைச் சமர்ப்பித்துள்ளது.

14—அடிப்படை உரிமைகள்

55—பகிரங்க சேவை

155—பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம்

உத்தேச கொள்கைகளைச் சமர்ப்பிப்பதில் பசேசு தொசமா ஆராய்ச்சிப் பிரிவு அனைத்துத் தொகுதியினருமான பகிரங்க அலுவலர்களின் எண்ணக்கருத்துக்களைப் பரிசீலிப்பதற்கான மதிப்பாய்வு ஒன்றை நடத்தியது. அதன் மூலம், இலங்கையில் தொழிலாளர் உரிமைகளின் தரவு விற்பனையாக அமையும் அநீதி பற்றிய அடிப்படைக் காரணிகளை நீக்குவதற்கு பகுப்பாய்வு அடிப்படைக் காரணிகளை நீக்குவதற்கு பகுப்பாய்வு சார்ந்த கட்டுக்கோப்பாக இந்த அறிக்கை இருக்கும். இலங்கையில் உள்ள அனைத்து தொழிலாளர்களினதும் சார்பில் இவ் வுத்தேசக் கொள்கைகளை சமர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்த ஒரேயொரு தொழிற் சங்க ஒழுங்கமைப்பு பசேசு தொசமா ஆகும். இத்திட்டத்திற்கு ஆஅசு தொறி உதவி வழங்கியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சர்வதேச சமுதாயம் முதற் கொடுக்கவேண்டியிருந்த முக்கிய பிரச்சினை யாதெனில் பெரியளவில் இடம்பெற்ற அடிப்படை உரிமை மீறல்களைத் தடுக்க வேண்டியிருந்தமையாகும். இவை தேசத்தின் பாது காப்புக்கும் சமாதானத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்தன. 1945 ஆம் ஆண்டில் ஐ. நா. பட்டயத்தை ஏற்றங்கீகரித்த அன்பிரான்சிஸ்கோ மாநாட்டின் உப குழுவொன்றினால் வழங்கப்பட்ட அறிக்கை அடிப்படை மனித உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் உத்தரவாதமாளிப்பதும், அவற்றைப் பாது காப்பதும் ஒவ்வொரு நாட்டினதும் உண்ணாட்டு விவகார மாகும் எனக் குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும் இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் படுமோசமாக மீறப்பட்டு சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் நிலைமை உருவாகினால் அல்லது பட்டயத்தின் ஏற்பாடுகள் அமுலாக் கப்படுவதைத் தடுக்கும் நிலையை உருவாக்கினால் அவை ஏதேனும் நாட்டின் உண்ணாட்டு விவகாரமாக இல்லாதொழி யும். எனவும் இந்த அறிக்கை எடுத்துக்கூறுகிறது. அப்போதி ருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரச்சினை சம்பந்த மாக 20 சர்வதேசச் சட்ட ஆவணங்களை ஏற்றங்கீகரித்து துள்ளது.

இவற்றுள் முதலாவது 1948 டிசெம்பர் 10 ஆம் தேதியன்று ஏற்றங்கீரிக்கப்பட்ட மனித உரிமைகள் பற்றிய பிரகடன மாகும். கீகரிக்கடனம் பெருமளவு செய்முறை முக்கியத்துவம் வாய்ந்த இரு மேலதிக ஆவணங்கள் உருவாக வழிவகுத்தது. 1966 ஆம் ஆண்டின் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சர்வதேச சமவாயமும், குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சர்வதேச சமவாயமும் ஆகும்.

அவை பிரகடனம் போலல்லாது வெறும் விதப்புரைகளா கவே இருந்தன. மனித உரிமைகள் துறையில் உள்ள சர்வதேச நியமங்கள் அவற்றுடன் ஒத்துப் போகத் தவறினால் அந்நிய மங்களுக்கு ஒத்து உண்ணாட்டுச் சட்டவாக்கங்களைக் கொணர அங்கீகரித்த நாடுகளுக்கு அவை உதவின. 1976 மார்ச் மாதமளவில் 35 நாடுகள் சமவாயங்ளை அங்கீகரித்திருந்தன. இந்த எண்ணிக்கை அவற்றை வலுவுக்கிட போதுமானதாகும். அதற்கிணங்க, பொருளாதார சமூக கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் 1976 சனவரி 3 ஆம் தேதியன் றும், குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் 1976 மார்ச் 23 ஆம் தேதியன்றும் வலுவுக்கு வந்தன.

1. சமவாயத்தின் 23 ஆம் உறுப்புரை கூறுவதாவது, <u>வேலை செய்வதற்கான உரிமை</u> என்பது தனியாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் பிரதான நிலையாகும். "ஒவ்வொருவரும் வேலை செய்வதற்கும், தொழிலை சுதந்திரமாகத் தேர்ந்தெடுப்பதற்கும் வேலை செய்வதற்கு ஏற்ற நியாயமான சாதகமான நிலைகளுக்கும், தொழில் வாய்ப்பின்மைக்கு எதிராகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரிமை கொண்டிருப்பர்"

2. சமூக நீதிக்கான உரிமை பற்றிய உறுப்புரை" சறுவதாவது போதிய உணவு, உடை வீட்டுவசதி உட்பட தமக்கும் தனது குடும்பத்தினருக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்தை அனுபவித்து அவ் வாழ்க்கை நிலைமைகளைத் தொடர்ந்து சீராக்குதல் ஒவ்வொருவரும் உரிமை கொண்டிருப்பர் என இச்சமவாயத்திற்கான திறத்துவ நாடுகள் ஏற்றங்கீகரித்துள்ளன."

3. உறுப்புரை 7 கூறுவதாவது" ஒவ்வொருவரும் இளைப்பாறவும், ஓய்வெடுக்கவும் நியாயமாக வேலை மணித்தியாளங்களுக்கும் சப்பளத்துடன் கூடிய காலாந்தர விடுமுறைகளுக்கும் உரிமையுடைய வராவார்.

4. சுகாதாரப் பாதுகாப்புக்கான உரிமை பற்றிய உறுப்புரை 12 கிடைக்கத்தக்க அதியுயர் உடல், உளச் சுகாதாரத் தரங்களைப் பற்றி கூறுகிறது. சமவாயத்திற்கான இந்த உரிமையை முழுமையாகத் தேறிப்பெறுவதற்கு திறத்துவ நாடுகளினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் சுகவீனம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அனைத்து மருந்துவ சேவையையும் மருத்துவக் கவனிப்பையும் உறுதிப் படுத்தும் நிலைமைகளை உருவாக்குவதற்கு அவசியமானவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்"

5. சமூகப் பாதுகாப்புக்கான உரிமை பற்றிய உறுப்புரை 9 கூறுவதாவது சமூகக் காப்புறுதி உட்பட சமூகப் பாதுகாப்புக்கு ஒவ்வொருவரும் உரிமை கொண்டிருப்பர். என இச்சமவாயத்திற்கான திறத்துவ நாடுகள் ஏற்றங்கீகரித்துள்ளன.

6. கல்விக்கான உரிமை பற்றிய உறுப்புரை 13 பின்வரும் நெறிகள் முழுமையாக அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு நாடுகளைத் தேவைப்படுத்துகின்றது.

(அ) ஆரம்பக் கல்வி கட்டாயமானதாகவும் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கத் தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) இரண்டாம் நிலைக்கல்வியும், உயர் கல்வியும், பொதுவில் கிடைக்கத் தக்கதாகவும் தோதாக ஒவ்வொரு வழிவகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் குறிப்பாக இலவசக் கல்வியை படிமுறையாக அறிமுகப்படுத்துவதன் மூலம் அனைவரும் அணுகத் தக்கதாக வும் இருக்கச் செய்தல் வேண்டும்.

7. நாட்டின் விவகாரங்களைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமை பற்றிய உறுப்புரை 25 கூறுவதாவது: ''ஒவ்வொரு பிரசையும் வேறுபாடுகள் இன்றி நியாயமற்ற மட்டுப்பாடுகள் இன்றி பின்வருவன வற்றிகான உரிமையும், வாய்ப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பொது விவகாரங்களைக் கொண்டு நடாத்துவதில் நேரடியாகவே சுயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபற்றுதல்.

(ஆ) தேருநர்களின் விருப்பத்தைச் சுதந்திர மாக வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்து வதும், இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படுவதுமான காலந்தோறும் இடம்பெறும் உண்மையான தேர்தல் களில் வாக்களித்தலும் தேர்ந்தெடுக் கப்படுதலும்.

8. சட்டத்தின் முன் ஒப்புரவு பற்றிய உறுப்புரை 26 கூறுவதாவது ''எல்லா ஆட்களும் சட்டத்தின் முன் ச்மம் என்பதுடன் ஓரங்காட்டல் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடை யவரும் ஆவர். இந்த வகையில் சட்டம் எவ்வகை ஓரங்காட்டலையும் தடை செய்தல் வேண்டும். என்பதுடன் இனம், நிறம், பால், மொழி சமயம் அரசியல் அல்லது ஏனைய அபிப்பிராயம் தேசிய அல்லது சமூக தோற்றுவாய் ஆதனம் பிறப்பு, அல்லது ஏனைய அந்தஸ்து போன்ற ஏதேனும் ஏதுவின் மீது ஓரங்காட்டப்படுவதற்கு எதிராக சமமான, பயனுறு பாதுகாப்பை அனை வரும்பெற உத்தரவாதமளித்தலும் வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியல மைப்பானது ஏனைய இரு கடந்தகால அரசியலமைப்புக் களிலும் பார்க்க கூடுதலாக ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் அனேகமான சமவாயங்களைத் தன்னகத்தே கொண்டு பேணி வருகிறது. குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சருவதேச் சமவாயத்தினதும், அடிப்படை உரிமைகளுக்கான அரசியலமைப்பு உத்தரவாவதங்களினதும் கட்டுபபோப்புக்குள் தற்போது நடைமுறையிலுள்ள அவசரகால ஒழுங்கு விதிகளை ஆய்வு செய்வதற்கான படேசு தொசமாஆராய்சிக் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன், இது அடிப்படை உரிமைகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ிருந்து கிளைவிடும் தொழிலாளர் உரிமைகளைப் பிரயோகிப்பதில் அவசரகால ஒழுங்கு விதிகள் கொண்டுள்ள கடுமையான போக்கை குறைப்பதற்கான வகைமுறைகளை விதந்துரைக்கும்.

## அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள் பற்றி பசேசு தொசமோ குழுவுக்குச் சமர்ப்பித்த உத்தேசக் கொள்கைகளில் எமது அரசியலமைப்பின் உறுப்புரை 27 (2) (இ) யின் ஏற்புடைமை பற்றி வளிமையான வாதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> 27 (2) (இ) கூறுவதாவது ''போதிய உணவு உடை வீட்டுவசதி, வாழ்க்கை நிலைமைகளில் தொடர்ச்சியான சீர்திருத்தம், ஓய்வு நேரத்தை முழுமையாக துயத்தல், சமூக, கலாச்சார வாய்ப்புக்கள் என்பன உட்பட எல்லாப் பிரசைகளும் அவர்களது குடும்பத்தினரும் போதியதான வாழ்க்கைத் தரத்தை அனுபவித்தல்''

1940 பிற் பகுதியிலிருந்து இலங்கைத் தொழிற்சங்கங்கள் வாழ்க்கை சம்பளங்களைக் சகாரிவந்துள்ளதுடன், அரச துறைத் தொழிற்சங்கங்களை அதற்காகப் பாடுபட்டு 1952 ஆம் ஆண்டில் வாழ்க்கைச் செலவுச் சுட்டி அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை நிறைவு கூற வேண்டும். எவ்வாறாயினும் வாழ்க்கைச் செலவு இன்று துரித வேவகத்தில் அதிகரித்து வருகின்றது அரசதுறை வேலைகயாட்கள் மாதமொன்றுக்கு 260 ருபாவுக்கு மட்டுமே உரித்துடையவராக இருக்கும் வேளையில் ஏனைய வேலையாட்களுக்கு வாசெ் சுட்டியின் முழுத்தொகையும் செலுத்தப்படுகின்றது. அரசதுறை வேலையாட்களும் தொழிற்சங்கங்களும் பிரதிநிதிகள் மூலமும், செய்தித்தாள்கள் மூலமும் கோரிக்கை விட்ட போதிலும் பலன் கிடைக்கவில்லை. எனவே தொழிற்சங்கங்கள் வேறு வழியின்றி கடுமையான பணவீக்கம் காரணமாக சம்பளம் கோரி வேலை நிறுத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. வேலை நிறுத்தங்கள். சட்டமுறையானவையோ சட்டமுறையற்றவையோ அல்ல . வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை தொழிற்சங்கங்கள் தமது கூட்டுப் பொருளாதார ச்முகநலன்களை பாதுகாப்பதற்கென துய்க்கும் அதி பயனுறு உரிமைகளுள் ஒன்று எனக் கருதப்பட்டது. வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை அரசியலமைப்பு அடிப்படை உரிமையொன்றாக உள்ளடக்கப்படவில்லை. (1980 — யசபால எதிர் ரனில் விக்கிரமசிங்க வழங்கில் உயர்நீதிமன்றத் தீர்ப்பு) வேலை நிறுத்தங்கள் சட்ட விரோதமானவை என அரசியலமைட்போ, வேறு ஏதேனும் சட்டவாக்கமோ எடுத்துக் கூறவில்லை. மனக்குறையைத் தீர்த்து வைப்பதற்கு அவசியமான வழிவகைகளை அரச் துறை வேலையாட்களுக்கு மறுக்கப்படும் போது, அவை தனியார் துறையில் போலல்லாது மறுக்கப்படுகின்றன. தனியார் துறையினரை பொறுத்த மட்டில் கைத்தொழிற் பிணக்குள் கூட்டம் கூட்டுப் பேரம் பேசுதலுக்கு கிடைக்கத் தக்கதாக விருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் துறையினருக்கு கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் பரிகாரமாக உள்ளது. சட்டத்தின் 49 ஆம் பிரிவு எடுத்துக் கூறுவதாவது.

1. கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தில் உள்ள எதுவும்:

(அ) தொழில்தருநர் என்ற தன்மையில் அரசுக்கு அல்லது அரசாங்கத்திற்கு அல்லது.

(ஆ) அரசில் அல்லது அரசாங்கத்தில் தொழிலுக்குமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒருவருக்கு,

அல்லது அவை அவர் தொடர்பில் ஏற்புடையனவாதல் ஆகாது.

இந்த ஏற்பாடுகளின் காரணமாக, அரச ஊழியர்கள் பிணக்குத் தீர்வு நாடுவதற்கு சம்பள ஆணைக்குழுக்களைத் தவிர மார்க்கம் எதுவுமில்லை. சம்பள ஆணைக்குழுக்கள் 6 ஆண்டுகளுக்கு ஒரு முறையே நியமிக்கப்படும். நிருவாகச் சீர்திருத்தக்குழு அதன் 9 அறிக்கைகளில் தேவையான சீர்திருத்தங்கள் பற்றி அரசாங்கத்திற்கு விதப்புரை செய்த போதிலும் பலன் கிடைக்கவில்லை. அரசாங்கம் உத்தியோக பூர்வமாக இச் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்ட போதிலும் அவற்றை அமுலாக்கவில்லை. குழு நாட்டுக்கு பல மில்லியன்கள் செலவை ஏற்படுத்துவதாக இருந்தது. இதனை சமூகத் தேவைகளுக்குச் செலவழித்திருக்கலாம். அனைத்து பகிரங்க சேவை ஊழியர்களுக்குமான வாழ்க்கைச் சம்பளக் கருத்துப்படிவம் பற்றி அறிவியல் ரீதியாகப் பகுப்பாய்வு செய்யும் விபரமான விபரக்குறிப்பொன்றை பசேசு சம்பள ஊழியர்கோப்பு குழுவுக்குச் சமர்ப்பித்தது. செய்தித்தாளர்கள் வாழ்க்கைச் செலவு பற்றி தலைப்புச் செய்திகளை வெளியிட்ட போதிலும், நாம் குழுவின் ஆணைக்குழுவின் அவதானிப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

உறுப்புரை 27 (2) (இ) எனவே பகிரங் துறை தொழிற் சங்கங்கள் தமது வாழ்க்கை நிலைமைகளின் தொடர்ச்சியான சீர்த்திருத்தத்திற்கு தமது அடிப்படை உரிமைகளை பயன் படுத்துவது சட்டவிரோதமானதாகும்.

அத்தியாவசிய பகிரங்க சேவைச் சட்டமூலம் இப்பொழுது 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பகிரங் சேவைச் சட்டம்) அரசியலமைப்பு ரீதியானது என்பது அவர்களது அபிப்பிராயத்தில் உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட பிரிவுப் பொதுமக்களுக்கு எதிரேதிரே 49 ஆம் பிரிவின் பயனையும் அவர்களது மனக்குறைகளை தீர்த்து வைப்பதற்கு பகிரங்க சேவையாட்கள் அல்லாதவர்களுக்கு தற்போது ஏற்புடையன வான சட்ட ஏற்பாடுகள் போன்று சாதகமான அடிப்படையில் நியதிச்சட்ட முறையான வழிமுறை எதுவும் இல்லை என்னும் நிசழ்வையும் கருத்திற் கொண்டு இத்தொகுதியினரான ஊழியர்கள் எத்தகையதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பாடுகள் செய்யக் காரணம் இல்லாத வகையில் அத்தகைய சாதகமான ஏற்பாடுகளை அவர்களுக்கும் கிடைக்கத் தக்கவைகளாக செய்யப்படுதல் வேண்டும் எனத் தீர்ப்பளித்த பார்க்க பாராளுமன்றச் சட்ட மூலங்கள் பற்றிய உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கள் 1978—1983)

கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தை ஒத்த சட்டம் ஒன்று அரசியலமைப்பிலே வேறேதேனும் சட்டம்ப் படிவத்திலோ இரு திறத்தவர்களையும் பிணிப்பதாக சட்டமாக்கப்பட வேண்டும் என டசேசு தொசமா முன்மொழிந்துள்ளது. இது பகிரங்க துறையில் கைத்தொழிற் சமாதானத்தைக் கொணர உதவும்.

## பகிரங்க சேவை

அரசாங்கமும் தொழிற்றுறையும் ஆயிரக்கணக்கான வேலையாட்களை அமர்த்தி உள்ளன. ஆனால் அவை இரண்டும் தமது அடிப்படை பணித்திட்டங்களிலும் மனித மூலவளங்களை முகாமை செய்யும் வழிவகைகளிலும் வேறுபட்டனவாக உள்ளன. பணித்திட்டல்களில் ஒரு அடிப்படை வித்தியாசம் யாதெனில் தனியார்துறை இலாபம் கருதியதாகும். ஆனால் பகிரங்கதுறை அவ்வாறல்ல. பகிரங்கத்துறை தொழில் முனைபானதாகும். அரசாங்கம் பொதுசனத்திற்கு சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு பகிரங்க துறையைப் பயன்படுத்துகிறது. பொதுசனம் தனியார் துறை வேலையாட்களிடமிருந்து எதிர்பார்ப்பதை விடக் கூடுதலானவற்றை அரசாங்க வேலையாட்களிடம் எதிர்பார்க்கின்றது. பொதுச் சேவையாற்றும் அரசாங்க வேலையாட்கள் பகிரங்க சேவை நலன்கருதி அக்கறை முரண்பாடுகளைக் தவிர்க்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் விசேட அக்கறைகளும் தனிப்பட்ட நன்மைகளும் தவிர்க்கப்படவேண்டும். மறுபுறம் தனியார் துறை ஊழியர்கள் அரசாங்க வேலையாட்களையும் பார்க்க மிகத் திறமையானவர்களும், உற்பத்தி நாட்டம் கொண்டவர்களும் என பொதுமக்கள் அநேகமாக நம்புகின்றனர். இப் பொதுப்பட்ட கருத்தில் உண்மை இருக்க முடியாது பகிரங்க சேவை முறை பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி முறை நாட்டடப் பொறுப்பேற்ற காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். அவர்கள் தமது ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிருவாக மற்றும் சமூகப் பணிகளுக்கென பிரிட்டிஷ் சிவில் சேவை முறையை அறிமுகப்படுத்தினர். டொனமூர் அரசியலமைப்பு சருவதேச் வாக்குரிமையை அறிமுகப்படுத்தி, அரசப் பேரவை தாபிக்கப்பட்டபோது பகிரங்க சேவை முறை சமூக வளர்ச்சியில் முகவர்களாகவும் அரசாங்கக் கொள்கையையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுலாக்குவதில் நியாயமான பங்களிப்புக்கும் நீதிக்கும் உத்தரவாதமளிட்போராகவும் செயற்பாட்டு இக் கூற்றை நியாயப்படுத்தியது. பகிரங்க சேவை பல எண்ணிக்கையில் வளர்ச்சி கண்டு சுகாதாரம், கல்வி, நிருவாகம் தொடர்பு முதலிய துறைகளில் மிகுந்த பயன்மிக்க நிகழ்ச்சித் திட்டங்களைத் தொழிற்படுத்தி பராமரித்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதுடன், சோல்பரி அரசியலமைப்பு வலுவுக்கு வந்தது. பகிரங்க சேவை முறை 1946 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் முக்கிய பங்கு வகித்தது. இந்த அரசியலமைப்பு "பகிரங்க சேவை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். இது மகாதேசாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பகிரங்க அலுவலர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் பதவிநிலை நீக்கல்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு இத்தால் உரித்தாக்கப்படுகின்றது." என வித்துரைத்தது.

இலங்கை 1972 ஆம் ஆண்டில் குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டது. முதலாவது குடியரசு அரசியலமைப்பில் 1946 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக அரசசேவைகள் ஆலோசனைச் சபையும், அரச் சேவைகள் ஒழுங்காற்றுச் சபையும் வலுவுக்கு வந்தன. 1946 ஆம் ஆண்டில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிகள் அமைச்சரவைக்கு உரித்தாக் கப்பட்டன. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப் புரை 106 கூறுவதாவது :

> 106 (1) அமைச்சரவை, அரச அலுவலர்களின் (பகிரங்க அலுவலர்களின்) நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி விலக்கல்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பனவற்றிற்கு பொறுப்புடையதாக இருத்தலும் ஆகவே தேசிய அரசுப் பேரவைக்கு வகைசொல்லவேண்டியதாக இருத்தலும் வேண்டும்.
>
> 106 (5) அரச அலுவலர்களின் நியமனங்கள், இடமாற் றங்கள், பதவிவிலக்கல்கள் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப் பாடு சம்பந்தமான ஏதேனும் விடயம் தொடர்பில் அமைச்சரவையினால் ஓர் அமைச்சரினால் அரச சேவை கள் ஆலோசனைச் சபையினால் அல்லது ஓர் அரச் அலுவலரினால் செய்யப்படும் ஏதேனும் விதப்புரை கட்டளை, அல்லது தீர்மானம் பற்றி விசாரணை செய்வதற்கு அதன் மீது தீர்ப்பு எடுத்து மொழிவதற்கு அல்லது எம்முறையிலேனும் அதனைப் பிரச்சினைக்கு குட்படுத்துவதற்கு நீதியை நிருவகிக்கும் நிறுவனம் எதுவும் தத்துவம் அல்லது நியாயாதிக்கம் கொண்டதாக இருத்தல் ஆகாது.

1946 முதல் 1972 வரையில் 1946 ஆம் ஆண்டின் பகிரங்க சேவை ஆணைக்குழு பகிரங்க சேவை சம்பந்தமான உ எல்லக விடயங்களிலும் நீதியையும் நியாயமான பங்களிட்பையும் வழங்கி வந்தது. இதுவே பகிரங்க சேவையின் அதி சிறந்த காலப்பகுதி எனக் கூறப்படுகின்றது. அரச பணித்தொகுதி பயனுறுதியுடனும் திறமையாகவும் பொருளாதார வளர்துடனு செயப்பட்டது. ஊழியர்களின் ஆற்றல் அறிவையும், தேர்ச்சித் திறன்களையும் அடிப்படையாகக் கொன்டு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்கு ஆட்திரட்டப்பட்டு நியமிக்கப்பட்டு பதவியுயர் பெற்றனர். ஆரம்ப நியமனத்திற்கு தகைமை பெற்ற விண்ணப்பகாரர்களையே கவனத்திற்கெடுப்பது அந்நாளில் நடைமுறையாக இருந்தது.

1946 ஆம் ஆண்டின் பகிரங்க சேவை ஆணைக்குழு, தனிப்பட்ட அனைத்து நிருவாக் அமிசங்களிலும் அரசியல் தொடர்பு, இனம், சமயம், சாதி பாகுபடின்றி விண்ணப்ப கரர்களும், ஊழியர்களும் நியாயமாக்கப் கணிக்கப்டடுவதை உறுதிப்படுத்தியதுடன், கட்சிப்பற்றுடைய அரசியல் நோக் கங்களுக்குக் கட்டாயப் படுத்துவதற்கு எதிராக பாதுகாப்பும் வழங்கியது. பகிரங்க துறையில் தொழிற்பிணங்குகள் குறை வாகவே காணப்பட்டன. இருந்த ஒரேயொரு பிணக்கு தேவையான உணவுப்பிரச்சினையாகும். இதன் மீது பகிரங்க சேவை ஆணைக்குழு எதுவித கட்டுப்பாடும் கொண்டிருக்க வில்லை.

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியல மைப்பு பகிரங்க சேவை ஆணைக்குழுவை உருவாக்கியது. இந்த ஆணைக்குழு அமைச்சரவைக்கு கீழமைந்ததாக இருந்தது. அமைச்சரவைக்குத் தத்துவங்கள் உரித்தாக்கப்பட்டிருந்தன.

> *அத்தியாயம்1 1 X — 55 (1)*
>
> *55 (1)—அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பகிரங்க அலுவலர்களின் நியமனம் இடமாற்றம், பதவிவிலக்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன அமைச்சரவைக்கு இத்தால் உரித்தாக்கப்படுகின்றன. என்பதுடன் பகிரங்க அலுவலர்கள் எல்லோரும் விரும்பிய காலத்துக்குப் பதவி வகித்தலும் வேண்டும். 55 (5)—126 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத் துக்கு அளிக்கப்பட்டிருக்கும் நியாயாதிக்கத்துக்கு அமை வாக, பகிரங்க அலுவலரொருவரின் நியமனம், இடமாற் றம், பதவிவிலக்கல் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமான ஏதேனும் கருமம் தொடர்பில் அமைச்சரவையினால் அமைச்சர் ஒருவரினால் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஒரு குழுவினால் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை யை அல்லது முடிவை நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் விசாரணை செய்வதற்கு, அதன் மீது தீர்ப்புக் கூறுவதற்கு அல்லது எம்முறையிலேனும் அதனை கேள்விக்குட்படுத்துவதற்குத் தத்துவமோ, நியாயாதிக் கமோ கொண்டிருத்தலாகாது.*

புதிய பகிரங்க சேவை ஆணைக்குழுவை அமைச்சரவைக்கு கீழமைந்ததாகச் செய்து பகிரங்க அலுவலர்களின் நியமனம் பதவி விலக்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமான அதன் தத்துவங்களை அமைச்சரவைச் செயலாளர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத் தலைவர்களுக்கும் நெறிப்படுத்தியதன் மூலம் ஆணைக்குழு அதன் ஆரம்பத் தத்துவங்களை இழந்து விட்டது. இக்கட்டத்தில், தற்போதைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவாகிய நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் 4 ஆம் இலக்க அறிக்கையைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இக்குழுவின் முடிவெடுப்புக்கள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு 1987—ஆம் இலக்க கூட்டத் தொடர் பத்திரமாக வெளியிடப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு தேசிய சருவதேச சிவில் சேவையாளரான திரு எஸ். செ. வனசிங்க தலைமைதாங்கினார். அவரும் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் இலங்கையின் பகிரங்க சேவை முறைபற்றி நுணுகி ஆராய்ந்து பின்வருமாறு அறிக்கையிட்டுள்ளனர்.

''குழு பெற்றுக் கொண்ட எழுத்திலான மற்றும் வாய் மொழிமூலமான முறையீடுகளில் காணப்பட்ட ஒரு பொதுவான ஆய்வுப்பொருள் யாதெனில் பகிரங் சேவையில் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, ஒழுக்காறு தொடர்புபட்ட தற்போதைய நடவடிக்கைமுறைகளும், வழக்காறுகளும் அத்துடன் அவை சம்பந்தமான நிறுவனஞ்சார் ஒழுங்கேற்பாடுகளும் மாற்றப் படுவது அவசியமாகும் என்பதாகும்.

தற்போதைய நிலை சம்பந்தமாக பகிரங்க சேவையின் எல்லா மட்டங்களிலும் ஊடுபரவிய திருப்தியீனம் காணப் படுகின்றது. இந் நிலை குழுவின் கருத்துப்படி சேவையில் ஒத்துக்கொள்ள முடியாத ஒழுங்குக் குலைவை ஏற்படுத்து கின்றது. தற்போதைய நிலையை பூரிபூரணமாகி மீள்மதிப் பாய்வு செய்து முழுமொத்தமாக மாற்ற வேண்டியதற்கான அவசியத்தை முறையீடுகள் ஒருங்கொத்து எடுத்துக் காட்டு கின்றன.''

ஒவ்வொரு பகிரங்க துறை தொழிற்சங்கமும் இக்குழுமுன் சாட்சியளித்துள்ளது. அறிவு சால தவிசாளர் திரு எச். எஸ் வனசிங்க அவரது குழுவுடன் பின்வருமாறு விதந்துரைத் துள்ளார்.

''இக்குழு அரசியலமைப்பின் கீழ் பகிரங்க சேவை ஆணைக் குழுவொன்று உருவாக்கப்படவேண்டும். என வலியுறுயாகி அவசரமாக விதப்புரை இது ஜனாதிபதியினால் நியமிக்கப்படு வதுடன் நேரடியாக அவருக்கு மட்டுமே வகை சொல்ல வேண்டியதாக இருத்தல் வேண்டும். இந்த ஆணைக்குழு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவதுடன் நேரடியாக அவருக்கு மட்டுமே வகை சொல்லவேண்டியதாக இருத்தல் வேண்டும். இந்த ஆணைக்குழு ஜனாதிபதியினால் வழங்கப்படும் பொதுவான வழிகாட்டல்களுக்கு அமைய பகிரங்க சேவையில் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவிவிலக்கல் விடயங்கள் சம்பந்தமாக அதன் அதிகாரத்தை சுதந்திரமாகப் பிரயோகிக்க வேண்டும்.

பசேசு தொசமா பகிரங்க சேவை பற்றிய அதன் சமர்ப் பணங்களில், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், புலமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசில்கள் மீது பாரியளவில் இடம் பெறும் ஓரங்காட்டல்கள் காரணமாக எழுந்துள்ள திருப்தியீனத்தை அகற்றி ஒழுங்கு நிலையை மீளக் கொணருவதற்கென பகிரங்க சேவை ஆணைக் குழு மீள உருவாக்கப்படுவதற்கான அவசரத் தேவையை எடுத்துக்கூறியுள்ளது, மதிப்பாய்வின் பெறுபேறுகள், பதவியுயர்வுத் திட்டங்கள், சிறப்புத் திறமை, கோட்பாடு ஆகியன துர்ப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதுடன் பணமிலாமைந்த சட்டக் கட்டணங்கள், கால் அவகாரம் காரணமாக 126 ஆம் உறுப்புரையிற் கீழ் உயர் நீதிமன்றத்திற்கு மனுவொன்றைச் சமர்ப்பிப்பதன் மேல் தமது தொழிலாளர் உரிமைகளைப் பயன்படுத்த முடியாமல் உள்ளது எனவும் சமர்ப்பணங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. பகிரங்க சேவை ஆணைக்குழுவை மீள உருவாக்குவதற்கென அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளை திருத்துவது பற்றி கவனத்திற்கெடுக்குமாறு பசேகுதொசாமா ச்மர்ப்டணங்களில் கோரியுள்ளது. அந்த ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருக்க வேண்டிய ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் தவிசாளர் ஒருவரையும் ஏனை இரு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். பகிரங்க சேவை ஆணைக்குழு பகிரங்க அலுவலர்கள் மீதான அனைத்துத் தத்துவங்களும் உரித்தாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனைத்து பகிரங்க அலுவலர்களினதும் நியமனங்கள் இடமாற்றங்கள், பதவிவிலக்கல்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் பொறுப்பாதல் வேண்டும். அன்பதுடன் இது ஜனாதிபதிக்கு மட்டுமே வகை சொல்லவேண்டியதாகவும் வேண்டும். அரசியலமைப்புக்கான 1 ஆம் அத்தியாயத்தின் 55 ஆம், 57 ஆம், 58 ஆம், 59 ஆம் பிரிவுகள் இந்த உத்தேச் திருத்தம் கருதி நீக்கப்படவேண்டும்.

## பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்.

ஒவ்வாத தொழிற்ச்ட்டங்கள் அவசரகாலச் ச்ட்டங்களின் கிளைவிளவு எனக் சறப்படுகின்றது. பொதுமக்கள் பாதுகாப்புச கட்டளைச் ச்ட்டத்திலிருந்து கிளைவிடும் அவசரகாலச் சட்டங்கள் பற்றி முந்போந்த அத்தியாயங்களில் விரிவாக ஆராய்ந்தோம். 1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கங்களின் 111 ஆம் அத்தியாயம்) 17 (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி 1942 மார்ச் 19 ஆம் தேதிய 8888 ஆம் இலக்க கசெற்று அறிவிப்பின் மூலம் 1947 ஆம் ஆண்டில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது முதன்முதலாக அத்தியாவசியச் சேவை சட்டனளயை பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் பிரகடனப்படுத்தியமையை நினைவுகூரவேண்டும். பொதுமக்கள் பாதுகாப்புக் குந்தகம் விளைவிக்கும் சூழ்நிலைகள் எழுந்தால் குறித்த சில சேவைகள் அத்தியாவசியமானவையென வெளிப்படுத்த ஜனாதிபதி தத்துவம் கொண்டவராதல் வேண்டும். அத்தியாவசிய சேவை ஒன்றில் ஈடுசெய்யப்பட்டுள்ள எவரேனும் ஆள் வேலை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுப்பது அல்லது எவரேனும் நமது சேவைகளைச் செய்யும் போது முட்டுக்கட்டையிடுவது, அல்லது ஆளொருவரை அவரது ஊழியத்தைச் கைவிட்டு செல்லுமாறு தூண்டுவது தவறென்றாக அமையும், ஆநே வேளையில் கைத்தொழிற் பிணக்கொன்றை முன்னெடுத்துச் செல்வதற்காக மட்டுமே பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கமொன்றினால் வேலை நிறுத்தத் தின்படின் கட்டளைச் சட்டத்தின் 111 ஆம் பாகத்தின் 17 (2) ஆம் பிரிவு அதனை தவறொன்றாக அமையச் செய்வதில்லை.

40 ஆம் அத்தியாயமான பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால ஒழுங்கு விதிகள் மூலம் அத்தியா வசிய சேவைக்கட்டளையை அதன் 32 (1) கூறுவதாவது பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கான அட்டவணையில் குறித் துரைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய சேவையொன்றாக உள்ள சேவையில் 1993 யூன் 17 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஈடுபட்டுள்ள அல்லது அச் சேவை தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அரசாங்க அரசாங்க சார்புள்ள உள்ளூராட்சி தேயிலை இறப்பர், தெங்குத் தோட்டங்கள், சேவைகளும் தனியார் போக்குவரத்து வேலையாட்களும், ஏதேனும் உணவுப் பொருளை மருந்தை அல்லது செப்பா துமக் களுக்குத் தேவையான வேறு ஏதேனும் பொருளை விற்பனை செய்வது, வழங்குவது அல்லது பகிர்ந்தளிப்பது தொடர்பில் செய்யப்பட அவசியமான அல்லது தேவையான எத்தகையது மான ஏதேனும் விவரணத்தைச் சேர்ந்த அனைத்துச் சேவை களும் இதில் அடங்கும் எவரேனும் ஆள்.

(அ) அத்தகய கட்டளைத் தேதியிலிருந்து ஒரு நாள் கழிந்த பின்னர் சட்டமுறையான மன்னிப்பு இன்றி அவரது வேலைத் தலத்திற்கு வருகை தரத் தவறினால் அல்லது மறுத்தால்

(ஆ) அத்தகய கட்டளைத் தேதியிலிருந்து ஒரு நாள் கழிந்த பின்னர் சட்டமுறையான மன்னிப்பின்றி வேலை செய்வதற்கு தவறினால் அல்லது மறுத்தால்.

(இ) குறித்துரைக்கப்பட்ட சேவையில் ஈடுபட்ட அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவராக இருந்து, சட்டமுறையான மன்னிப்பு இன்றி அத்தகய வேலையை நிறைவேற்றத் தவறினால் அல்லது மறுத் தல் அல்லது ஒரு வேலை நிறுத்தத்தை அல்லது ஏனைய ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கையை முன்னெடுத்துச் செல் வதற்காக அவ்வாறு வருகை தரவோ அவ்வாறு வேலை செய்யவோ மறுத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது அவரது தொழிலை ஆளும் ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதி, நிபந்தனைகளில் முரனாக எது எப்படியிருப்பினும், எல்லா நோக்கங்களுக்காகவும், தமது தொழிலை உடனடியாக முடிவுறுத்தியுள்ளார். அல்லது வறிதாக்கியுள்ளார். எனக் கருதப்படுதல் வேண்டும்.

2. மேலும் தவறொன்றுக்கு குற்றவாளியாதலும் வேண்டும்.

2. அத்தியாவசியச் சேவையொன்றாக உள்ள ஏதேனும் சேவை இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடத்து''

வேறு எவரேனும் ஆள் தொழில் வழங்குவதை அல்லது ஏற்றுக்கொள்வதைத் தடுக்கும் அதற்கு முட்டுச் கட்டளையிடும் தாமதப்படுத்தும் அல்லது எதிர்க்கும் தடை செய்யும் ஆள் எவரும் அல்லது ஏதேனும் உடற்செயற்பாடு மூலம், அல்லது பேச்சு மூலம் அல்லது எழுத்து மூலம் உட்பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலைப்புரியத்தூண்டும் ஊக்கமளிக்கும் எவரேனும் ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

1942 ஆம் 1947 ஆம் ஆண்டுகளில் ஆக்கப்பட்ட அத்தியாவசியச் சேவைக் கட்டளைப் பற்றிய ஏனைய இரு அவசரகால ஒழுங்குவிதிகளிலும் பார்க்க இந்த ஏற்பாடுகள் கடுமையானவையாகும். வியாபாரப் பிணக்கொன்று இருக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம், இணக்கச் சட்டமொன்றின் கீழ் இணக்கச் சபையொன்றை நியமித்தல் வேண்டும் எனவும்.

1. பிணக்கிற்கான காரணத்தையும் சூழ்நிலைகளையும் விசாரணை செய்வதற்கும்.

2. திறத்தவர்களை ஒன்று சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும்.

3. தொழிற்சங்கம் விண்ணப்பிப்பதன் மீது இணக்கத் தீர்பாளர் ஒருவரை அல்லது இணக்கச் சபையொன்றை நியமிப்பதற்கும்.

4. இரு திறத்தவர்களும் விண்ணப்பிப்பதன் மீது நடுத் தீர்ப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கும்.

அரசியலமைப்பில் அல்லது, வேறு ஏதேனும் சட்டவாக்கத்தில் இவை அறிமுகப் படுத்தப்பட வேண்டும் எனவும் பேச்சு தொசமா உத்தேசித்துள்ளது. ஐக்கிய நாடுகளினாலும், , சதொஸ்தாபனங்களினாலும் நிறுவப்பட்ட சருவதேச தரங்கள் மற்றும் இலங்கையின் மூன்று அரசியலமைப்புக்கள் ஆகியவற்றின் நோக்கிப் தொழிலாளர்கள் உரிமை பிரச்சினைகள் பற்றி விளக்கமொன்றை தந்துதவியது. அடுத்ததாக எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றங்களில் பல தடவை எடுத்துக்காட்டப்பட்ட தீர்ப்பு ஒன்றில் ஐக்கிய நாடுகள் உயர்நீதிமன்ற நீதிபதி பிரான்டிசின் மேற்கோளை எடுத்துப்பார்ப்போம்''.

> ''எமது சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்கள் பகிரங்க கலந்தாராய்வு அரசியல் கடமை என நம்புகின்றனர். எண்ணம், நம்பிக்கை, கற்பனை ஆகியவற்றை ஊக்கங் கெடுப்பது ஆபத்தானதாகும். அந்த அச்சம் அடக்கு முறையை வளர்க்கிறது. அந்த அடக்குமுறை வெறுப் புணர்ச்சியை வளர்க்கிறது. அந்த வெறுப்புணர்ச்சி ஸ்திரமான அரசாங்கத்தை நிலைகுலையச் செய்கிறது. கருதப்பட்ட மனக்குறைகளையும் உத்தேச் பரிகாரங் களையும் சுதந்திரமாகக் கலந்தாராய்வதற்கான வாய்ப்பே பாதுகாப்பான வழிமுறையாகும். கெடுதலான ஆலோ சனைகளுக்கு பொருத்தமான பரிகாரமே சிறந்தவழியா கும்.

முடிபுக் கருத்துறை

இலங்கை சுதந்திர ஜனநாயக நாடொன்றாக வந்தது முதல் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் சோஷலிச முறைச் சமுதாயத்தையும், நலன்புரி அரசையும் ஏற்றங்கீகரித்துள்ளன. அரசு மக்களின் குறித்த சில அடிப்படைத் தேவைகளை ஏற்பாடு செய்வதில் குறியிடத்தக்க பங்கு வகிக்கிறது. குறிப்பாக ஆதரவுக்கும், சேவைகளுக்குமான பகிரங்க நடவடிக்கைகளை ஏற்பாடு செய்கிறது. இவற்றுள் சில ஆசியாவில் தனித்துவம் பெற்றனவாகும்.

வாங்கத் தக்க மட்டத்தில் உணவுப் பொருட்கள் இருந்த நிலையிலான கட்டுப்பாட்டு பொருளாதாரம் 1979 ஆம் ஆண்டில் சந்தைப்பொருளாதாரமாக மாறியது. பொருளா தாரத்தில் ஏற்பட்ட இந்த அடிப்படை மாற்றமும், எல்லா மானியங்களும் குறைக்கப்பட்டமையும் அனைத்துத் தொகுதி யையும் சேர்ந்த தொழிலாளர்களிடையே ஆழ்ந்த பரவலான திருப்தியீனத்தை உருவாக்கியது. காரணம் அவர்களது சம்பளங் களும், படிகளும் போதாமையாகும். சம்பள அதிகரிப்புக்கள் ஒழுங்கற்ற முறையில் பயனுறுத்தப்பட்டன. அவை பொருளா தார முறைமையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக உருவாகிய பணவீக்கத் தாக்கத்தைக் கவனத்திற் கெடுக்கத் தவறிவிட்டன. அதன் விளைவாக அனேகமான குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் ஊழியர்கள் கடினமாக வாழ்க்கை நிலைமைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

திட்டவட்டமான வாழ்க்கைச் செலவுச் சுட்டிகள் இருக்கவில்லை. நிமித்த சம்பள அதிகரிப்புக்கள் அதிகரித்து வரும் வாழ்க்கை செலவுகளைத் தாக்குப் படிப்புனவாக இருக்க வில்லை. வாழ்க்கை சக்தி, பயன்பாடுகள், போக்குவரத்து உணவு, வீட்டுவசதி சுகாதார கவனிப்பு ஆகிய அடிப்படைத் தேவைகளில் ஏற்பட்ட வீக்கம் ஏனைய அவசியமற்ற பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஏற்பட்ட வீக்க வீதத்திலும் இரு மடங்காக இருந்தது. இது நாட்டின் தொழிலாள வர்க்கத்தினரிடைய மனவெறுப்பை ஏற்படுத்தியது.

திறந்த பொருளாதாரம் மற்றும் பணவீக்கத்தின் விளைவாக 40,000 பகிரங்கதுறை வேலையாட்கள் வேலைநிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த எண்ணிக்கை இலங்கையின் மொத்த பகிரங்க துறையினரில் 14 சதவீதமாகும். மாதமொன்றுக்கு 300 ரூபா கோரிய அவர்களது கோரிக்கை சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை. வேலை நிறுத்தம் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அரசியல் வாதிகளினால் தூண்டப்பட்ட ஒன்றாகும். என அரசாங்கம் கூறியது அரசாங்கம் அவசரகால ஒழுங்குவிதியை நடைமுறைக்கிட்டு அத்தியாவசியச் சேவைகள் கட்டளையை பிரகடனப்படுத்தியது. 40,000 மேற்பட்ட பகிரங்க துறை வேலையாட்கள் பதவி விலக்கப்பட்டனர்.

வேலை நிறுத்தம் அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்டது. என்னும் பிரச்சினையின் ச்ரிபிழை பற்றி நாம் இங்கு ஆராயவில்லை'' ''ஒன்று சடுவதற்கான சுதந்திரம்'' என 14 (1) (இ) உறுப்புரையில் அடங்கியுள்ள அரசியலமைப்பு உரிமைகளை கருத்திற்கொண்டு எந்தளவில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதைப் பொருட்படுத்தாது கடுமையாகக் கூட்டாகக் தண்டனையளித்ததுபற்றியே ஆராயவேண்டியுள்ளது.

கூட்டுப் பேரம்பேசுதலில் பகிரங்க துறை தொழிற்சங்கங்கள் எழுச்சி பெறுவதற்கு பெறும் தடையாக இருந்திருப்பதும் இருக்கப் போவதும் இறைமைக் கோட்பாடாகும். அரசாங்கத்தை சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க இறைமைக் கோட்பாடு பயன்படுவது போன்று அரசாங்கத்தை அதன் ஊழியர்களிடமிருந்து பாதுகாக்கவும் இறைமைக் கோட்பாடு பயன்படுகிறது. இப்பாதுகாப்பு 4 ஆம் உறுப்புரையிலிருந்து உருவாகின்றது (மக்கள், அரசு, இறைமை,)

(அ) இலங்கையின் பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்றுத் தத்துவம் மக்களினால் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசின் ஜனாதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

சனாதிபதி அரசியலமைப்பிற் 15 (4) ஆம் உறுப்புரையைப் பயன்படுத்தி 14 (1) (இ) உறுப்புரையினால் வெளிப்படுத்தப் பட்டு அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் நடைமுறையும், இன, சமய அல்லது தேசிய பொருளாதார நலன் கருதி சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும். என வெளிப்படுத்தியுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் ஜனாதிபதி, அவசரகால ஒழுங்குவிதி 32 (3) வலுவுக்கிருப்பதற்கு அதிகாரம் கொண்டிருப்பார். அவ்வொழுங்குவிதி கூறுவதாவது. (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். சபையானது எவையேனும் விலக்களிப்புகளின் அல்லது திரிபு படுத்தல்களின் நோக்கெல்லையும் அளவு பற்றி அமைச்சர் ஆகக்கூடிய ஒழுங்கு விதிக்கு அமைவாக தொழில் முயற்சிகளுடன் உடன்படிக்கைகளை செய்து சொள்ளலாம். இந்த ஒழுங்கு விதிகள் 34 அட்டவணைப்படுத்தப்பட்ட தொழிற்சட்டங்களின் நடைமுறையிலிருந்து முழுமையாகவோ பகுதியளவிலோ தொழில் முயற்சியை விலக்கி வைக்கலாம்.

இலங்கையில் உள்ள தொழிலாளர்கள் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவித்து வரும் இரு தொழிற்சட்டங்களாவன கைத்தொழில் பிணக்குகள் சட்டமும், வேலையாட்கள் தொழில் முடிவுறுத்தல் சட்டமும் ஆகும். இந்த இரு சட்டங்களும் தொழில் அந்தஸ்து பற்றி தீர்மானிப்பதுடன் தொழில்தருநர் - ஊழியர் உறவுகளையும் ஒழுங்கமைப்பு உரிமைகளையும் வரையறுத்துப் பாதுகாக்கின்றன. மேலும் தொழிலில் வேலையாட்களின் பாதுகாப்பையும் பாதுகாவலையும் பாதுகாக்கின்றன. ஆயினும் இச்சட்டங்கள் சுதந்திர வர்த்தக வலயத்தின் 122,219 ஊழியர்களுக்கு ஏற்புடையனவாகி இல்லை.

கிராமப்புற எழை மக்களுள் வேலையாட்களாக இருப்போர் 86 சத வீதம் பெண்களாவர். அவர்கள் உற்பத்திசார் வேலையாட்களாவர், 1993 ஆம் ஆண்டின் கடந்த 8 மாதங்களின் போது கட்டுநாயக்கா, பியகம, கொக்கலை ஆகிய இடங்களில் அவர்களின் ஏற்றுமதி சம்பாத்தியங்கள் 24,01 மில்லியன் ரூபாவாக இருந்தது. முதலீட்டுச் சபை இந்த வலயங்களில் அதன் சொந்த சட்ட பொருளாதார நிருவாக முறைமை மூலம் ஆண்டில் தடையை உருவாக்கியுள்ளது. இந்த வேலையாட்கள் தொழிற்சங்கங்களை அமைக்க உரிமை கொண்டிருந்த போதிலும் அவ்வாறு செய்ய முடியாது தடுக்கப்பட்டுள்ளனர். உறுப்புரை 14 இல் வெளிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் இந்த வேலையாட்களுக்குப் பயன்படுமா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

இந்த ஒழுங்கு விதிகளின் கீழ் பதவி விலக்கப்பட்ட 40,000 பகிரங்க துறை வேலையாட்களும் பதிவு செய்யப்பட்டு தொழிற்சங்க ஒழுங்கமைப்புக்களின் உறுப்பினர்களாவர். இந்த வேலையாட்களும் அவர்களது குடும்பத்தினரும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி இந்த நாட்டின் சனநாயகத்தை பாதுகாக்கின்றனர். பதவி விலக்கப்பட்ட வேலையாட்களுள் பலர் ஒவ்வொரு தேர்தலில் வாக்கெடுப்பு நிலையங்களில சேவையாற்றி நாட்டில் தலைவராகவும் தேர்தல் ஆணையாளராலும் அவர்கள் பக்கச் சார்பின்றி நடந்துகொண்ட முறைக்காக பாராட்டப்பட்டவர்களாவர்.

வேலையாட்கள் என்ற வகையில் அவர்கள் எப்பொழுது சனநாயகத்தைப் பாதுகாக்க உதவிய போதிலும், இந்த அவசரகால சட்டம் வேண்டுமென்று, படிப்படியாக ஈவிரக்கமின்றி வேலையாட்களிற் ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தை மறுத்து வருகின்றது. இது தொழிற்சங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் அச்சங்கங்களுக்கு கிடைத்த வரலாற்றில் அச்சங் களுக்கு கிடைத்த பெரும் இழப்பாகும்.

எதிர்காலத்தை முற்கூட்டி அறிவது இலகுவான காரியமல்ல தற்போதைய போக்கு தொடருமாயின் தற்போதைய முறையில் உள்ள தொழிற் சங்கத் தலைர்கள் தமது முறைகளை மாற்றி, சுதந்திரமான சனநாயக தொழிற்சங்க இயக்கம் மூலம் தமது உள்ளார்ந்த உரிமைகளையும் மதிப்புக்களையும் பூரணமாக அனுபவிப்பதை உறுதிப் படுத்துவதற்கு நிரந்தரமான அதிபயனுறு வழிவகைகளை நிறுவ வேண்டியிருக்கும். தொழிற்சங்க உரிமைகள் நியதிச்சட்டப் புத்தகங்களில் மட்டுமே இருந்தால் போதாது. இந்த உரிமைகள் மிக முக்கியமானவை யாகும். முழு வேலையணியினரும் தமது உரிமைகளை நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். இது இலங்கையில் சுதந்திரமான தொழிற்சங்க நிலையை உருவாக்க உதவும். தற்போதைய தொழிற்சங்கத் தலைவர்கள் தமது கடந்த கால கருத்து வேறுபாடுகளை மறந்து செயலாற்றினால் எதிர்காலம் பகற்கனவாக இருக்காது.

## ஒப்புக்கோடல்

இது இலங்கையிலுள்ள தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த வேலையாட்களின் உரிமைகள் பற்றிய முதலாவது கையேடு ஆகும்' அரசியலமைப்பு உரிமைகள் தனித்தனியே ஆராயப்பட்டுள்ளன. இப்புத்தகம் அரசியலமைப்பையோ அரசாங்கத்தையோ பற்றி கண்டனம் தெரிவிக்கத் தூண்டவோ ஊக்கமளிக்கவோ ஊக்குதலளிக்கவோ எவ்வகையிலும் எத்தனிக்கவில்லை.

இம்முக்கிய கருத்திட்டத்திற்கு ஆசிய அமெரிக்க சுதந்திர தொழில் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இயாக ஆ அ அ தொ நிறுவனத்தின் நாட்டுப் பணிப் பாளர் திரு டிமொதி ரயன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் வளமிக்க கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தந்துதவினார். அவர் இந்தப் புத்தகத்தை தயாரிப்பதில் நேரடியாகச் சம்பந்தப்படாவிடினும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் பற்றிய அவரது எண்ணக்கருத்துக்கள் சிந்தனைக்கு மெருகூட்டி இக்கற்கையை சிறப்புறச் செய்தது.

எல். பீ. பத்தேவெல,
ஆராய்ச்சிப் பணிப்பாளர்,
பசேசுதொசமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் இந்த ஒழுங்குவிதி யின் அத்தியாவசியச் சேவைகள் பற்றிய) (2) ஆம் பந்தியில் குறிப்பீடுகள் செய்ய ஏதேனும் செயலைப்புரிகின்றனர். அல்லது புரிவதற்கு உதவுகின்றனர். அல்லது உடந்தையளிக் கின்றனர் என ஜனாதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து அவ கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய ஒழுங்கமைப்பு தடை விதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பென வெளிப் படுத்துவாம். மேலும் 32 (4) கூறுவதாவது ஒழுங்கமைப் பொன்று மூன்றாம் பந்தியில் கீழ் ஆக்கப்படும் கட்டளை மூலம் தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றாக வெளிப் படுத்தப்படுமிலித்து.

(அ) அத்தகய கட்டளைத் தேதியன்று அல்லது அதன் பின் அத்தகய ஒழுங்கமைப்பின் உறுப்பினராக இருக்கும் ஒவ் வோர் ஆளும் -

1. அத்தகய ஆள், அரசாங்கத்தில் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் பதவியை வசிப்பவராக இருப்பின், அத்தகய கட்டளைத் தேதி யிலிருந்து எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகய பத வியை மூடிவுறுத்தியுள்ளாரென அல்லது வறிதாக்கி யுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

2. மேலும் இவ்வொழுங்கு விதிகளின் கீழான தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இந்த அவசர கால விதியில் மூன்று வேறுபட்ட ஆனால் தொடர்புடைய பிரச்சினைகள் சம்பந்தப்பட்டுள்ளன. ஒன்று வேலையாட்கள் ஒழுங்கமைப்பதற்கான உரிமையைக் கொண் டுள்ளனரா என்பதாகும். இரண்டாவது அவர்களது தொழிற் சங்கங்கள் பேரம் பேசுவதற்கான உரிமையைக் கொண் டிருந்தனவா என்பதாகும். மூன்றாவது அவர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ளலாமா என்பதாகும். வேலை நிறுத்தம் சம்பந்தமாகவும் உரிமைகளைப் பற்றி பேச்சுவார்த்தை நாடுவ தும் சம்பந்தமாகவும் இறைமைக் கோட்பாடு கடுமையாக வலி யுறுத்தப்பட்டதை நாம் கண்டோம்.

1990 நவம்பர் மாதம் அமைக்கப்பட்ட தொழிற்சங்கத்தை ஆதரித்து 1991. 02. 2 அன்று வேலை நிறுத்தம் செய்த 336 ஆடைத் தயாரிப்பு வேலையாட்களின் பதவி நீக்கத்தை நியா யப்படுத்துவதற்கு, சுதந்திர வர்த்தக வலயத்தின் சிம்கா ஆடைத்தயாரிப்பு நிறவனத்தின் முகாமை இதே அவசர கால ஒழுங்கு விதியைப் பயன்படுத்தியிருந்தது,

சுதந்திர யர்த்தக வலயம் தற்போது இலங்கை முதலீட் டுச் சபையின் (மு. ச) கீழ் இடம்பெறுகிறது. இச்சபை இடப் பரப்பு தொழில் முயற்சிகள் மீதும் அதிகார இடப்பரப்பிற்கு வெளியே உரிமை பெற்ற தொழில் முயற்சிகள் மீதும் நியா யாதிக்கம் கொண்டுள்ளது. இவை நாட்டின் எப்பகுதியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org